அரிய வேதம்!
அறிய வேண்டிய வேதம்!!

எஸ். தாயப்பன்



பரிசுத்த வேதாகமத்திற்கு ஈடு இணை எதுவுமே கிடையாது
என நிருபிக்கும் நூல்

அரிய வேதம்! அறிய வேண்டிய வேதம்!!

மற்றும் வேதம் காட்டும் அறிவியல் உண்மைகள்!!!

(பரிசுத்த வேதாகமத்திற்கு ஈடு இணை எதுவுமே கிடையாது என நிரூபிக்கும் நூல்)

எஸ். தாயப்பன்

நன்கொடை ரூ.10/-

அரிய வேதம் அறிய வேண்டிய வேதம்

முதற் பதிப்பு – மார்ச் 2011 – 10,000 பிரதிகள்

ஆசிரியரின் பிற நூல்கள் :

என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (தமிழ்)– 2,55,000 பிரதிகள்

My Cry & Joyful New life (English)- 35,000 பிரதிகள்

என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (கன்னடம்)– 20,000 பிரதிகள்

என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (மலையாளம்)– 20,000 பிரதிகள்

என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (தெலுங்கு)– 5,000 பிரதிகள்

சித்தர்கள் கண்ட மெய்ப் பொருள் (தமிழ்) – 85,000 பிரதிகள்

பாவத்தின் சம்பளம் நரகம் – 80,000 பிரதிகள்

VCD– எனது சாட்சியும் செய்தியும் – 2,20,000 சீடிக்கள்

VCD– எழுந்து கட்டுவோம் – 15,000 சீடிக்கள்

இயேசு கிறிஸ்து உன்னோடு பேசுகிறார் – 40,000 பிரதிகள்

இந்தியாவுக்கு இயேசு கிறிஸ்து தேவை ஏன்? – 40,000 பிரதிகள்

கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்குப் பதில் – 20,000 பிரதிகள்

சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே – 20.000 பிரதிகள்

அற்புத சுகமளிக்கும் வைத்தீஸ்வரர் இயேசு ! (தமிழ்) – 5.000 பிரதிகள்

தெய்வீக சுகம் உண்டா? எபி. சுந்தர்ராஜ் - 5000 பிரதிகள்.

இந்த நூல்கள், மற்றும் VCD கிடைக்கும் முகவரி :

எஸ். தாயப்பன்
12, ஜி.டி.நாயுடு தெரு,
பாலாஜி அவென்யூ – 1
சேலையூர் PO, சென்னை – 600 073
தொலைபேசி : 044–22234526 **e-mail : sakthiprabha@yahoo.com**

நூலை அனுப்ப சில விதிகள்:

ஒவ்வொரு நூலுக்கும் **VCD**க்கும் நன்கொடை ரூ.10 + தபால் செலவு ரூ.1/–.

MO, DD அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை **MO** பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் தெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள்.உங்கள் டெலிபோன், செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். **செக் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. MO, DD** பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

VCD அனுப்ப தபால் செலவு மட்டும் : –

1 முதல் 15 **VCD** அனுப்ப ரூ.20/–
16 முதல் 25 வரை **VCD** அனுப்ப ரூ.35/–
100 VCD க்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் **KPN Parcel Service** மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

நேரில் வர:

நேரில் நூல்களை பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் கிழக்கு தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜ் பஸ் ஸ்டாப்பிலிருந்து வேளாச்சேரி மார்க்கமாக கிளம்பும் அனைத்து M.சீரிஸ் மற்றும் வெள்ளைபோர்டு பஸ்களில் ஏறி கேம்ப் ரோடுக்கு அடுத்த பஸ் ஸ்டாப்பான மஹாலட்சுமி நகரில் இறங்கவும். இடது புறம் உள்ள சிட்லபாக்கம் மெயின் ரோட்டில் 1/2 கிலோ மீட்டர் உள்ளே வரவும். வலது புறம் K.K. மெடிக்கல் ஷாப்பை அடுத்துள்ள வலது புற ஜி.டி.நாயுடு தெருவில், இடது புறத்தில் இரண்டாவது வீடு.

ஒரு வேண்டுகோள்

உங்களுக்கு என்ன புத்தகம் எவ்வளவு வேண்டும் என MO படிவத்தில் அல்லது EMOவில் அல்லது கடிதத்தில் எழுதாத பட்சத்தில் மற்ற எல்லா புத்தகங்களையும் நீங்கள் அனுப்பிய MOக்கு தகுந்தாற்போல் அனுப்ப வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்படுகிறது. இவைகளை தவிர்க்க உங்களுக்கு என்ன புத்தகம் தேவை என்று தெளிவாக எழுதி அனுப்புங்கள். உங்கள் டெலிபோன்/ செல் நம்பர்களையும் தவறாமல் எழுதி அனுப்புங்கள். தேவை ஏற்படின் உங்களை தொடர்பு கொள்ள முடியும்.

என்னுரை

பரிசுத்த வேதாகமத்தையும், அதை வைத்து எழுதப்பட்ட பல நூல்களையும் நான் படிக்கும் வரை எனக்கு அதன் மகத்துவம் தெரியவில்லை. தெரிந்த பிறகோ இதுபோன்ற ஒரு நூல் உலகில் இதுவரை வெளிவந்தது கிடையாது என்று ஆணித்தரமாக பெரிய பெரிய ஞானிகள், மேதைகள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், ஜனாதிபதிகள், தேசத்தலைவர்கள் எல்லாம் கூறுகின்றார்கள் என்றால் அதற்கு காரணங்களும், ஆதாரங்களும் இல்லாமல் இருக்க முடியாதே.

"கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது" என்று சங்கீதம் 119:89 கூறுகிறது.

தேவனும் அவருடைய வசனமும் ஒன்றே. தேவனுடைய சித்தமே தேவனுடைய வசனம். ஆகவே தான் தேவனுடைய திருப்பெயர்களுள் ஒன்று *"தேவனுடைய வார்த்தை"* என்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது (வெளி.19:13). தேவனுடைய வசனம் ஒரு விதையைப் போன்று உள்ளது (லூக்கா 8:11). அந்த விதை, ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையைக் கொண்ட நமது நல்ல இதயத்தில் விதைக்கப்படும் பொழுது மிகுந்த பலனைக் கொடுக்க வல்லது. எஸ்றாவைப் போல் நாம் நம் இதயத்தைப் பக்குவப்படுத்த வேண்டும். *"கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதன்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும், நீதி நியாயங்களையும் உபதேசிக்கவும் எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்"* (எஸ்றா 7:10).

மோசே இஸ்ரவேல் மக்களை நாற்பது ஆண்டுகள் நடத்திய பின்பு அப்பொறுப்பு யோசுவாவின் தோள்களுக்கு மாற்றப்பட்டது. புதிய தலைவராகப் பொறுப்பேற்க இருக்கும் யோசுவாவிற்கு தேவன் *"இந்த நியாயப் பிரமாணப் புத்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக, இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமா யிருக்கும்படி இரவும், பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக. அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய்.*

அப்பொழுது புத்திமானாய் நடந்து கொள்வாய்” (யோசுவா 1:8) என்றார்.

யோசுவாவிற்கு மோசேயின் ஐந்து ஆகமங்களே இருந்தன. நமக்கோ 66 புத்தகங்கள் இருக்கின்றன. 5 புத்தகங்களைக் கொண்டே யோசுவா தன் வழியை வாய்க்கச் செய்யக்கூடுமானால், புத்திமானாய் நடந்து கொள்ளக்கூடுமானால், 66 புத்தகங்களையுடைய நாம் எவ்வளவோ பெரிய காரியங்களைச் சாதிக்க முடியுமே. யோசித்துப் பாருங்கள்.

வாழ்க்கையில் நீதியோடு, நேர்மையோடு, உண்மையோடு, உத்தமத்தோடு, உயர்ந்த பண்புகளோடு, சந்தோஷத்தோடு, சமாதானத்தோடு வாழ விரும்புகிறவர்கள் அனைவருமே ஜாதி, மத பேதமில்லாமல் பரிசுத்த வேதாகமத்தை கண்டிப்பாக படிக்க வேண்டும். வாழ்க்கையில் அதைக் கடைபிடிக்க வேண்டும். பைபிள் கிறிஸ்தவர்களுக்கு மாத்திரம் அல்ல. இந்த வையகத்திலுள்ள அனைவருக்காகவுமே இறைவனே கொடுத்த வார்த்தைகளை உள்ளடக்கிய வேதமே பரிசுத்த வேதாகமம். இதை கிறிஸ்துவை அறியாதவர்களுக்கும் புரிய வைக்கணுமேங்கிற ஏக்கம் என் உள்ளத்தில் இருந்து கொண்டே இருந்தது.

இருதயத்தின் உள்ளந்திரியங்களை ஆராய்ந்து அறிகிற இயேசு கிறிஸ்து என் ஏக்கத்தை தீர்க்கும்படி நான் பெரிதும் மதிக்கும் "வேத பண்டிதர், நடமாடும் வேதாகமம்" அங்கிள் விக்டர் சுவாமிதாஸ் அவர்களின் மூலமாக டாக்டர் எஸ். ஜஸ்டின் பிரபாகரன் எழுதி 1989-ல் வெளியிட்டு இருந்த, "வேதம், அரிய வேதம்" என்ற 26 பக்கங்கள் கொண்ட ஒரு ஜெராக்ஸ் பிரதியை எனக்கு கிடைக்கும்படி செய்தார். அதை படித்துப் பார்த்தேன். என் மூச்சே நின்றுவிடும் அளவுக்கு அநேக ஆதாரங்கள், கருத்துக்களோடு அந்த சிறிய நூல் பிரதி இருந்தது.

ஆரம்ப காலத்தில் வேதம் புத்தகச் சுருளாக இருந்தது. பின்பு சுமார் கி.பி.300-ல் அது புத்தக வடிவில் பக்கம் பக்கமாகத் தொகுக்கப்பட்டது. இதனால் ஒரு குறிப்பிட்ட பகுதியினை

எழுத்தில் எடுக்க வாய்ப்பு கிடைத்தது. இது கோடக்ஸ் என்று அழைக்கப்பட்டது. இந்த கோடக்ஸ் பெரிய எழுத்துக்களால் எழுதப்பட்டது. இவ்வெழுத்துக்கள் அன்சியல்ஸ் (Uncials) என்று அழைக்கப்பட்டன. இவைகள் உருவில் பெரிய எழுத்துக்களாக இருந்தபடியினால் அதிக இடத்தை அடைந்தன.

பின்பு ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிரேக்க மொழியில் மினஸ் கியூல் அல்லது கர்சிவ் (Minuscule or Cursive) என்னும் சிறிய உருவத்திலான கூட்டெழுத்துக்கள் பழக்கத்திற்கு வந்தன. கி.பி.1228-ல் ஸ்டீபன் லாங்டன் வேதாகமத்தை அதிகாரங்களாகப் பிரித்தார். கி.பி.1551-ல் இராபர்ட் ஸ்டீவன்ஸ் என்பவர் புதிய ஏற்பாட்டை வசனங்களாகப் பிரித்தார்.

பரிசுத்த வேதாகமம் என்ற இந்த மாபெரும் பொக்கிஷத்தை தேவன் தம்மை வெளிப்படுத்தும்படிக்கு மனிதனுடைய கரங்களில் கொடுத்திருக்கிறார். பரிசுத்த வேதாகமம் கர்த்தருடைய வார்த்தைகளை உள்ளடக்கியதா? அது தனித்தன்மை வாய்ந்த ஒரு புத்தகமா? பரிசுத்த வேதாகமத்தைக் குறித்து அறிஞர்கள் பலரும் உரைத்த கருத்துக்கள் என்ன என்ற கேள்விகளுக்குப் பதிலாக இந்நூல் வெளி வருகிறது. வாசியுங்கள். உங்கள் நண்பர்களுக்கும் இந்நூலை அறிமுகம் செய்யுங்கள். வாங்கி வழங்குங்கள்.

இறைவனுடைய வார்த்தைகளை பற்றிப் பிடித்துக்கொண்டு நீங்களும் மோட்ச பிரஜைகளாக மாறுங்கள். மற்றவர்களையும் அதற்கு ஆயத்தப்படுத்துங்கள்.

"மனம் திருந்துகின்ற ஒரே ஒரு பாவியின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்குமே".

சென்னை-73 உங்கள் அன்பு சகோதரன்,
10.07.2011 எஸ். தாயப்பன்

EBE SUNDER RAJ
Founder, Christian Institute of Management
Former General Secretary, India Missions Association
Former Field Director, Friends Missionary Prayer Band

1405, Fourth Street, Golden Colony, Anna Nagar West Extn., Chennai - 600 050.
E-mail : ebe@cimindia.in, Web : www.cimindia.in, www.ebesunderraj.in
Phone : 044 - 2625 1530 / 31 / 32 / 33 (O)

மதிப்புரை

சகோதரன் தாயப்பன் தனது புத்தகப் பணியினால் தமிழகம் முழுவதும் இன்று அறிமுகம் ஆகியிருக்கிறார். பத்தாண்டுகளுக்கு முன் கேள்விப்பட்டிராத இவர், இன்று தமிழகத்திலேயே மிக அதிக புத்தக விநியோகம் செய்து சாதனை படைத்துவிட்டார். இது ஆண்டவரின் அருளாலே அன்றி வேறல்ல.

எழுத்தாளர்கள் பொதுவாக புத்தக விநியோகம் செய்ய இயலாதவர்கள். விநியோகஸ்தர் எழுத இயலாதவர்கள். இவை இரண்டையும் சிறப்பாக, வெகு விரைவாகச் செய்பவர் சகோதரன் தாயப்பன்.

ஆழ்ந்த பல கருத்துக்கள், அனுபவங்கள் உள்ள பக்திமான்கள், தலைவர்கள் நம் நாட்டிலே பலருண்டு. ஆனால் அவர்களின் எழுத்து சில நூறு அல்லது சில ஆயிரம் பேருக்கு மட்டுமே தெரியும். அவற்றை தொகுத்து, விரிவாக்கி, பல இலட்சம் மக்களுக்கு கொடுப்பவர் தாயப்பன்.

பணம் சம்பாதிக்கும் நோக்கை அறவே ஒதுக்கி, அச்சுச்செலவான பத்து ரூபாய்க்கே எல்லாப் புத்தகங்களையும் விநியோகித்து அரும்பணி செய்து வருகிறார்.

அறிவில் ஆழமும், அகலமும் கொண்ட டாக்டர் ஜஸ்டின் பிரபாகர் எழுதிய மிக அரிய சிறு புத்தகத்தை விரிவாக்கி, "அரிய வேதம், அறிய வேண்டிய வேதம்" என்று விளக்கி, நூலாக வெளியிட்டிருப்பது அன்னார் பெயருக்கு செய்த பெரிய மரியாதையாகும்.

"யாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்" என்ற சான்றோர் வாக்குப்படி தன் மகனுக்கு ஆண்டவர் கொடுத்த அற்புத சுகம், உள்ளத்திலும், இல்லத்திலும் ஆண்டவர் கொடுத்த வெளிச்சம் இவற்றைப் பறைசாற்ற அவர் கொண்டுள்ள தீவிர பக்தி எந்த

கிறிஸ்தவனையும் மலைக்கச் செய்யும்.

கிறிஸ்தவர்கள் அல்லாத இனத்தாரும் பரிசுத்த வேதாகமத்தின் மகத்துவத்தை அறிந்து, விரும்பிப் படிக்க இந்த நூல் கண்டிப்பாக உதவும் என்பதில் சந்தேகமேயில்லை.

தன்னுயிர் கொடுத்து மண்ணுயிர் மீட்கும் இயேசுநாதர், சகோதரன் தாயப்பனுக்கும், அவரது அன்பு மகன் கார்த்திக்கிற்கும் அளவில்லா அருள் செய்ய வேண்டுகிறேன். இன்னும் இதுபோன்ற பல நல்ல புத்தகங்களை எழுதி வெளியிட கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பாராக.

நாள் : 30.08.2011

இப்படிக்கு,

எபி.சுந்தர் ராஜ்

WHAT DOES THE BIBLE SAY?

TRANS-DENOMINATIONAL

Dr. David Paul
Founder/President

முகவுரை

27th JULY 2011

இவ்வுலகில் பல கோடி நூல்கள் உள்ளன. அவைகளில் ஒன்றே ஒன்றைத் தவிர மற்றத்தனையும் மனிதனால் எழுதப்பட்டவைகள். ஆனால் நாம் யாவரும் ஆராதிக்கும் ஆண்டவரே எழுதிய புத்தகம் ஒன்றே ஒன்று. அது தான் **சத்திய வேதம்.** இப்புத்தகத்தில் எழுதப்பட்டவை அத்தனையும் நூற்றுக்கு நூறு உண்மை. வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் அவருடைய வசனம், அந்த வசனத்தில் ஒரு அணுகூட மாறாது என்று நம்முடைய ஆண்டவர் சொல்லியிருக்கிறார்.

நம் கிறிஸ்தவ வாழ்க்கையின் அஸ்திபாரமே தேவ வசனம்தான். ஆனபடியால், நம் மீட்பரும் ஆண்டவருமாகிய இயேசு சொன்னார், "**நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலைமேல் தன் வீட்டைக் கட்டிய புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்**" (மத். 7:24). "**உம் வசனம்** (யாரோ ஒரு தீர்க்கதரிசி அல்ல) **என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது**" என்று சங்கீதம் 119:105-ல் எழுதப்பட்டிருக்கிறது. விசுவாசிகளாய் இருக்கிற நாம் மனிதனால் கண்டு பிடிக்கப்பட்ட பாரம்பரிய உபதேசங்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் நம்மை ஆட்படுத்திக் கொள்ளாமல், **சத்திய வேதம்** என்ன சொல்லுகிறதோ (அது என் பார்வைக்கு சரியாக பட்டாலும், படாவிட்டாலும்), அதை மட்டுமே நான் செய்வேன் என்று சொல்லி நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேறிச் செல்ல வேண்டும். **சத்திய வேதம்** காட்டும் பாதையில், தடம் புரளாமல் இறுதி மூச்சு இருக்கும் வரை அல்லது மத்திய ஆகாயத்தில் அவரை முகமுகமாய் சந்திக்கும் வரையிலும் தொடர்ந்து செல்லுவேன் என்பதே ஒவ்வொரு விசுவாசியின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

அருமை சகோதரர் **தாயப்பன்** அவர்கள் பல அருமையான ஆவிக்குரிய நூல்களை எழுதியிருந்தாலும், "**அரிய வேதம்! அறிய வேண்டிய வேதம்!!**" என்ற நூலை எழுதி, வேதம் காட்டும் பல அறிவியல் உண்மைகளை யாரும் மறுக்க முடியாத முறையில், அதே நேரம் அதை எவரும் இலகுவாக புரிந்துகொள்ளும் வகையில் அவருக்கே உரிய சிறப்புமிக்க நடையில் எழுதியுள்ளார்.

பரிசுத்த வேதத்தாகமத்திலுள்ள சத்தியங்களை சீறிப் பாய்ந்து எதிர்க்க வரும் சத்துருக்களையும் சிந்திக்கவைக்கும் அத்தியாயங்களை சகோதரர் **தாயப்பன்** இப்புத்தகத்தில் அடுக்கடுக்காய் கொடுத்துள்ளார். இந்நூல், எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் அவைகள் அத்தனையையும் வேத வசனங்களைக் கொண்டே சுக்கு நூறாக உடைத்து, நம்முடைய **பரிசுத்த வேதாகமம்** ஓர் ஈடு இணையற்ற புத்தகம் என்ற அசைக்க முடியாத சத்தியத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்து இயம்புகிறது.

நாம் யாவரும் இதைக் கவனத்துடன் படித்து பயன் பெறுவோமாக! நம் ஆண்டவரின் திரு வருகை மட்டும் **ஆசிரியர் தாயப்பனின்** இறைப்பணி தொடர்ந்து ஓங்கி வளரவேண்டுமென்பதே என்னுடைய ஜெபமும் விருப்பமுமாகும்.

Dr. டேவிட் பால்

#147/999, 6th Avenue, Anna Nagar, Chennai - 600 040, Tamil Nadu, INDIA.
Post Box No. 3454, Anna Nagar West, Chennai - 600 040, Tamil Nadu, INDIA.
Phone: +91(0)44-2616 1878, Mobile: +91(0)9941 22 03 00 Fax: 91(0)44-43538054, E-Mail: fgsfi@yahoo.com

பொருளடக்கம்

இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆசிரியரால் எழுதப்பட்ட வேதம் 15
காலத்தை கடந்த வேதம் 16
நூல் நிலையமாகும் வேதம் 17
கண்டங்களை கடந்த வேதம் 17
கருத்து வேறுபாடில்லாத வேதம் 18
அதிகமாக விற்பனையாகும் வேதம் 18
உலகின் முதல் புத்தகமாகிய வேதம் 19
புழக்கத்தில் அதிகமாக இருக்கும் வேதம் 20
மொழி பெயர்ப்பில் முன்னணியில் நிற்கும் வேதம் 20
சார்ந்து எழுதப்படும் புத்தகங்களை அதிகம் பெற்ற வேதம் 20
கையெழுத்துப் பிரதிகள் அதிகம் பெற்ற வேதம் 21
ஆதாரப்பூர்வமான வேதம் 21
பலமுறை மொழி பெயர்க்கப்பட்ட வேதம் 22
ஒரு பதிப்பில் அதிக பிரதிகள் வெளியாகும் வேதம் 23
பதிப்பில் என்றும் இருக்கும் வேதம் 23
காலத்தை வென்ற வேதம் 23
தடைகளை கடந்து செல்லும் வேதம் 24
எல்லா வயதினரும் ஏற்கும் வேதம் 24
இதயத்திற்கும், சிந்தனைக்கும் பேசும் வே'தம் 25
மொழி பெயர்ப்பால் பாதிக்கப்படாத வேதம் 25
எதிர்ப்புகளை எதிர்நீச்சல் போட்டு வென்ற வேதம் 26
அறிஞர்களுக்கு சவால் விடும் வேதம் 28
மறக்க முடியாத வேதம் 28
வான்வெளியில் வேதம் 29
தந்தியில் வேதம் 29
வானொலியில் வேதம் 30
அறிஞர்கள் விரும்பும் வேதம் 30
சரித்திரப்பூர்வமான வேதம் 31
இலக்கியத்தில் வேதம் 32
சட்ட உலகில் வேதம் 32
அரசியலில் வேதம் 32
அற்புதமாய் ஆரம்பிக்கும் வேதம் 33
புனிதமாய் பாதுகாக்கப்பட்ட வேதம் 34
புனிதமாய் பாதுகாக்கப்பட்ட வேதம் 34
பதிப்பகங்களைப் பெற்ற வேதம் 34
இல்லங்களில் வேதம் 34
ஆராயப்படாத வேதம் 35
விலையேறப்பெற்ற வேதம் 35
இதயங்களை மாற்றும் வேதம் 35

புதைபொருள் ஆராய்ச்சியும் புறக்கணிக்காத வேதம் 38
தீர்க்கமான வேதம் 39
முதல் மனிதன் தோன்றியது எங்கே? வரலாற்றை திருத்தும் புதிய முடிவு 40
அந்தரங்கத்தில் தொங்கும் பூமி 41
கடவுள் ஒருவரே. அவர் மனிதனால் படைக்கப்படவில்லை 42
ஏலியன்கள் பூமிக்கு வந்தால்... அமெரிக்க விஞ்ஞானிகள் பரபரப்பு 43
விநோத உயிரினங்கள் நம்மைத் தாக்கும் அபாயம் 44
வேதம் காட்டும் அறிவியல் உண்மைகள் 46
அறிவியல் காட்டும் மெய்ப்பொருள் 48
ஞானமுள்ள படைப்பு 51
சந்திர மண்டலத்தில் மனிதன் வாழ முடியுமா? 52
உறுதியான சந்திரன் 53
சந்திரன் காட்டும் காலம் 54
எண்ணற்ற விண்மீன்கள் 55
இசைபாடும் விண்மீன்கள் 56
அந்தரங்கத்தில் பூமி 57
உலகின் மையம் 58
நீண்ட நாளும், வரலாற்றுச் செய்திகளும் 59
நீண்ட நாளும் கம்பியூட்டர் பொறியும் 60
காற்றுக்கு நிறையுண்டு, ஜலத்திற்கும் அளவுண்டு 62
அகிலம் படைத்த அணு 62
பிணி தீர்க்கும் சாக்கடல் 63
வல்லமையான படைப்பு 65
உலகின் பயிர்கள் 66
அறிய முடியாத அதிசயம் 69
விசித்திர உயிரினங்கள் 70
மண்ணின் மைந்தன் மனிதன் 71
கேசேர் பட்டணம் 72
மேய்ச்சல் நிலம் நிகேவ் 72
ஈசாக்கின் தொட்டி 73
நாடு காத்த திருமறை 73
ஆபிரகாம் நட்ட மரம் 73
சோதோம், கொமோரா 74
யோனாவின் வரலாறு 75
மீன் விழுங்கிய யோனா 78
நோவாவின் பேழை 78
நோவாவின் பேழை அளவு 79
மக்கபேயர் யுத்தம் 80
எயிட்ஸ் - கொள்ளை நோய் 81
குடும்பக் கட்டுப்பாடு 83
மனிதனும் ஆவியும் 84

மயக்க மருந்து 85
உயிர்நூல் அறிஞர் பவுல் 86
உயிர் இரத்தத்திலிருக்கிறது 87
பற்களுள்ள இயந்திரம் 87
நிலக்கரியும், யோபுவும் 89
உறைந்த மழையின் பண்டகசாலை 89
ஈயத்தால் ஆன எழுத்துக்கள் 90
சாலொமோன் ராஜாவின் தூண்கள் 91
போலீஸ் நாய் 92
நகர முன்னேற்றம் 92
நகரத்திற்குத் தண்ணீர் 92
ஆலயத்தில் பண்டசாலை 93
வண்ணார்துறை 93
குளிர் வசதி வீடுகள் 93
துணைப்பதிவாளர் அலுவலகம் 93
முடிவு வேண்டுகோள் 94

அரிய வேதம்! அறிய வேண்டிய வேதம்!!

இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆசிரியரால் எழுதப்பட்ட வேதம்

இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆசிரியரைக் கொண்டுள்ள உலகத்தின் ஒரே புத்தகம் பரிசுத்த வேதாகமம் ஆகும். உலகத்தின் நூல்கள் அனைத்தும் மனிதர்களால் எழுதப்பட்டிருக்க, பரிசுத்த வேதாகமம் மாத்திரமே இந்த உலகை உருவாக்கினவரும், இயற்கைக்கு அப்பாற்பட்டவருமான ஆண்டவரை ஆசிரியராகக் கொண்டுள்ள புத்தகமாகும். இரண்டு தீமோத்தேயு மூன்றாம் அதிகாரத்தின் பதினாறாம் வசனத்தில் *"வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது"* என்று சொல்லப்பட்டுள்ளது.

பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தைகளை தன்னகத்தே கொண்டது என்று பரிசுத்த வேதாகமத்தில் மாத்திரம் சுமார் 3800 இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு ஆசிரியரைக் கொண்டுள்ள உலகத்தின் ஒரே புத்தகம் என்ற சவாலை புத்தக உலகுக்கு முன்வைப்பது பரிசுத்த வேதாகமமே. பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகள் தேவ ஆவியானவரின் வார்த்தைகளாயிருக்குமென்றால் உலகத்தின் மற்ற புத்தகங்களைக் காட்டிலும் அது மாறுபட்டதாய், ஒப்பற்றதாய் இருக்க வேண்டும். அது தனித்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும். அப்படியிருக்கின்றதா என்பதைக் காண்போம்.

காலத்தை கடந்த வேதம்

உலகத்திலுள்ள புத்தகங்கள் எல்லாம் ஒரு சில மாதங்களுக்குள் அல்லது ஒரு சில வருடங்களுக்குள்ளே எழுதப்பட்டிருக்கலாம். ஆனால் பரிசுத்த வேதாகமம் மாத்திரமே 1600 ஆண்டு கால இடைவெளியில் தொடர்ச்சியாக எழுதப்பட்ட ஒரு புத்தகமாகும். பரிசுத்த வேதாகமத்தின் முதல் புத்தகமாகிய ஆதியாகமம் எழுதப்பட்டதற்கும், அதன் கடைசி புத்தகமான வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்டதற்கும் இடைப்பட்ட காலம் சுமார் 1600 ஆண்டுகள் ஆகும்.

பரிசுத்த வேதாகமத்தின் முதற்புத்தகமான ஆதியாகமத்திற்கும், இறுதிப் புத்தகமான வெளிப்படுத்தின விசேஷத்திற்கும் இடையே நாற்பது சந்ததிகளின் காலம் உருண்டோடியுள்ளது. பரிசுத்த வேதாகமத்தின் முதல் புத்தகத்திற்கும், கடைசி புத்தகத்திற்கும் இடையே இவ்வளவு பெரிய கால இடைவெளி இருந்தும் வேதத்தின் முதல் புத்தகத்திற்கும், கடைசி புத்தகத்திற்கும் இடையேயுள்ள வார்த்தைகளின் கருத்துக்களில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை. காரணம் என்ன? 1600 வருடங்களுக்கு இடையே 40 சந்ததிகளினூடே எழுதப்பட்ட பரிசுத்த வேதாகமத்தின் ஒரே ஆசிரியர் பரிசுத்த ஆவியானவரே என்பதாலேயே.

உலகத்தில் நாம் காணும் புத்தகங்களில் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட கருத்துக்களுக்கும், சமீபத்தில் எழுதப்பட்ட கருத்துக்களுக்கும் இடையே முரண்பாடுகள் இருப்பது காணக்கூடிய ஒன்றே. ஆனால் பல்வேறு காலத்தில் எழுதப்பட்ட பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகளுக்கிடையே எந்தவித கருத்து வேற்றுமையுமில்லை. காரணம் பரிசுத்த வேதாகமத்தை எழுதியவர் காலத்தைக் கடந்து நிற்கும் தேவனாகிய தூய ஆவியானரே.

இன்று ஒரே காலத்தில், ஒரே தேசத்தில், ஒரே துறையில் உள்ள 10 அறிஞர்களிடம் ஒரு கருத்தைக் கொடுத்து ஒரே மொழியில் புத்தகம் எழுதச் சொன்னால், அது கருத்து வேறுபாடுகளின் ஒரு அவியலாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பரிசுத்த வேதாகமமோ 1600 ஆண்டுகள் இடைவெளி காலத்தில் எழுதப்பட்டிருந்தும் நூற்றுக்கணக்கான கருத்துக்களுக்கிடையே எந்தக் கருத்து வேற்றுமையுமின்றி கருத்து ஒற்றுமையுடனும், கருத்துத் தொடர்ச்சியுடனும் எழுதப்பட்டிருக்கிறது.

நூல் நிலையமாகும் வேதம்

பரிசுத்த வேதாகமம் 66 புத்தகங்களைக் கொண்ட ஒரு நூலாகும். இந்த 66 புத்தகங்களையும் 40-க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதியுள்ளார்கள். பல்வேறு துறைகளில் பணியில் இருந்தவர்களால் பரிசுத்த வேதாகமம் எழுதப்பட்டிருக்கிறது.

பரிசுத்த வேதாகமத்தில் அரசியல்வாதியாகிய மோசேயினுடைய வார்த்தைகள் உண்டு. மாமன்னனாக ஆட்சி செய்த சாலமோனுடைய வார்த்தைகள் உண்டு. யூத ரபியான பவுலினுடைய வார்த்தைகள் உண்டு. இராணுவத்தளபதியாய் இருந்த யோசுவாவின் வார்த்தைகள் உண்டு. பானபாத்திரக்காரனாய் இருந்த நெகேமியாவின் வார்த்தைகள் உண்டு. ஆடுமாடுகளை மேய்த்த ஆமோசினுடைய வார்த்தைகள் உண்டு. மீன்பிடித்த பேதுருவினுடைய வார்த்தைகள் உண்டு. டாக்டரான லூக்காவினுடைய வார்த்தைகளுண்டு. பல்வேறுபட்ட பணியிலிருந்தவர்களால் எழுதப்பட்ட பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகளுக்கு இடையே எந்தவிதமான கருத்து வேற்றுமையுமில்லை.

அரசியல்வாதியின் வார்த்தைகள் எங்கே? மீன்பிடிப்பவனின் வார்த்தைகள் எங்கே? ஆடுமாடுகளை மேய்ப்பவனுடைய வார்த்தைக்கும், மருத்துவருடைய வார்த்தைக்கும் இடையே இணைப்பு, இசைவு இருக்குமா? ஆனால் பரிசுத்த வேதாகமத்தில் அவ்வாறு இணைப்பு, இசைவு உள்ளது. காரணம் என்ன? பரிசுத்த வேதாகமத்தின் ஆசிரியர் ஒருவரே. அவர் பரிசுத்த ஆவியானவரே.

கண்டங்களை கடந்த வேதம்

உலகத்தின் எந்த புத்தகமும் ஒரு குறிப்பிட்ட நகரத்தில் எழுதப்பட்டதாயிருக்கலாம் அல்லது ஒரு குறிப்பிட்ட தேசத்தில் உருவாகியிருக்கலாம். ஆனால் பரிசுத்த வேதாகமமோ உலகத்தின் 3 கண்டங்களிலிருந்தும் எழுதப்பட்டுள்ளது. ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா என்ற மூன்று கண்டங்களிலிருந்து எபிரெய, கிரேக்க, அரமேய மொழிகளில் பரிசுத்த வேதாகமம் எழுதப்பட்டிருக்கிறது.

வெவ்வேறு தேசத்திலிருந்து வெவ்வேறு மொழிகளில் எழுதப்படுகிற புத்தகங்களுக்கிடையே கருத்து வித்தியாசம் இருப்பது எதிர்பார்ப்பதற்குரிய ஒன்றே. ஆனால் 3 கண்டங்களில்

இருந்தும், 3 மொழிகளில் எழுதப்பட்ட பரிசுத்த வேதாகமத்தின் புத்தகங்களுக்கு இடையே கருத்து வேற்றுமையோ, முரண்பாடோ கிடையாது. ஏனென்றால் பரிசுத்த வேதாகமத்தின் ஒரே ஆசிரியர் பரிசுத்த ஆவியானவரே.

கருத்து வேறுபாடில்லாத வேதம்

40-க்கும் மேற்பட்ட ஆசிரியர்களால் எழுதப்பட்ட பரிசுத்த வேதாகமம் பல்வேறு சூழ்நிலைகளிலும் எழுதப்பட்டது. மோசே வனாந்திரத்தில் தனது வார்த்தைகளை எழுதினான். எரேமியா பாழுங்குகையிலிருந்து இதை வரைந்தான். தானியேல் அரண்மனையிலிருந்தும், மலை அடிவாரத்திலிருந்தும் இதை வடித்தான். பவுல் சிறைச்சாலையிலிருந்து தனது நிருபங்களுக்கு வரிவடிவம் கொடுத்தான். யோவான் பத்மு தீவின் சிறையிருப்பிலிருந்து தனது நூலை இயற்றினான். லூக்கா தனது பிரயாணத்தில் தனது வார்த்தைகளை எழுதினான். தாவீது தனது வார்த்தைகளை யுத்த நாட்களில் எழுதினான். சாலமோன் சமாதான காலத்தில் தனது வார்த்தைகளை தொகுத்துரைத்தான்.

பரிசுத்த வேதாகமத்தின் ஆசிரியர்கள் பலர் ஒருவரையொருவர் சந்தித்ததோ, பார்த்ததோகூட கிடையாது. பரிசுத்த வேதாகமத்தின் ஆசிரியர்களில் பலர், ஒருவர் எழுத்தை மற்றவர் வாசித்ததும் கிடையாது. 40-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பல்வேறு துறைகளிலிருந்தும் பல்வேறு சூழ்நிலைகளிலிருந்தும் பல்வேறு இடங்களிலிருந்தும் மூன்று கண்டங்களிலிருந்தும் மூன்று வெவ்வேறு மொழிகளிலே 1600 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் 40 சந்ததிகளின் கால இடைவெளியில் எழுதிய பரிசுத்த வேதாகமத்தின் புத்தகங்களுக்கு இடையே எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது என்றால் அது பரிசுத்த வேதாகமத்தின் தெய்வீகத்தன்மையையே உறுதிப்படுத்துகிறது.

பரிசுத்த வேதாகமத்தின் 66 புத்தகங்களுக்கு இடையே கருத்து வேற்றுமை இல்லாதிருப்பது மாத்திரமல்ல, கருத்து ஒற்றுமை இருப்பதும், கருத்துத் தொடர்ச்சி இருப்பதும், பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகள் அதன் ஒரே ஆசிரியராகிய பரிசுத்த ஆவியானவருடைய வார்த்தைகளே என்பதை நிரூபிக்கின்றன.

அதிகமாக விற்பனையாகும் வேதம்

உலகத்தில் ஒரு புத்தகம் அதிகமாய் விற்பனையாகும் என்றால் அந்த புத்தகத்தின் அட்டையின் மேலே அது "அதிகமாய

விற்பனையாகிற புத்தகம்" (Best seller) என்று குறிப்பிடப்படும். அதற்கு என்ன அர்த்தம் என்றால் அந்த புத்தகம் வெளியான பிறகு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் உலகில் விற்பனையான மொத்த புத்தகங்களில் அதிகமாக விற்பனையானது அப்புத்தகமாகும் என்று அர்த்தமாகும்.

ஆனால் உலகத்திலே புத்தகங்கள் உருவானதிலிருந்து இன்றுவரை அதிகமாக விற்பனையாகி வரும் ஒரு புத்தகம் பரிசுத்த வேதாகமமே. The world's best seller is the Holy Bible. எவ்வாறு இந்த நிச்சயத்தோடு இதைச் சொல்ல முடியும் என்ற கேள்வி ஒரு சிலருக்கு எழலாம். இதற்குப் பதில் என்னவென்றால் உலகத்தில் தோன்றிய முதல் புத்தகமே பரிசுத்த வேதாகமம் தான்.

உலகின் முதல் புத்தகமாகிய வேதம்

புத்தகங்கள் வெளியிடப்படுவதற்கு காரணமாய் இருந்த அச்சுக்கூடததைக் கண்டுபிடிததவர் ஜான் கூடன்பர்க் என்பவராவார். அவருடைய முதல் அச்சகத்திலே அச்சிடப்படடு உலகின் முதல் புத்தகமாக முதலில வெளிவந்தது பரிசுதத வேதாகமமே கூடன்பர்க் என்பவருடைய அச்சுக்கூடத்திலே அசசடிக்கப்பட்ட பரிசுத்த வேதாகமம "இலத்தின வல்கேட்" என்று அழைக்கப்படுகிறது. இதில் 21 பிரதிகளே இன்று உலகிலுள்ளன. இப்பிரதிகள் ஒவ்வொன்றும் 1 இலட்சம் டாலர் விலை மதிக்கப்படுகிறது.

நியூயார்க்கிலுள்ள ஜெனரல் தியாலஜிகல் செமினரியில் இதன் ஒரு பிரதி இன்றும் உள்ளது. உலகின் முதல் புத்தகமாக வெளிவந்த பரிசுத்த வேதாகமமே அன்று முதல் இன்று வரை உலகத்தில் மற்ற எந்த புத்தகத்தைக் காட்டிலும் அதிகமான மக்களால் விரும்பப்படுவதும், வாங்கப்படுவதும், வாசிக்கப்படுவதுமான ஒரே புத்தகமாகும்.

30 வருடங்களுக்கு முன் உலகத்தின் தேவையைச் சந்திக்க பிரிட்டிஷ் வேதாகமச் சங்கம் 3 வினாடிக்கு ஒரு புத்தகம் என்ற கணக்கில் பரிசுத்த வேதாகமத்தை அச்சடித்தது. அதாவது ஒரு நிமிடத்திற்கு 22 பிரதிகள் என்ற கணக்கில், அதாவது ஒரு மணி நேரத்திற்கு 1396 புத்தகங்கள் என்ற வேகத்தில் அதாவது ஒரு நாளைக்கு 32876 பிரதிகள் என்ற வேகத்தில் பரிசுத்த வேதாகமத்தை அச்சடித்து உலகத்தின் தேவையைச் சந்திக்க வேண்டியதாய் இருந்தது.

உலகத்தில் இன்றைய தேவையைச் சந்திக்க இது போன்ற பல

வேதாகமச் சங்கங்கள் உலகம் எங்கும் தோன்றி மக்களின் ஆத்மீக தாகத்தைத் தவிர்க்க இரவும், பகலும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. பரிசுத்த வேதாகமம் மற்ற எந்த புத்தகத்தைக் காட்டிலும் அதிகமாய் விரும்பப்படுவதும், வாசிக்கப்படுவதும், வாங்கப்படுவதுமாய் இருப்பது, பரிசுத்த வேதாகமம் தனித்தன்மை வாய்ந்தது என்பதை நிரூபிக்கிறது. உலகத்தின் புத்தகங்களின் விற்பனையில் முன்னணியில் நிற்பது பரிசுத்த வேதாகமமே.

புழக்கத்தில் அதிகமாக இருக்கும் வேதம்

புத்தக உலகம் உலகத்தில் தோன்றினது முதல் இன்றுவரை உலகத்தில் அதிகமாக விற்பனையாகும் புத்தகம் பரிசுத்த வேதாகமமே என்பதினால் உலகத்திலேயே அதிகமாக தற்போது புழக்கத்தில் இருக்கும் புத்தகம் பரிசுத்த வேதாகமமே. More copies of the Bible are in circulation than any other book in the world.

மொழி பெயர்ப்பில் முன்னணியில் நிற்கும் வேதம்

ஒரு புத்தகம் சிறப்புற்றதாய் இருக்குமென்றால் அது மற்ற மொழிகளிலே மொழி பெயர்க்கப்படும். உலகத்திலேயே அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது பரிசுத்த வேதாகமம் மாத்திரமே. ரீடர்ஸ் டைஜஸ்ட் பத்திரிக்கை சுமார் 17 மொழிகளில் வெளியாகிக் கொண்டிருக்கிறது. மனிதர்கள் இதுவரை சாதித்திராத சாதனைகளின் அட்டவணைகளை வெளியிடுகின்ற கின்னஸ் புத்தகம் (Guines Book of World Records) 23 மொழிகளில் வெளியாகிக் கொண்டிருக்கிறது. காரல் மார்க்ஸின் தத்துவங்கள் 112 மொழிகளில் வெளியாகியுள்ளன.

ஆனால் கடந்த 1984-ம் வருடம் வரை பரிசுத்த வேதாகமத்தின் பகுதிகளோ 1808 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. உலகத்தின் பல புத்தகங்கள் மொழி பெயர்ப்பையே கண்டதில்லை. ஒரு சிலருடைய எழுத்துக்கள் அச்சகத்தைக்கூட எட்டிப் பார்த்ததில்லை. புத்தக உலகில் அதிக மொழி பெயர்ப்புகளைக் கண்டு முதலிடத்தில் இருப்பது பரிசுத்த வேதாகமமே.

சார்ந்து எழுதப்படும் புத்தகங்களை அதிகம் பெற்ற வேதம்

ஒரு புத்தகம் தனிச்சிறப்புடையதாக இருக்குமென்றால் அந்த புத்தகத்தைச் சார்ந்து பல புத்தகங்கள் எழுதப்படும். ஒரு புத்தகத்தைச் சார்ந்து ஆராய்ந்து எழுதப்படுகிற புத்தகங்களின் எண்ணிக்கை அப்புத்தகத்தின் தனிச்சிறப்பை நிரூபிக்கும் ஒரு

சான்று ஆகும். சார்ந்து எழுதப்பட்ட புத்தகங்களை உலகத்திலேயே அதிகமாய் பெற்றிருப்பது பரிசுத்த வேதாகமம் மாத்திரமே.

Bible Dictionery, Bible Concordence, Bible Atlas, Bible Hand Book, Bible Lexicon இவ்வாறு பட்டியலை வளர்த்துக் கொண்டே போகலாம். உலகத்தின் சார்பு நூல்கள் வேதத்திற்கு எழுதப்பட்டதுபோல் வேறு எந்த நூலுக்கும் எழுதப்படவில்லை. இனி எழுதப்படப் போவதும் இல்லை.

கையெழுத்துப் பிரதிகள் அதிகம் பெற்ற வேதம்

ஒரு புத்தகத்திற்கு அதற்கு எத்தனை கையெழுத்துப் பிரதிகள் உள்ளனவோ அதனுடைய எண்ணிக்கையைக் கொண்டே அப்புத்தகத்தின் ஆதாரத்தை ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிடுவர். பரிசுத்த வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டுக்கு கிடைத்திருக்கிற கையெழுத்துப் பிரதிகளின் எண்ணிக்கை மட்டும் 24633 ஆகும்.

உலகத்தின் வேறு எந்த புத்தகத்திற்கும் இத்தனை கையெழுத்துப் பிரதிகள் கிடையாது. பரிசுத்த வேதாகமத்திற்கு அடுத்ததாய் உலகத்தின் புத்தகங்களில் அந்தக் கையெழுத்துப் பிரதிகளை பெற்று இரண்டாவது இடத்தைப் பெறுவது ரோமருடைய "இலியெட்" என்ற காப்பியமாகும். ரோமருடைய "இலியெட்" காப்பியத்திற்கு கிடைத்துள்ள மொத்த கையெழுத்துப் பிரதிகளின் எண்ணிக்கை 643 ஆகும்.

கையெழுத்துப் பிரதிகளை அதிகமாய் பெற்றிருக்கும் புத்தகங்களுள் முதல் இடத்தை வகிக்கின்ற பரிசுத்த வேதாகமத்திற்குக் கிடைத்திருக்கிற கையெழுத்துப் பிரதிகளின் எண்ணிக்கைக்கு இரண்டாவது இடத்தை வகிக்கின்ற ரோமருடைய "இலியெட்" காப்பியத்திற்குக் கிடைத்திருக்கிற கையெழுத்துப் பிரதிகளின் எண்ணிக்கைக்கும் உள்ள வித்தியாசம் பரிசுத்த வேதாகமத்தின் உன்னதத் தன்மையை நிரூபிக்கக் கூடியதாய் இருக்கிறது. கையெழுத்துப் பிரதிகளை அதிகமாய் பெற்றுள்ள புத்தகங்களில் முன்னணியில் நிற்பது பரிசுத்த வேதாகமமே.

ஆதாரப்பூர்வமான வேதம்

ஒரு புத்தகம் எழுதப்பட்டதற்கும், அதனுடைய முதல் பிரதி எடுக்கப்பட்டதற்குமான இடைவெளி காலம் குறுகினதாயிருக்கும் என்றால் அது அப்புத்தகத்தின் ஆதாரபூர்வமான தன்மைக்கு சான்றாக கருதப்படும். ஒரு புத்தகம் எழுதப்பட்டதற்கும், அது

பிரதி எடுக்கப்பட்டதற்கும் இடை வெளிக்காலம் அதிகமாயிருக்குமென்றால் அப்புத்தகத்தின் ஆதாரபூர்வமான தன்மை குறைவானதாய் மதிக்கப்படும்.

ஹெரோடோட்டசின் வார்த்தைகளுக்கும், அவருடைய வார்த்தைகளின் முதல் பிரதிக்கும் இடைப்பட்ட காலம் 1300 வருடங்களாகும். சோபாக்கிளியசின் வார்த்தைகளுக்கும், அவற்றின் முதல் பிரதிக்கும் இடைப்பட்ட காலம் 1400 வருடங்களாகும். பிளேட்டோவினுடைய வார்த்தைகளுக்கும் அவற்றின் முதல் பிரதிக்கும் இடைப்பட்ட காலம் 1200 வருடங்களாகும். அரிஸ்டாட்டிலுனுடைய வார்த்தைகளுக்கும், அவற்றின் முதல் பிரதிக்கும் இடைப்பட்ட காலம் 1400 வருடங்களாகும். டமஸ்தனிஸினுடைய வார்த்தைகளுக்கும், அவ்வார்த்தைகளின் முதல் பிரதிக்கும் இடைப்பட்ட காலம் 1300 வருடங்களாகும்.

ஆனால் பரிசுத்த வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டின் புத்தகங்கள் எழுதப்பட்டதற்கும், அவற்றின் பிரதிகள் எடுக்கப்பட்டதற்கும் இடைப்பட்ட காலம் 250 வருடங்களாகும். பரிசுத்த வேதாகமம் உலகத்தின் பழங்கால நூல்கள் பலவற்றிலும் தனிச்சிறப்பு பெற்றது என்பதை இக்குறிப்பு தெளிவாய் நிரூபிக்கிறது. ஒரு புத்தகம் எழுதப்பட்டதற்கும், அதன் பிரதி எடுக்கப்பட்டதற்குமான இடைவெளி காலத்தை மிகக் குறைவாய் பெற்று முன்னணியில் நிற்பது பரிசுத்த வேதாகமமே.

பலமுறை மொழி பெயர்க்கப்பட்ட வேதம்

உலகிலேயே அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது மாத்திரம் அல்லாமல் ஒரே மொழியில் பலமுறை மொழி பெயர்க்கப்பட்டுள்ளதும் பரிசுத்த வேதாகமம் மாத்திரமே. இந்தச் தனிச்சிறப்பு உலகத்தின் வேறு எந்தப் புத்தகத்திற்கும் கிடையாது. The Holy Bible is the only book that has been translated many a times in one language. தமிழில் 3 முறை பரிசுத்த வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

ஆங்கிலத்தில் கிங் ஜேம்ஸ் வெர்ஷன், அமெரிக்கன் ஸ்டாண்டர்டு வெர்ஷன், ரிவைஸ்ட் வெர்ஷன், ரிவைஸ்ட் ஸ்டாண்டர்டு வெர்ஷன், ரிவைஸடு டின்டேல் மொழி பெயர்ப்பு, வைகிளிஃ மொழி பெயர்ப்பு, லிவ்விங் பைபிள், மொபட் மொழி பெயர்ப்பு என்று பலமுறை வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டபோதும், அது மூல மொழியாகிய எபிரெய, கிரேக்க மொழியிலிருந்தே மொழி பெயர்க்கப்படுகிறது.

காலத்திற்கும், சமுதாயத்திற்கும் ஏற்றவாறு அவ்வப்போது பரிசுத்த வேதாகமம் புதிய நடைமுறையில் ஒரே மொழியில் பலமுறை மொழி பெயர்க்கப்பட்டிருப்பதால் அது புத்தக உலகத்திலே தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது.

ஒரு பதிப்பில் அதிக பிரதிகள் வெளியாகும் வேதம்

பரிசுத்த வேதாகமத்தின் ஒவ்வொரு பதிப்பு வெளிவரும் போதும் அதில் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் அச்சடிக்கப்படுகின்றன. ரிவைஸ்டு ஸ்டாண்டர்டு வெர்ஷனின் ஒரு பதிப்பு மாத்திரம் ஒரு சமயம் 10 லட்சம் பிரதிகள் வெளியாயின. பரிசுத்த வேதாகமத்தைத் தவிர் உலகத்தின் வேறு எந்த புத்தகமும் ஒரே பதிப்பில் 10 இலட்சம் பிரதிகளைக் கண்டது இல்லை.

பதிப்பில் என்றும் இருக்கும் வேதம்

ஒரு புத்தகம் சிறப்பானதாயிருக்குமென்றால், அது மக்களால் தொடர்ந்து விரும்பி வாங்கப்படும் என்றால் அது பதிப்பில் இல்லாமல் போகாது. உலகத்தில் எழுதப்பட்ட எத்தனையோ புத்தகங்கள் விற்பனையாகாமல் தேங்கிப் போயின. பல புத்தகங்கள் வாங்குவோர் இல்லாததினால் மறுபதிப்பைக்கூட கண்டதில்லை.

பரிசுத்த வேதாகமம் பல கோடிக்கணக்கான மக்களால் விரும்பப்படுவதும், வாங்கப்படுவதும், வாசிக்கப்படுவதுமாய் இருப்பதினால் எப்போதுமே அது அச்சில் தொடர்ந்து இருந்து வருகிறது. அச்சடிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. The Holy Bible is the only book that never goes out of print.

காலத்தை வென்ற வேதம்

விஞ்ஞானத்தில், நாகரீகத்தில், கலாச்சாரத்தில், பலருடைய புத்தகங்கள் நாளாவட்டத்தில் உலக சமுதாயத்தினரால் ஏற்றுக் கொள்ள முடியாததாய் ஒதுக்கி வைக்கப்படுகின்றன. கார்ல் மார்க்சின் தத்துவங்கள் பொதுவுடைமைக் கொள்கை நாடுகளிலேயே இன்று மறுக்கப்படுகின்றன. சர் ஐசக் நியூட்டனின் சில விஞ்ஞானக் கருத்துக்களை விஞ்ஞான உலகம் அப்போது ஏற்றுக் கொள்ளவில்லை. உலகத்தில் எழுதப்பட்டு பல அறிஞர்களின் புத்தகங்கள் காலப்போக்கில் மக்களால் மறக்கப்பட்டு செல்லரித்துப் போயின. நூலகங்களில் தூங்கிக் கொண்டிருக்கின்றன. நிராகரிக்கப்பட்டு ஒதுக்கித் தள்ளப்பட்டுப் போயின. ஏற்றுக் கொள்ளப்படாமல் போயின.

பரிசுத்த வேதாகமத்தின் முதல் புத்தகம் எழுதப்பட்டு 3600 ஆண்டுகளாகின்றன. பரிசுத்த வேதாகமத்தின் கடைசிப்புத்தகம் எழுதி முடிக்கப்பட்டு சுமார் 2000 வருடங்களுமாகின்றன. இத்தனை வருடங்கள் கடந்து சென்றும் உலகத்தின் பெரும்பான்மையான மக்களால் விரும்பப்படுவதும், ஏற்றுக் கொள்ளப்படுவதும், பயன்படுத்தப்படுவதும் பரிசுத்த வேதாகமமே. காலத்தைக் கடந்து நிற்பது பரிசுத்த வேதாகமம்.

தடைகளை கடந்து செல்லும் வேதம்

பரிசுத்த வேதாகமம் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், ஐரோப்பாவிலும் எழுதப்பட்டிருந்தாலும், அதை எழுதிய ஆசிரியர்கள் பெரும்பான்மையோர் ஆசிய கண்டத்தைச் சேர்ந்த யூதர்களே. ஒரு தேசத்தினரால் எழுதப்படுகின்ற புத்தகங்கள் மறு நாட்டினரால் அமோகமாய் வரவேற்கப்படுவதில்லை. அங்கீகரிக்கப்படுவதுமில்லை. கீழை நாட்டு அறிஞர்களுடைய கருத்துக்கள் மேல் நாடுகளை எட்டிப் பார்த்திருந்தாலும் அங்கே அவை ஏற்புடையதாயிருப்பதில்லை. முக்கியமாய் ஆசிய நாட்டவர்களுடைய எழுத்துக்கள் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்படுவதுமில்லை. விரும்பப்படுவதுமில்லை.

ஆனால் ஆசிய கண்டத்தினரால் எழுதப்பட்ட பரிசுத்த வேதாகமம் உலகத்தின் எல்லா நாடுகளுக்கும் கடந்து சென்றிருக்கிறது. ஆப்பிரிக்காவின் பழங்குடியினருக்கும் அது ஏற்புடையதாயிருக்கிறது. ஆஸ்திரேலியாவின் காட்டு ஜாதி மக்களுக்கும் அது பயன்படுகிறது. பனிபடர்ந்த பிரதேசத்தின் எஸ்கிமோக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாய் அது இருக்கிறது. அமெரிக்க ஐரோப்பா கண்டங்களின் மக்களின் ஞானத்திற்கும் அது பதில் சொல்லக்கூடியதாயிருக்கிறது. உலகத்தின் தேசங்களையும், கண்டங்களையும், கலாச்சாரங்களையும், மொழித் தடைகளையும் கடந்து செல்வது பரிசுத்த வேதாகமம் ஒன்றே.

எல்லா வயதினரும் ஏற்கும் வேதம்

இலக்கிய புத்தகங்களும், ஆன்மீக புத்தகங்களும் வயது முதிர்ந்தவர்களாலேயே உலகில் பெரிதும் வரவேற்கப்படுகின்றன. சிறு பிள்ளைகள் அவற்றைப் படிப்பதில்லை. வாலிபர்கள் அவற்றைத் தொடுவதில்லை. சிறிய பிள்ளைகளின் புத்தகங்களை வயது முதிர்ந்தவர்களும் வாசிப்பதில்லை.

ஆனால் 2000 வருடங்களுக்கு முன்பு வரிவடிவம் கண்ட பரிசுத்த வேதாகமம் முதியவர்களாலும், வாலிபர்களாலும், சிறுவர்களாலும் விரும்பி வாசிக்கப்படுகிற தனிச்சிறப்பைப் பெற்றுள்ளது. சந்ததிகளின் கட்டுக்கோப்பைக் கடந்து நிற்பது பரிசுத்த வேதாகமம்.

இதயத்திற்கும், சிந்தனைக்கும் பேசும் வேதம்

ஒரு சில எழுத்தாளர்களுடைய புத்தகங்களை ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மாத்திரமே புரிந்து கொள்ள முடியும். ஏற்றுக் கொள்ளவும் முடியும். சிக்மண்ட் ப்ராய்டின் வார்த்தைகளை மனோதத்துவ நிபுணர்கள்தான் புரிந்து கொள்ள முடியும். ஐன்ஸ்டீனுடைய கருத்துக்களை விஞ்ஞானிகள்தான் விளங்கிக் கொள்ள முடியும். சாக்ரடீஸ், பிளேட்டோ, ரூசோ இவர்களுடைய வார்த்தைகளைத் தத்துவ ஞானிகள்தான் வாசிக்க முடியும்.

பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகளோ பாமர மக்களும் படித்தறிந்து புரிந்து கொள்ளக்கூடிய உயிர் ஓட்டமுள்ள வார்த்தைகள். கல்விமான்களும் விரும்புகின்ற, அங்கீகரிக்கின்ற வார்த்தைகள் அதன் வார்த்தைகள். அவை மனிதனுடைய புத்திக்கு மாத்திரமல்ல, அவனுடைய இருதயத்திற்கும் பேசப்பட்ட வார்த்தைகளாகும்.

மொழி பெயர்ப்பால் பாதிக்கப்படாத வேதம்

ஒரு புத்தகம் ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழி பெயர்க்கப்படும்போது மூல மொழியில் உள்ள உணர்வுகள் மொழி பெயர்ப்பில் இருப்பதில்லை. ஆனால் பரிசுத்த வேதாகமமானது அதனுடைய மூல மொழியாகிய எபிரெய, கிரேக்க மொழிகளிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டிருந்தாலும் அது மொழி பெயர்க்கப்பட்டுள்ள 1808 மொழிகளிலும் மூல மொழியில் இருக்கக்கூடிய தனி உணர்வை கொடுக்கக்கூடியதாகவே இருக்கிறது.

எத்தனையோ மொழிகளில் வேதம் மொழி பெயர்க்கப்பட்டிருந்தும் ஒரே மொழியில் பலமுறை பரிசுத்த வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டிருந்தும் அதனுடைய மூல மொழியில் இருக்கக்கூடிய தனிச்சுவையுணர்வு மொழி பெயர்ப்புகளில் சிறிதும் குறையவில்லை. இத்தகுதியினை Translatableness என்று கூறுவர். இவ்வாறான இயற்கைக்கு அப்பாற்பட்ட இத்தனித்தன்மை உலகத்தின் வேறு எந்த நூலுக்கும் கிடையாது. உலகத்தின் தற்போதைய காலத்தில் பின்பற்றப்பட்டு வருகிற

மொழி நடையில் எழுதப்படாத புத்தகங்கள் பிரபலமாவதில்லை. காலத்திற்கேற்ப மொழி நடையை பெற்றிராத புத்தகங்கள் பிரபலமாவதில்லை. காலத்திற்கேற்ப மொழி நடைமுறையை பெற்றிராத புத்தகங்களை பலர் விரும்பி வாசிப்பதில்லை.

பரிசுத்த வேதாகமத்தின் மிகவும் அதிகமாக விற்பனையாகக்கூடிய மொழி பெயர்ப்பு கிங் ஜேம்ஸ் வெர்ஷன் என்பதாகும். இந்த கிங் ஜேம்ஸ் வெர்ஷன் மொழி பெயர்ப்பு 400 வருடங்களுக்கு முற்பட்ட ஆங்கில மொழி நடையைக் கொண்டிருந்தும், அது இந்த 20-ம் நூற்றாண்டின் நவீன சமுதாயத்தினராலும் விரும்பப்படுவதும், வாசிக்கப்படுவதும், பிரசங்கிக்கப்படுவதும், உபயோகப்படுத்தப்படுவதுமாய் இருக்கிறது என்றால் அது பரிசுத்த வேதாகமத்தின் தனித்தன்மையைத்தான் உணர்த்துகிறது.

எதிர்ப்புகளை எதிர்நீச்சல் போட்டு வென்ற வேதம்

பரிசுத்த வேதாகமம் எதிர்ப்பையே சந்திக்காதினால் தான் இத்தனை தனிச்சிறப்புகளை பெற்றுள்ளது என்று ஒரு வேளை சிலர் நினைக்கலாம். பரிசுத்த வேதாகமத்திற்கு பலமுறை சாவு மணி அடிக்கப்பட்டது. சவ ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டது. பிரேதக்குழியும் வெட்டப்பட்டது. ஆனால் அடக்க ஆராதனை மாத்திரம் நடைபெறவில்லை. அன்றைய ரோம சாம்ராஜ்யத்தின் எதிர்ப்பிலிருந்து இன்றைய பொதுவுடைமைக் கொள்கையினரின் எதிர்ப்புவரை அனைத்து எதிர்ப்புகளையும் வேதம் கண்டும், அது அழியாமல் எதிர் நீச்சல் போட்டு நிற்கிறது.

கி.பி. 30-ம் ஆண்டில் டயோகிளிஷியன் என்ற ரோமப் பேரரசன் பரிசுத்த வேதாகம் எங்கு கண்டுபிடிக்கப்பட்டாலும் அது கொளுத்தப்பட வேண்டுமென்ற கடும் சட்டத்தை விதித்தான். பரிசுத்த வேதாகமத்தை வைத்திருப்பவர்களுக்கு எல்லா சமூக உரிமைகளும் பறிக்கப்பட்டன. ஆனால் இந்தக் கடும் சட்டத்தினால் பரிசுத்த வேதாகமத்தை அழிக்க முடியவில்லை. மக்களுக்கு அதன்மேல் இருந்த தாகத்தை ஒழிக்கவும் முடியவில்லை.

இச்சட்டத்தைக் கொண்டு வந்த டயோகிளிஷியசுக்கு பிறகு 25 வருடங்கள் கழித்து கான்ஸ்டன்டைன் என்ற ரோமப் பேரரசன் எந்த பரிசுத்த வேதாகமத்தை டயோகிளிஷியன் என்ற ரோம பேரரசன் அழிக்க முற்பாட்டானோ அதே புத்தகத்தை அரசாங்கத்தின் செலவில் 50 பிரதிகள் தயாரிக்கக் கட்டளை கொடுத்தான்.

பரிசுத்த வேதாகமம் அழிக்கப்பட முடியாதது.

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த வால்டேர் என்பவன் தெய்வ நம்பிக்கையற்றவன். 18-ம் நூற்றாண்டில் வாழ்ந்த இவன் "இன்னும் 100 வருடங்களுக்குள் பரிசுத்த வேதாகமம் அழிந்து போய்விடும். உலகத்திலே கிறிஸ்தவமே இருக்காது" என்று அறிவித்தான். "அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளை என்னுடைய கரம் ஒன்றே அழித்துவிடும்" என்று முழக்கமிட்டான். பரிசுத்த வேதாகமம் அழிந்துபோகும் என்று சொன்ன வால்டேர் இறந்து போனான். அவன் மரித்த 50-வது வருடமே அவனுடைய அச்சுக்கூடத்தையே ஜெனிவா வேதாகமச் சங்கம் விலைக்கு வாங்கி அவனது அச்சுக் கூடத்தை பரிசுத்த வேதாகமத்தை அச்சடிக்கப் பயன்படுத்தியது. தனக்கு எதிராக எழும்பும் எந்தப் பட்டயத்தையும் வாய்க்காது செய்யும் வேத வசனமாகிய ஆவியின் பட்டயம் பரிசுத்த வேதாகமம்.

பரிசுத்த வேதாகமத்தின் ஒரு சில பிரதிகளை சிலர் தீக்கிரையாக்கிவிட்டு பரிசுத்த வேதாகமமே அழிந்துவிடும் என்று கனவு காண்கிறார்கள். B. Mcafee என்ற சரித்திர ஆராய்ச்சியாளர் பின் வருமாறு கூறுகிறார். "பரிசுத்த வேதாகமத்தின் ஒவ்வொரு வார்த்தைகளையும், வசனங்களையும் எடுத்து ஆராய்ச்சி செய்து அதற்கு விளக்கங்களையும், ஆதாரங்களையும் எழுதின பல ஆராய்ச்சியாளர்களுடைய புத்தகங்கள் உலகமெங்கிலும் உள்ள நூல் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளன. ஒருவேளை உலகத்தில் உள்ள பரிசுத்த வேதாகமத்தின் எல்லா பிரதிகளுமே பறிக்கப்பட்டு, கொளுத்தப்பட்டு அழிக்கப்பட்டு விட்டாலும் கூட பரிசுத்த வேதாகமத்தின் ஒவ்வொரு வசனத்தையும் ஆதாரமாய் வைத்து எழுதப்பட்ட புத்தகங்களில் உள்ள வேதாகமத்தின் வசனங்களைக் கொண்டு மீண்டுமாய் பரிசுத்த வேதாகமத்தை உருவாக்கிவிட முடியும். எனவே, பரிசுத்த வேதாகமத்தை உலகத்திலிருந்து யாராலும் அழிக்க முடியாது".

Boling Bruke, Hume, Strauss, Julian, Celsus, Renan, Eichborn, Well Hausen என்ற கடுமையான எதிர்ப்பாளர்களால் பரிசுத்த வேதாகமம் விமர்சிக்கப்பட்டது. ஆனால் பரிசுத்த வேதாகமத்தை எதிர்த்தவர்கள் மறைந்தார்களே தவிர, பரிசுத்த வேதாகமம் மறையவில்லை. பரிசுத்த வேதாகமத்திற்கு எதிராக புத்தகங்களை எழுதின Hume நான் கிறிஸ்தவத்தின் அஸ்தமனத்தைக் காண்கிறேன் என்றார். சூரிய உதயத்திற்கும், அஸ்தமனத்திற்கும் வித்தியாசத்தை சில சமயங்களில் காண

முடியாது. கிறிஸ்தவத்தின் அஸ்தமனமாக Hume கண்டது கிறிஸ்தவத்தின் உதயமே தவிர அஸ்தமனமல்ல. அதனால் தான் Hume எந்த அறையில் இறந்தாரோ அதே அறையில் எடின்பரோ வேதாகமச் சங்கத்தின் துவக்க விழாவே நடந்தது. பரிசுத்த வேதாகமம் எதிர்ப்புகளைச் சந்தித்ததினால் மாத்திரமல்ல எல்லா எதிர்ப்புகளையும் வென்று வெற்றிக் கொடி நாட்டியதால்தான் அதிசயமானது.

அறிஞர்களுக்கு சவால் விடும் வேதம்

பரிசுத்த வேதாமத்தின் ஆசிரியர்கள் எல்லோரும் கல்வியறிவு படைத்தவர்கள் அல்ல. ஆடுமாடுகளை மேய்த்தவர்களுடைய வார்த்தைகள் இதிலே உண்டு. மீன் பிடித்தவர்களுடைய வார்த்தைகள் பரிசுத்த வேதாகமத்திலே இடம் பெற்றுள்ளன. பரிசுத்த வேதாகமம், அறிவு வளர்ச்சிக்கு சரித்திரத்திலே பெயர் போனதாயிருந்த அத்தேனே பட்டணத்திலிருந்து எழுதப்படவில்லை. எகிப்தின் அலெக்ஸாண்டிரியாவிலிருந்து எழுதப்படவில்லை. பாலஸ்தீனத்திலிருந்தும், கலிலேயாவிலிருந்தும் யூதேயாவின் வனாந்திரங்களிலுமிருந்தே கல்வியறிவு இல்லாதவர்களால் இது எழுதப்பட்டது.

பரிசுத்த வேதாகமத்தை எழுதின சிலருக்கு எழுதப்படிக்கவே தெரியாது. அப்படிப்பட்டவர்களுக்கு இலக்கிய அறிவு எங்கிருந்து வரப்போகிறது? ஆனால் கல்வியறிவு இல்லாத அவர்களுடைய வார்த்தைகள் இன்று உலகத்தையே அசைத்துக் கொண்டிருக்கிற தென்றால், இலக்கிய அறிஞர்களின் சிந்தனையையே தட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறதென்றால் அது 20-ம் நூற்றாண்டின் அறிவு வளர்ச்சிக்கும் ஈடு கொடுக்கக்கூடியதாயிருக்கிறதென்றால் பரிசுத்த வேதாகமத்தை எழுதியவர் பரிசுத்த ஆவியானவரே என்பதைத்தான் இது தெளிவாய் நிரூபிக்கிறது இல்லையா?

மறக்க முடியாத வேதம்

எந்த ஒரு புத்தகத்தையும் விட பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள சம்பவங்களையும், வேதபாத்திரங்களையும் தான் உலக மக்கள் பெரும்பான்மையோர் அறிந்திருக்கின்றனர். ரோமர், சாக்ரடீஸ், மில்டன், எமர்சன், திருவள்ளுவர் என்ற உலக அறிஞர்களைக் குறித்து எல்லாம் அறிந்திராத, ஒரு முறை கூடக் கேள்விப்படாத உலகத்தின் கோடிக்கணக்கான மக்களுக்கு ஆபிரகாமின் விசுவாசத்தைக் குறித்துத் தெரியும். சிம்சோனின் தீரச் செயல்கள் தெரியும். மோசேயின் விசுவாச சாதனைகள்

தெரியும். இது பரிசுத்த வேதாகமம் உலக புத்தகங்கள் அனைத்திலிருந்தும் வேறுபட்டது என்பதை உறுதிப்படுத்துகிறது.

வான்வெளியில் வேதம்

வானளாவ விஞ்ஞான உலகம் வளர்ந்திருக்கிற இந்த நாட்களிலே பரிசுத்த வேதாகமத்தை ஏற்றுக் கொள்ள முடியுமா என்ற கேள்வி இன்று பல இடங்களில் பரிசுத்த வேதாகமத்திற்கு எதிராகக் கேட்கப்படுகிறது. சந்திரனில் மனிதன் இறங்கி நடை போட்ட இந்த 20-ம் நூற்றாண்டிற்கு பரிசுத்த வேதாகமம் தேவையா என்று பலர் கேட்கின்றனர். ஆனால் வான்வெளிக் கலத்தில் முதன் முதலில் எடுத்துச் செல்லப்பட்ட புத்தகம் பரிசுத்த வேதாகமமே.

Frank Boreman, James Lowell, William Anderson என்ற விண்வெளி வீரர்களால் அப்பல்லோ - 8 என்ற வான்வெளிக்கலத்தில் பரிசுத்த வேதாகமம் மைக்ரோபிலிமாக எடுத்துச் செல்லப்பட்டது. 1968-ம் வருடம் கிறிஸ்மஸ் இரவு அன்று விண்வெளியிலிருந்து அப்பல்லோ - 8-ன் வான்வெளி வீரர்கள் கொடுத்த பேட்டியில் அவர்கள் வாசித்த வார்த்தைகள் *"ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்"* என்ற வார்த்தைகளே. முதன் முதலில் வான்வெளியில் இருந்து வாசிக்கப்பட்ட புத்தகத்தின் வார்த்தைகள் பரிசுத்த வேதாகமத்தின் முதல் புத்தகத்தின் முதல் அதிகாரத்தின் முதல் வசனமே.

தந்தியில் வேதம்

உலகத்திலேயே கொடுக்கப்பட்ட மிக நீளமான தந்தி எதுவென்றால் பரிசுத்த வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டின் அத்தனை வார்த்தைகளையும் தந்தியாக நியூயார்க்கில் இருந்து சிக்காகோவிற்கு கொடுத்த தந்தியாகும். அது மாத்திரமல்ல. உலகத்திலேயே முதன் முதலில் கொடுக்கப்பட்ட தந்தி செய்தியில் பரிசுத்த வேதாகமத்தின் வேத வசனங்களே அனுப்பப்பட்டன. தந்தி முறையைக் கண்டுபிடித்த Samuel F.B. Morse தந்தி முறையைக் கண்டுபிடித்தவுடனே அனுப்பிய தந்தியின் வார்த்தைகள் எண்ணாகமம் புத்தகத்தின் வசனங்களே. அது எண்ணாகமம் புத்தகத்தின் 23-ம் அதிகாரத்தின் 23-ம் வசனமான "தேவன் என்னென்ன செய்தார்?" என்ற வார்த்தைகளே. உலகத்தின் முதல் டெலிகிராமின் வார்த்தைகள் What hath God wrought? என்ற வார்த்தைகளே.

இத்தந்தி முறையைக் கண்டுபிடித்தவரும் சிறந்த கிறிஸ்தவ

விஞ்ஞானியுமான மோர்ஸ் பின்வருமாறு கூறுகிறார்: "நான் என் வாழ்க்கையின் பயணப் பாதையின் முடிவை நெருங்க நெருங்க பரிசுத்த வேதாகமம் தேவனால் உண்டானது என்பதை இன்னும் தெளிவாக உணர்ந்து கொள்கிறேன். விழுந்து போன ஒரு மனிதனுக்கு தேவன் வைத்துள்ள மகிமையான பரிகாரத்தை இன்னும் நன்றாக அறிந்து கொள்கிறேன். என் எதிர்காலம் நம்பிக்கையாலும், சந்தோஷத்தாலும் ஒளி பெறுகிறது". இதுதான் பரிசுத்த வேதாகமத்தை நேசித்த விஞ்ஞானியான மோர்ஸ் அவர்களுடைய வார்த்தைகள்.

வானொலியில் வேதம்

மார்கோனி என்ற விஞ்ஞானி 1896-ம் ஆண்டு ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செய்தி அனுப்பும் கம்பியில்லாத் தந்தி முறையைக் கண்டுபிடித்தார். இதற்குப்பின்பு பலர் மனிதனுடைய குரலை தொலை தூரத்திலும் கேட்கச் செய்யும்படி முயற்சிகளை மேற்கொண்டனர். 1906-ம் ஆண்டு, டிசம்பர் 4-ம் தேதி தான் உலகத்தின் முதல் ஒலிபரப்பு நடந்தேறியது.

உலகத்தின் முதல் ஒலிபரப்பை கனடா நாட்டைச் சேர்ந்த ரெஜினால்டு பெசாண்டின் நிறைவேற்றினபோது லூக்கா சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ள வசனங்களை வாசித்து கிறிஸ்மஸ் வாழ்த்துக்களுடன் தனது ஒலிபரப்பை முடித்தார். விண்வெளியிலிருந்து மாத்திரமல்ல, வானொலியிலும் முதல் முதலில் ஒலிபரப்பப்பட்ட வார்த்தைகள் பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகளே.

அறிஞர்கள் விரும்பும் வேதம்

சர் ஐசக் நியூட்டன், வில்லியம் ஹர்ஷல், மைக்கேல் பாரடே, ஜோசப் லிஸ்டர், லார்ட் கெல்வின், ஹென்றி பேபர், லூயி பாஸ்ச்சர், ஜேம்ஸ் சிம்சன் என்ற விஞ்ஞானிகளால் விரும்பி வாசிக்கப்பட்டது பரிசுத்த வேதாகமம். ஆபிரகாம் லிங்கன், ஜார்ஜ் வாஷிங்டன், விக்டோரியா மகாராணியார், மகாத்மா காந்தி, ரொனால்ட் ரீகன், ஜிம்மி கார்ட்டர் போன்ற அரசியல்வாதிகளால் விரும்பி வாசிக்கப்பட்டது பரிசுத்த வேதாகமம். ரூசோ, எமர்சன், கோயத் போன்ற தத்துவ ஞானிகளால் விரும்பி வாசிக்கப்பட்டது பரிசுத்த வேதாகமம். இவ்வாறு பல நிலைமையில் இருப்பவர்களாலும், அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்படுவதும், விரும்பப்படுவதும் பரிசுத்த வேதாகமம் மாத்திரமே.

சரித்திரப்பூர்வமான வேதம்

பல மார்க்கங்களின் வேதங்கள் கற்பனைக் காவியங்களாக இருக்க, பரிசுத்த வேதாகமம் சரித்திர ரீதியானதாய் இருப்பது அதனுடைய தனித்தன்மையை உறுதிப்படுத்துகிறது. சுமார் 6000 ஆண்டு சரித்திரத்தை பின்பற்றி எழுதப்பட்ட பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகள் பலமுறை பிரதிகள் எடுக்கப்பட்டதினால் அதில் தவறுகள் ஏற்பட்டிருக்கக் கூடும் என்று சிலர் நினைக்கலாம். ஆனால் எந்த ஒரு சரித்திரப் பிழையுமில்லாமல் 6000 வருடங்களாக கர்த்தருடைய வார்த்தைகளை தவறில்லாமல் பரிசுத்த வேதாகமம் தாங்கி நிற்பது பரிசுத்த வேதாகமத்தின் தனித்தன்மையை நிரூபிக்கிறது.

எகிப்திய ஆராய்ச்சியாளர் ஒருவர் கி.மு. 280-ல் எழுதிய சரித்திரத்தில் 140 எகிப்திய அரசர்களின் பெயர்களை குறிப்பிட்டுள்ளார். ஆனால் இவற்றில் 49 அரசர்களின் பெயர்கள் மாத்திரமே சரியானவை என்று கல்வெட்டு, புதைபொருள் ஆராய்ச்சிக் குறிப்புகள் நிரூபிக்கின்றன. கி.பி. 2-ம் நூற்றாண்டைச் சேர்ந்த வானவியல் ஆராய்ச்சியாளரான தாலமியினுடைய ஆராய்ச்சிக் குறிப்புகள் 1300 வருடங்களாக சரி என்றே ஏற்றுக் கொள்ளப்பட்டன. 18 அரசர்கள் பெயர்களை தனது சரித்திரக் குறிப்புகளில் தாலமி எழுதியுள்ளார். இவற்றில் பெரும்பான்மையானவை கல்வெட்டுகளிலோ, புதைபொருள் ஆராய்ச்சிக் குறிப்புகளிலோ காணப்படவில்லை.

ஆனால் பரிசுத்த வேதாகமத்தில் இஸ்ரவேல் கோத்திரத்தின் 40 அரசர்களின் பெயர்களோடு 26 அந்நிய அரசர்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு பெயரும் சரித்திர ஆராய்ச்சிகளின்படி சரியாய் இருப்பதுடன் சரியான வரிசையில் இருப்பதுடன், இஸ்ரவேல் தேசத்தின் அரசர்களும் அவர்களுக்கு இணையாக மற்ற தேசங்களில் ஆண்ட அரசர்களின் காலமும் சொல்லப்பட்டிருப்பது சரியாகவே உள்ளன. மேலும் இவை கல்வெட்டுகளினாலும், புதைபொருள் ஆராய்ச்சிக் குறிப்புகளினாலும் சரியானவை என்றும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. 6000 வருட சரித்திரம் எந்த ஒரு பிழையுமின்றி எழுதப்பட்டு நமக்குக் கிடைக்குமென்றால் அது பரிசுத்த வேதாகமத்தின் தனித்தன்மையையே காட்டுகிறது.

இலக்கியத்தில் வேதம்

பரிசுத்த வேதாகமத்தை ஒரு மார்க்கத்தின் புத்தகம்தானே என்று ஒரு வேளை சிலர் நிராகரிக்கலாம். ஆனால் இலக்கியம்

அறிந்தவர்கள் ஆங்கில வேதாகமத்தை இலக்கியச் சிறப்புமிக்க ஒரு புத்தகமாக ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது. இலக்கியச் செல்வர்களான Browning, Bunyan, Chaucer, Charless Dickens, Emerson, Hardy, Longfellow, Macaulay, Milton, Poe, Scott, Ruskin, Shakespeare, Shelly, Spenser, Tennyson, Whitman, Whittier இவர்களுடைய இலக்கியப் படைப்புகள் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருந்தது பரிசுத்த வேதாகமம். எந்த ஒரு ஆங்கில இலக்கிய மாணவனும் ஆங்கில பரிசுத்த வேதாகமத்தைக் குறித்து அறிவில்லாதிருப்பான் என்றால் ஆங்கில இலக்கிய உலகத்தை அவன் முழுவதுமாய் அறியவில்லையென்றே திட்டமாய்ச் சொல்ல முடியும்.

"ஆங்கில இலக்கியத்தில் மிக உயர்ந்த புத்தகங்கள் எதையும் எடுங்கள், அவற்றில் பரிசுத்த வேதாகமத்தைக் குறித்தும், பரிசுத்த வேதாகமத்திலிருந்து சொல்லப்பட்டுள்ள வார்த்தைகளை எல்லாவற்றையும் நீக்கிவிட்டு அந்தப் புத்தகத்தை வாசித்துப் பார்த்தால் அந்தப் புத்தகத்தை அடையாளமே கண்டு கொள்ள முடியாதவாறு அது மாறிவிட்டிருக்கும்" என்று B. Mcafee என்ற ஆராய்ச்சியாளர் தெரிவிக்கிறார். இலக்கியப் படைப்புகளுக்கு காரணமாய் இருந்துவருவது பரிசுத்த வேதாகமம்.

சட்ட உலகில் வேதம்

சட்ட உலகத்திலும் பரிசுத்த வேதாகமம் தன் முத்திரையை பதித்துள்ளது. ரோம அரசாட்சியின் சட்டம் வேதத்தில் சொல்லப்பட்டுள்ள அரசியல் சட்டங்களை சார்ந்து உருவாக்கப்பட்டது. இங்கிலாந்தின் சட்டங்கள் வேதாகமத்தின் சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன. பரிசுத்த வேதாகமம் இங்கிலாந்தின் பொதுச்சட்டமாக கருதப்படுகிறது என்று பிளாக்ஸ்டோன் கூறியுள்ளார்.

அரசியலில் வேதம்

அரசியலிலும் தனது முத்திரையை பரிசுத்த வேதாகமம் பதிக்காமல் இல்லை. அரசர்களின் உரிமைகள், அதிகாரங்களுக்கு வேதத்தில் அரசர்களைக் குறித்த குறிப்புகள் ஆதாரமாய் இருந்திருக்கின்றன. *"ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாய் இருந்ததில்லை", "அவனவனுக்குத் தேவையானதற்குத்தக்கதாய் பகிர்ந்து கொடுக்கப்பட்டது"* என்ற கருத்து பொதுவுடைமை கொள்கை உருவாகக் காரணமாய் இருந்தது.

சமத்துவம், நீதி இவற்றைக் குறித்த தீர்க்கதரிசன வார்த்தைகள் சோஷலிச கொள்கைக்குக் காரணமாய் இருந்தது. புதிய ஏற்பாட்டின் சகோதரத்துவம், ஜனநாயகத்திற்குக் காரணமாய் இருந்தது. உலகத்தின் பல சரித்திர கொள்கைகளுக்கு சரியான முறையிலோ, தவறான முறையிலோ பரிசுத்த வேதாகமம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமம் பல துறைகளில் தனது முத்திரையைப் பதித்துள்ளது.

அற்புதமாய் ஆரம்பிக்கும் வேதம்

மற்ற மார்க்கங்களின் வேதங்களுக்கு மாறாக பரிசுத்த வேதாகமம் மாத்திரமே ஆரம்பத்திலேயே உலகமும், அதிலுள்ள உயிரினங்களும் எவ்வாறு உருவாக்கப்பட்டன என்ற விளக்கத்தோடு ஆரம்பமாகிறது. ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் என்ற வார்த்தைகள் நாம் காணுகிற யாவும் எவ்வாறு உருவாக்கப்பட்டன என்பதை விளக்குவதால் வேறு எந்த வேதத்திலும் கூறப்படாத தனித்தன்மையான வார்த்தைகளை தன்னகத்தே பெற்றிருப்பது பரிசுத்த வேதாகமம் என்று உறுதிப்படுத்துகிறது.

உலகமும், உயிரினங்களும் எவ்வாறு உருவாயின என்பதுதான் மனிதனுடைய முதல் கேள்வியாக இருக்க முடியும். அதற்கான பதிலுடன் பரிசுத்த வேதாகமம் ஆரம்பித்து இருப்பது அதனுடைய ஆசிரியர் இயற்கைக்கு அப்பாற்பட்டவர் என்று நிரூபிக்கிறது. நாம் காண்கின்ற உலகம், உயிரினங்கள் இவை எவ்வாறு உருவாயின என்பதற்கு விளக்கம் தரும் பரிசுத்த வேதாகமம், ஆரம்பத்தில் "ஆண்டவர் ஒருவர் இருக்கிறார்" என்பதை நிரூபிக்க எந்த ஒரு விளக்கத்தையும் கொடுப்பதில்லை. ஆண்டவரே இந்தப் புத்தகத்தை எழுத உறுதுணையாய் இருந்ததினால் உலகம் உருவாக்கப்பட்ட விதத்தை ஆண்டவர் முதலில் விவரிக்கிறார்.

மேலும் தேவன் இல்லை என்ற நம்பிக்கை உருவானதற்கு முன்பே பரிசுத்த வேதாகமத்தின் முதல் வார்த்தை எழுதப்பட்டதினால் நாத்தீக கொள்கைக்கு பதில் கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லாததினால் பரிசுத்த வேதாகமம் வானமும், பூமியும் எவ்வாறு உண்டாயின என்று கூறுகிறதே தவிர ஆண்டவர் ஒருவர் இருக்கிறார் என்று அது நிரூபிக்க முற்படவில்லை. அப்படி நிரூபிக்க வேண்டிய தேவையும் எழவில்லை.

புனிதமாய் பாதுகாக்கப்பட்ட வேதம்

பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகள் ஆயிரக்கணக்கான

வருடங்களாக மிகவும் புனிதமாக பாதுகாக்கப்பட்ட வார்த்தைகளாகும். யூதர்கள் இந்த புத்தகத்தை உலகிற்கு அளிக்க இதற்கென்றே தனி எழுத்தர்களை (scribes) நியமித்தனர். அவர்கள் பரிசுத்த வேதாகமத்தின் ஒவ்வொரு தோல்சுருளின் வார்த்தைகளையும், மொத்த எழுத்துக்களையும் எண்ணி, அவற்றைக் கூட்டி பிறகு பிரதி எடுப்பர். முதல் பிரதியிலுள்ள வார்த்தைகளின் கூட்டுத்தொகையும், அந்த வார்த்தைகளில் உள்ள எழுத்துக்களின் கூட்டுத் தொகையும் பிரதி எடுக்கப்பட்டதின் வார்த்தைகளின் எழுத்துக்களின் கூட்டுத் தொகைக்கு சரியாய் இருந்தால் மட்டுமே அப்பிரதி அங்கீகரிக்கப்படும். உலகத்தில் எந்த புத்தகத்தின் வார்த்தைகளும், எழுத்துக்களும் எண்ணப்பட்டிருக்கின்றன? பரிசுத்த வேதாகமத்தைத் தவிர

பதிப்பகங்களைப் பெற்ற வேதம்

பரிசுத்த வேதாகமத்தைக் குறித்து ஒவ்வொரு நாளும் உலகத்தில் வெளி வந்து கொண்டிருக்கிற புத்தகங்கள் பல்லாயிரம். பரிசுத்த வேதாகமத்தைக் குறித்து எழுதப்பட்ட வார்த்தைகளைத் தாங்கி உலகத்தில் ஒவ்வொரு நாளும் வெளிவந்து கொண்டிருக்கிற பத்திரிக்கைகளும் பல்லாயிரம். பரிசுத்த வேதாகமத்தைக் குறித்து எழுதப்படுகிற புத்தகங்களை வெளியிடுவதற்காக என்றே பல பதிப்பகங்கள் முழு அளவில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

உலகத்தின் எந்த ஒரு புத்தகத்தையும் சார்ந்து எழுதப்படுகிற புத்தகங்களை வெளியிடுவதற்கு இத்தனை பதிப்பகங்கள் இருந்ததே கிடையாது. தன்னைச் சார்ந்து எழுதப்படுகிற புத்தகங்களை வெளியிடுவதற்கு எழும்பியுள்ள பதிப்பகங்களின் எண்ணிக்கை அதிகமாய் இருப்பதினால் உலகத்தின் மற்ற எல்லா புத்தகங்களைக் காட்டிலும் தனித்தன்மை வாய்ந்ததாய் பரிசுத்த வேதாகமம் உள்ளது.

இல்லங்களில் வேதம்

உலகமெங்கிலும் உள்ள பெரும்பான்மையான இல்லங்களில் காணப்படுகின்ற இரண்டு புத்தகங்கள். முதலாவது பரிசுத்த வேதாகமம், இரண்டாவது ஆங்கில அகராதி. கோடிக்கணக்கான இல்லங்களுக்குள்ளும், இதயங்களுக்குள்ளும் இடம் பெற்றிருப்பது பரிசுத்த வேதாகமமே.

ஆராயப்படாத வேதம்

உலகத்தில் எழுதப்பட்ட பல புத்தகங்களும் ஆராய்ச்சி

செய்யப்பட்டு அவற்றின் எழுத்துக்கள் எல்லாம் முழுவதுமாக ஆராயப்பட்டுவிட்டன. ஆனால் பரிசுத்த வேதாகமம் எழுதி முடிக்கப்பட்டு 2000 வருடங்களுக்கு மேல் கடந்து சென்றும் அது இன்னும் முழுவதுமாய் புரிந்து கொள்ளப்படவில்லை. ஒவ்வொரு நாளும் பரிசுத்த வேதாகமத்தின் இரகசியங்களை பரிசுத்த ஆவியானவர் தம்முடைய பிள்ளைகளுக்கு வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கிறார். இரகசியங்கள் நிறைந்த சுரங்கம் பரிசுத்த வேதாகமம். பரிசுத்த வேதாகமம் பழமையாகாமல் போவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

எத்தனை முறை ஆராயப்பட்டாலும், தியானிக்கப்பட்டாலும் பல இரகசியங்களை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கக்கூடிய புத்தகம் பரிசுத்த வேதாகமம். இதற்குக் காரணம் என்ன? மனிதனுடைய அறிவினால் ஆராய்ந்து கொள்ளப்பட முடியாத சத்தியங்களைப் பரிசுத்த வேதாகமம் கொண்டிருப்பதே காரணமாகும். பரிசுத்த ஆவியினால் எழுதப்பட்ட வார்த்தைகளை அது உடையதாயிருப்பதினால் பரிசுத்த ஆவியானவராலேயே அதனுடைய இரகசியங்களை வெளிப்படுத்த முடியும். இக்குறிப்பும் பரிசுத்த வேதாகமம் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆசிரியரைக் கொண்டுள்ளது என்பதை தெளிவாய் நிரூபிக்கிறது.

விலையேறப்பெற்ற வேதம்

உலகத்திலேயே அதிக விலை மதிப்புப் பெற்ற புத்தகமும் பரிசுத்த வேதாகமமே. கூடன்பர்க்கினுடைய அச்சகத்திலே அச்சடிக்கப்பட்ட இலத்தீன் வேதாகமம் ஒரு இலட்சம் டாலர் விலைக்கு விற்பனையானது. Codex Sinaticus என்ற வேதாகமப் பிரதி 5 இலட்சத்து பத்தாயிரம் டாலர் விலைக்கு இங்கிலாந்தினால் ரஷ்யாவிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டது.

இதயங்களை மாற்றும் வேதம்

பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டதாயிருக்கும் என்றால் அது வாசிப்போரை மாற்றக்கூடியதாய் இருக்க வேண்டும். பரிசுத்த வேதாகமத்தின் ஜீவ வசன வார்த்தைகளினால் தங்கள் இருதயம் மாற்றப்பட்டோரின் எண்ணிக்கை எண்ணி முடியாதது.. பரிசுத்த வேதாகமம் ஜீவனுள்ள வார்த்தைகளை உடையதாயிருப்பதினால் யார் வேண்டுமென்றாலும் திறந்த மனதோடும், தெளிந்த புத்தியோடும் அதை வாசிக்கும் பொழுது மாற்றப்படுவார்கள்.

இங்கிலாந்து தேசத்திலே பிராங் மாரிசன் என்ற ஒரு வழக்கறிஞர்

இருந்தார். இவர் ஒரு நாத்திகர். இவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் சம்பவிக்கவில்லை என்று ஒரு புத்தகம் எழுதி நிரூபித்தால் கிறிஸ்தவத்தின் அஸ்திபாரங்கள் அசைக்கப்படும் என்று திட்டமிட்டார். புத்தகத்தை எழுதவும் உட்கார்ந்தார். புத்தகத்தை எழுதுவதற்காய் பரிசுத்த வேதாகமத்தைத் திறந்த மனதோடும், தெளிந்த புத்தியோடும் வாசித்த அவர் விசுவாசியாக மாற்றப்பட்டார்.

இயேசுவின் உயிர்த்தெழுதல் சம்பவிக்கவில்லை என எழுத ஆரம்பித்த அவர் இயேசு கிறிஸ்து மெய்யாகவே உயிர்த்தெழுந்தார் என எழுதி முடித்தார். இவர் எழுதிய புத்தகத்தின் பெயர் "Who moved the stone?" அதாவது "கல்லைப் புரட்டியது யார்?" என்பதாகும். அந்தப் புத்தகத்தின் முதல் அத்தியாயம் "The Book that refused to be written" "நான் எழுத மறுத்த புத்தகம்" என்ற தலைப்போடு ஆரம்பமாகிறது. வேதத்தின் ஜீவ வார்த்தைகள் நாத்திகரான பிராங் மாரிசனை மாற்றி இயேசு கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்று எழுத ஆரம்பித்த அவரை "இயேசு கிறிஸ்து மெய்யாகவே உயிர்த்தெழுந்தார்" என்று எழுதும்படி செய்தது.

பிராங் மாரிசனை மாற்றிய பரிசுத்த வேதாகமம் உங்களையும் மாற்ற வல்லது. வாசித்துப் பாருங்கள். பரிசுத்த வேதாகமத்தை திறந்த மனதோடும், தெளிந்த புத்தியோடும் வாசியுங்கள். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் இரண்டு அறிஞர்கள் ஒருவரையொருவர் சந்தித்தனர். Gilbert West, Lord Littleton என்ற இவர்களிருவரும் வழக்கறிஞர்கள். கிறிஸ்தவம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மேலும், பவுல் மனம் திரும்பி இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின்பு சபைகளை ஸ்தாபித்தான் என்ற கருத்தின் அடிப்படையிலும்தான் கட்டப்பட்டுள்ளது. எனவே, இந்த இரண்டும் சம்பவிக்கவில்லை என்று ஆராய்ச்சி செய்து புத்தகம் எழுதி நிரூபித்தால் அது கிறிஸ்தவத்திற்கு பேரிடியாகும் என்று இவர்களிருவரும் தீர்மானித்தனர்.

கில்பர்ட் வெஸ்டு இயேசு கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்று எழுதுவதற்கான குறிப்புகளை ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார். லார்ட் லிட்டில்டன், பவுல் கிறிஸ்தவராக மாறவில்லை என ஆராய்ந்து எழுத ஆரம்பித்தார். வேதத்தை வாசித்து தனித்தனியே ஆராய்ச்சி செய்து சில காலம் கழித்து இருவரும் தங்கள் தங்கள் ஆராய்ச்சிக் குறிப்புகளோடு ஒருவரையொருவர்

சந்தித்தனர். கில்பர்ட்வெஸ்டு ஆராய்ச்சி செய்து எழுதிக் கொண்டு வந்திருந்தார் "இயேசு கிறிஸ்து மெய்யாகவே உயிர்த்தெழுந்தார்" என்று. லார்ட் லிட்டில்டன் எழுதிக்கொண்டு வந்திருந்தார் "பவுல் கிறிஸ்தவத்திற்கு மாற்றப்பட்டு உண்மையாகவே சபைகளை ஸ்தாபித்தான்" என்று. கில்பர்ட் வெஸ்ட் எழுதின புத்தகத்தின் பெயர் Observation of the History and evidences of Resurrection of Jesus Christ - அதாவது இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சரித்திரமும், அதற்கான ஆதாரங்களும் என்பதாகும். லார்ட் லிட்டில்டன் எழுதின புத்தகத்தின் பெயர் Observation on the conversion and Apostleship of St. Paul - அதர்வது "பவுலினுடைய மனமாற்றமும், அப்போஸ்தல ஊழியமும்" என்பதாகும்.

திறந்த மனதோடும், தெளிந்த புத்தியோடும் வேதத்தை வாசித்த கில்பர்ட் வெஸ்டும், லார்ட் லிட்டில்டன்னும் மாற்றப்பட்டார்கள். கில்பர்ட் வெஸ்டையும், லார்ட் லிட்டில்டன்னையும் மாற்றிய பரிசுத்த வேதாகமம் உங்களையும் மாற்ற வல்லது. பரிசுத்த வேதாகமத்தை திறந்த மனதோடும், தெளிந்த புத்தியோடும் வாசித்துப் பாருங்கள்.

அநேகர் அறிந்த நாத்திகரான இங்கர்சால் ஒரு சமயம் இரயிலில் சென்று கொண்டிருந்தபோது டுநற றுயடடயஉந என்ற வழக்கறிஞரை சந்தித்தார். இருவரும் கிறிஸ்தவத்தின் நம்பிக்கைகளுக்கு எதிராகப் பேசிக்கொண்டு வந்தனர். அப்போது இங்கர்சால் Lew Wallace-னிடம் இயேசு கிறிஸ்து தேவன் அல்ல. அவர் சாதாரண மனிதனே என்று நிரூபிக்கும் ஒரு புத்தகம் எழுதும்படி கேட்டுக்கொண்டார். அப்படியே அவரும் வேதத்தை வாசித்து ஆராய்ச்சி செய்து இயேசு தேவனல்ல என்று கிறிஸ்தவத்திற்கு எதிராக ஒரு புத்தகத்தை எழுத ஆரம்பித்தார்.

தனது புத்தகத்தின் நான்கு அத்தியாயங்களை எழுதி முடித்த நிலையில் லியு வாலஸ் பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகளால் தொடப்பட்டார். புத்தகத்தை எழுதிக் கொண்டிருக்கும்போதே ஒருநாள் இயேசுவே தேவனுடைய குமாரன் என்று உணர்த்தப்பட்டார். தனது மேஜையின் முன்பாக முழங்காற் படியிட்டார். தன் வாழ்க்கையில் முதன் முறையாக ஜெபித்தார். 50 வயதான அவர் தம் வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்து கிறிஸ்தவராக மாறினார். தாம் எழுதிய நான்கு அத்தியாயங்களையும் மாற்றினார். "இயேசு கிறிஸ்து தேவனல்ல அவர் சாதாரண மனிதனே" என்று ஆரம்பத்தில் எழுதத்

தீர்மானித்தவர், மாற்றப்பட்டவராய் "இயேசு கிறிஸ்து தேவனே" என்று சொல்லி எழுதி முடித்தார்.

அவர் எழுதிய புத்தகம்தான் லட்சக்கணக்கான மக்களால் உலகமெங்கும் விரும்பி வாசிக்கப்பட்டதும், திரைப்படமாய் ஓடினதுமான Benhur ஆகும். லியு வாலசை மாற்றிய வேதாகமம் உங்களையும் மாற்ற வல்லது. பரிசுத்த வேதாகமத்தைத் திறந்த மனதோடும், தெளிந்த புத்தியோடும் வாசித்துப் பாருங்கள்.

புதைபொருள் ஆராய்ச்சியும் புறக்கணிக்காத வேதம்

வேதத்தில் பல புதை பொருள்கள் இருப்பதுபோல் புதைபொருள் ஆராய்ச்சிகளாலும் வேதத்தின் உண்மைகள் பரவலாக நிரூபிக்கப்பட்டுள்ளன. புதைபொருள் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் பலவும் பரிசுத்த வேதாகமத்தின் குறிப்புகளுக்கு ஆதாரங்களைக் கொடுப்பதாகவே இருக்கின்றன. சர். வில்லியம் ராம்சே என்பவர் அபர்டீன் பல்கலைக்கழகத்திலும், ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலும், ஜெர்மன் ஸ்கூல் ஆப் ஹிஸ்டரி என்ற கல்லூரியிலும் பணிபுரிந்தவர். பரிசுத்த வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டிலுள்ள லூக்காவினுடைய குறிப்புகள் ஆதாரப்பூர்வமானவை அல்லவென அவர் கருதினார். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகமும், லூக்காவினுடைய சுவிசேஷமும் கி.பி. 250-ம் ஆண்டில்தான் எழுதப்புட்டன என்பது இவரது கருத்தாக இருந்து வந்தது.

புதைபொருள் ஆராய்ச்சியாளரான வில்லியம் ராம்சே பிறகு தெற்கு ஆசியாவில் புதைபொருள் ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். ஆராய்ச்சிகள் நடக்க, நடக்க லூக்கா தனது அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள பல குறிப்புகளும் அப்படியே சரியாயிருக்கக் கண்டு ராம்சே வேதத்தை நம்பினார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார். விசுவாசியாக மாறினார். புதிய ஏற்பாட்டின் சம்பவங்களை ஆதாரப்பூர்வமாய் நிரூபிக்கும் 20 புதைபொருள் ஆராய்ச்சிப் புத்தகங்களை ராம்சே எழுதியுள்ளார். அறிஞரான வில்லியம் ராம்சே பரிசுத்த வேதாகமத்தின் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தையும், 4 சுவிசேஷங்களில் ஒரு சுவிசேஷத்தையும் எழுதிய லூக்காவைக் குறித்து "லூக்கா ஒரு முதல்தரமான சரித்திர ஆராய்ச்சியாளர்" என்று தெரிவிக்கிறார்..

திறந்த மனதோடும், தெளிந்த புத்தியோடும் பரிசுத்த வேதாகமத்தை வாசித்தவர்களும், அதனை ஆராய்ச்சி செய்தவர்களும் மாற்றப்பட்டார்கள். பரிசுத்த வேதாகமம் ஜீவ வசன

வார்த்தைகளை உள்ளடக்கியது. வில்லியம் ராம்சேயை மாற்றிய பரிசுத்த வேதாகமம் உங்களையும் மாற்ற வல்லது. பரிசுத்த வேதாகமத்தை திறந்த மனதோடும், தெளிந்த புத்தியோடும் வாசித்துப் பாருங்கள். அது உங்கள் பாவ சிந்தனைகளை, பாவப் பழக்க வழக்கங்களை, பாவ வாழ்க்கையை மாற்றும். உங்களுடைய கொடிய குணங்களை, சுபாவங்களை மாற்றும். உங்கள் வாழ்க்கையின் நம்பிக்கை நட்சத்திரமாக, ஒளிவிளக்காக மாறும். நித்ய ஜீவனைத்தரும். சத்தியத்தை சத்தியமாக போதிக்கும் சத்தியவேதம் பரிசுத்த வேதாகமம் மட்டுமே

தீர்க்கமான வேதம்

உலகத்தின் புத்தகங்கள் எல்லாம் நடந்தவற்றைச் சொல்லும், நடக்கின்றவற்றை சொல்லும். ஆனால் பரிசுத்த வேதாகமம் ஒன்று மாத்திரமே, நடந்தவற்றை மாத்திரமல்ல, நடக்கின்றவற்றை மாத்திரமல்ல, நடக்கப்போகின்றவற்றையும் கூறக்கூடிய தீர்க்கதரிசனங்களை உள்ளடக்கியதாயிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்தில் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசன சம்பவங்களில் சுமார் 590 குறிப்புகள் இதுவரையில் நிறைவேறிவிட்டதாகவும், இன்னும் 20 சம்பவங்கள் மாத்திரமே நிறைவேற வேண்டுமென்றும் ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டுள்ளனர்.

பரிசுத்த வேதாகமத்தின் 27 சதவிகித வார்த்தைகள் தீர்க்கதரிசன வார்த்தைகளாகவே இருக்கின்றன. உலகத்தின் வேறு எந்தப் புத்தகத்திற்கும் இல்லாத ஒரு தனித்தன்மை உலகில் நடைபெறப் போகின்றவற்றை கூறுகிற தீர்க்கத் தரிசனங்களை பரிசுத்த வேதாகமம் பெற்று இருப்பதே.

Sir John Lobbock என்பவர் உலகத்தின் மிகச் சிறப்பான புத்தகங்களை வரிசைப்படுத்தியிருக்கிறார். அவர் வரிசைப்படுத்தியதில் உலகத்தின் தலைசிறந்த நூறு புத்தகங்களுள் முதல் நூலாக அப்பட்டியலின் ஆரம்பத்தில் இடம்பெறுவது பரிசுத்த வேதாகமமே.

பரிசுத்த வேதாகமம் தனித்தன்மை வாய்ந்தது. இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆசிரியராகிய பரிசுத்த ஆவியானவரால் எழுதப்பட்டது. தேவன் மனிதனுக்கு அளித்த மாபெரும் பொக்கிஷமாகிய பரிசுத்த வேதாகமத்திற்காய் தேவனுக்கு ஸ்தோத்திரம். அதற்காக அந்த சர்வவல்ல தேவனை நாம் நன்றியோடு ஸ்தோத்தரிப்போம்.

முதல் மனிதன் தோன்றியது எங்கே? வரலாற்றை திருத்தும்

புதிய முடிவு

"உலகின் முதல் மனிதன் மேற்கு ஆசியாவில்தான் தோன்றினான்" என இஸ்ரேல் நாட்டு விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இதுநாள் வரையில் கடந்த இரண்டு லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஹோமோசேப்பியன் என்ற இனத்தில் இருந்துதான் நவீன மனிதன் தோன்றினான் என்றும், முதன் முதலில் ஆப்பிரிக்காவில் தோன்றிய இந்த ஹோமாசேப்பியன் இனத்தவர் படிப்படியாக ஐரோப்பா, மேற்கு ஆசியா மற்றும் இதர ஆசியப் பகுதிகள் நோக்கி இடம் பெயர்ந்தனர் எனவும் வரலாற்று அறிஞர்களால் நம்பப்பட்டு வந்தது.

சமீபத்தில் இஸ்ரேல் நாட்டில் உள்ள பென்-குரியான் விமான நிலையம் அருகில் இருக்கும் குகை ஒன்றில் (குசேம்), அந்நாட்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது நான்கு இலட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஆதிமனிதனின் உடல் படிவங்களை கண்டெடுத்துள்ளனர். இது குறித்து டெல் அவிவ் பல்கலை விஞ்ஞானிகள் கூறியதாவது: நான்கு இலட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஹோமோ சேப்பியன்களின் உடல் படிவங்கள் "குசேம்" குகையில் கிடைத்துள்ளன. மனித பல் போன்றுள்ள இந்த படிமம் மத்திய "பிளைஸ்தோகின்" காலத்தை சேர்ந்தது. இதை ஆய்வு செய்ததில் உலகின் முதல் மனிதன் மேற்கு ஆசியாவில்தான் தோன்றினான் என தெரிய வந்துள்ளது. மேலும் மேற்கு ஆசியாவில் இருந்துதான் உலகின் பிற பகுதிகளுக்கும் பரவியுள்ளான் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

ப்பிரிக்காவில் தான் முதல் ஹோமோ சேப்பியன் தோன்றினான் எனவும் உலகின் தாய்வீடு ஆப்ரிக்கா எனவும் இதுவரை கூறப்பட்டு வந்த நிலையில், இஸ்ரேல் நாட்டு விஞ்ஞானிகளின் புதிய முடிவுகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. இதன் மூலம் நவீன கால மனிதனின் தோற்றம் குறித்த வரலாறு திருத்தி எழுதப்படும் என தெரிகிறது.

இந்த செய்தியை உங்களில் சிலர் படித்திருக்கலாம். 2.1.2011 அன்று தினமலர், பாண்டிச்சேரி பதிப்பில் இது வெளிவந்திருந்தது. இந்த செய்தியின் மூலம் மனிதன் இஸ்ரேல் நாட்டில் தான் முதல்முதலாய் தோன்றினான் என்பது உறுதியாகிறது. இந்த செய்தி வருவதற்கு முன்பே சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன்பே கிறிஸ்தவ வேதமான "பைபிள்" மனிதன் இஸ்ரேல் நாட்டில்

தேவனால் படைக்கப்பட்டான் என்று கூறுகிறது. இன்னும் பல அறிவியல் உண்மைகளை திருமறையின் மூலம் நாம் அறிய முடிகிறது. அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி 38-ம் அதிகாரம் 10-ம் வசனத்தில் யூதர்களை தேசத்தின் நடுவில் குடியிருக்கும் ஜனமென்று சொல்லுகிறார். ஆங்கில மொழிபெயர்ப்பில் உலகத்தின் மையத்தில் வசிப்போர் (Who dwell at the centre of the earth) என்று சொல்லப்பட்டிருக்கிறது. உலக வரலாற்றின் வரைபடம் வரையப்படும் முன்பே பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இஸ்ரேல் என்ற நாடு தேசங்களின் நடுவில் உள்ளது என்ற உண்மை பைபிளில் எழுதப்பட்டுள்ளது.

அந்தரங்கத்தில் தொங்கும் பூமி

"தேவன் உத்தரமண்டலத்தை வெட்ட வெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்க வைத்திருக்கிறார்" என்று யோபு 2:17 கூறுகிறது.

கி.பி.153-ல் ரீன்விஷ் என்ற விஞ்ஞானி பூமி அந்தரத்தில் தொங்கவிடப்பட்டிருக்கிறது என்று கண்டுபிடித்தார். அந்த உண்மை பைபிளில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்போலவே பூமி உருண்டை என்ற உண்மையையும் அதில் எழுதப்பட்டுள்ளது. இதுபோன்று பைபிளில் சொல்லப்பட்ட பல அறிவியல் உண்மைகள் எல்லாம் பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் உண்மையென்று அறிவியல் மேதைகள் கண்டுபிடித்து உலகிற்கு சொல்லி வருகின்றனர்.

மனித இனம் படைக்கப்பட்டது குறித்து டார்வின் ஒரு பரிணாமக் கொள்கையை கூறுகிறார். ஆனால் டார்வின் தன் பரிணாமக் கொள்கையை உறுதியாகச் சொல்லவில்லை. "இருக்கலாம்" என்றே கூறுகிறார். நியூயார்க் நகரிலுள்ள விஞ்ஞானக் கல்லூரி ஒன்றின் முன்னாள் தலைவர் ஏ. கிரேசி மாரிசன் (A. Crassy Maurison) கணித சாஸ்திரத்தின் அடிப்படையில் "இப்பூமியும் அதிலுள்ள யாவும் தேவனால் உண்டாக்கப்பட்டவைகள் என்றும், அவைகள் தாமாகவே பரிணாமக் கொள்கையின்படி தோன்றியிருக்க முடியாது என்று நிரூபிக்க முடியும்" என்று உறுதியாகக் கூறினார்.

புகழ்பெற்ற வேதியல் நிபுணர் டாக்டர் எட்வின் இ. சுலோசன் என்பவர் "பூமியிலுள்ள மண்ணிலிருந்து மனிதன் உருவாக்கப்பட்டான் என்று வேதம் கூறுகிறது. இது

அறிவியலின்படி உண்மையாகும். பூமியின் மண்ணில் 14 இரசாயனப் பொருட்கள் உள்ளன. அதே 14 இரசாயனப் பொருட்கள் மனிதன் உடலிலும் உள்ளன" என்று கூறியுள்ளார். *"தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானவன்"* என்று ஆதியாகமம் 2:8 கூறுகிறது. அவனை ஏதேன் தோட்டத்தில் வைத்தார் என்றும் திருமறையில் காண்கிறோம். பூமியில் தேசங்களின் நடுவில் உள்ள இஸ்ரேல் நாட்டில் மனிதன் தேவனால் மண்ணிலிருந்து படைக்கப்பட்டான் என்ற திருமறையின் வார்த்தைகள் என்றும் மறுக்க முடியாத விஞ்ஞான உண்மைகளாகும்.

இஸ்ரேல் ஒரு நாகரீக நாடாக திகழ்ந்த காலத்தில் ஆப்பிரிக்க நாடாகிய எத்தியோப்பியா நாடும், நாகரீக நாடாக இருந்தது என்பதை வேதத்தில் காண்கிறோம். மோசஸ் எத்தியோப்பியா ராணியை திருமணம் செய்த செய்தி திருமறையில் உண்டு. இஸ்ரேல் நாட்டில் படைக்கப்பட்ட மனித இனம் ஆப்பிரிக்க நாட்டிற்கு சென்றிருக்கக்கூடும். ஆதலால் அங்கு கிடைக்கப்பெற்ற தடயங்களைக் கண்டு மனிதனின் பூர்வீக இடம் ஆப்பிரிக்கா என்று விஞ்ஞானிகள் முதலில் கருதி வந்தனர் போலும்.

கடவுள் ஒருவரே. அவர் மனிதனால் படைக்கப்படவில்லை

"இதோ, நான் மாமிசமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்" (எரேமியா 32:7). *"மனுஷன் தனக்கு தேவர்களை உண்டு பண்ணலாமா? அவைகள் தேவர்கள் அல்லவே"* என்று வேதம் கூறுகிறது. இந்த வானத்தையும், பூமியையும், நம்மையும், இந்த உலகில் உள்ள சகல ஜீவராசிகளையும் படைத்த அந்த சர்வ வல்ல சர்வேஸ்வரனாகிய இறைவன் இஸ்ரவேலர்களுக்கோ அல்லது கிறிஸ்தவர்களுக்கோ மாத்திரம் தேவனல்ல. அவர் ஜாதி, மத, இன, மொழி, தேசம் என்ற எந்த பாகுபாடுகளும் இன்றி அனைவருக்கும் நான் ஒருவனே தேவன் என்று கர்த்தர் கூறுகிறார். அவர் மேலும் எரேமியா 16:20 மூலம் நம் ஒவ்வொருவரையும் பார்த்துக் கேட்கிறார். கடவுள் மனிதரைப் படைத்தாரா? இல்லை மனிதன் கடவுளைப் படைத்தானா? மனிதன் படைப்பது கடவுளாக இருக்க முடியுமா? சற்றே யோசித்துப் பார்ப்போம். இந்த பிரபஞ்சத்தை படைத்த தேவன் ஒருவராகத்தான் இருக்க முடியும். பலராக இருக்க முடியாது. இந்த அகிலத்தைப் படைத்த அந்த அகிலாண்டேஸ்வரன் யார் என்று நமது இந்துமத வேதங்களும், வேதாந்தங்களும், புராணங்களும், பாடல்களும், ஞானிகளும், சித்தர்களும் கூறி

இருக்கின்றனர். அவைகளை எல்லாம் தொகுத்து "சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்", "உண்மையான கடவுள் யார்?", "சைவமும், வைணவமும் கிறிஸ்தவமே" என்ற நூல்களையும், "முக்திக்கு வழி கிறிஸ்தவமே" என்ற வீ.சி.டி.யையும் மற்றும் கதாகாலட்சேப சீடியையும் வாங்கி பாருங்கள். படியுங்கள். எல்லாமே ரூபாய் 10 மட்டுமே. தபால் செலவு தனி. உண்மையான கடவுள் யார் என்ற தெளிவு பெறுவீர்கள். இது மத மாற்றமல்ல. மனமாற்றம். நாமும், நாம் நேசிக்கின்ற அனைவரும் முக்தி அடைய, பரலோக பிரஜைகளாக மாற பரிசுத்த வேதாகமம் உங்களை வழிநடத்தும். மனிதனால் படைக்கப்பட்டவைகளை விட்டுவிட்டு, நம்மை படைத்த தேவனை துதிப்போம். நித்ய ஜீவனை பெற்றுக் கொள்வோம்.

ஏலியன்கள் பூமிக்கு வந்தால்... அமெரிக்க விஞ்ஞானிகள் பரபரப்பு

வாஷிங்டன், ஜன.23 - "வேற்றுக் கிரகவாசிகள் (ஏலியன்) பூமிக்கு வந்து மனிதர்களுடன் சண்டையிடுவதுபோல், ஹாலிவுட் திரைப்படங்களில் நாம் பார்ப்பது விரைவில் நிஜமாக வாய்ப்பு உண்டு" என அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்த கருத்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க விண்வெளி அமைதி நடவடிக்கைகள் கமிட்டியின் சார்பில் "ஏலியன்கள் பூமியை தாக்கினால் என்ன செய்வது?" என்பது பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்படி பூமிக்கு வரும் ஏலியன்கள் வன்முறை வெறியர்களாக இருப்பர் எனவும், இங்குள்ள இயற்கை வளங்களை சுயநலம் காரணமாக சுரண்டுவர் எனவும் அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

அறிவியல் முதல் மதம் வரையில் உள்ள அனைத்து வழிகளையும் பயன்படுத்தி, பூமியை தாண்டியுள்ள கிரகங்களில் ஏலியன் போன்ற உயிரினங்கள் ஏதேனும் இருக்கிறதா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அப்படி ஏலியன் அல்லது பிற உயிரினங்கள் இருந்தால், அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கான சாத்தியக்கூறுகளையும் அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

அவ்வாறு ஏலியன்கள் பூமிக்கு வரும்போது, நாம் மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் பற்றியும் அவர்கள் ஆலோசனை நடத்தி வருகின்றனர். பூமிக்கு வரும் ஏலியன்கள் வன்முறையில் ஈடுபட்டால், அவர்களை விண்வெளி அமைதி

நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக, அமெரிக்கா சார்பில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள பிரிவினர் சமாளிப்பர் எனவும், உலக நாடுகள் அனைத்தும் இந்த விஷயத்தில் அரசியல் மற்றும் ஜாதி மத பேதம் ஏதும் இல்லாமல் ஒருங்கிணைந்து செயல்படுவதோடு, இதற்காக சர்வதேச கண்காணிப்புக் குழு ஒன்றையும் ஏற்படுத்த வேண்டும் எனவும் விஞ்ஞானிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்க விஞ்ஞானிகளின் கருத்து, அறிவியல் உலகில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இதற்கு மறுப்பு தெரிவித்துள்ளனர். இதுகுறித்து பரிணாமவியல் பேராசிரியர் சைமன் கான்வே மோரிஸ் கூறும்போது, "பூமியைத் தாண்டியுள்ள இந்த பிரபஞ்சத்தில் "ஏலியன் என குறிப்பிட்ட யாரும் இருக்க வாய்ப்பில்லை. மற்ற கிரகங்களில் உயிரினங்கள் இருந்தால், அது டார்வின் கொள்கை அடிப்படையில் தான் தோன்றி வளர்ச்சி பெற்றிருக்க முடியும். ஹாலிவுட் படங்களில் வருவதுபோல், விகாரமான தோற்றங்களில் இருக்க வாய்ப்பில்லை. மேலும், அவர்கள் வன்முறையில் ஈடுபட்டு, பூமியில் உள்ள வளங்களை ஒருபோதும் சுரண்டவும் வாய்ப்பில்லை. ஏலியன் குறித்து அச்சம் தேவையற்றது" என்றார் - தினமலர் 23.1.2011, சென்னை பதிப்பு.

விநோத உயிரினங்கள் நம்மைத் தாக்கும் அபாயம்

தினமலர் (சென்னை பதிப்பு) 23.1.2011-ம் நாள் வெளிவந்த இந்த செய்தியை சிலர் படித்திருக்கலாம். இப்படியும் நடக்குமா என்ற எண்ணம் உங்கள் இதயத்தில் எழக்கூடும். ஆனால், பரிசுத்த வேதாகமத்தில் யோவேல் 2:2-12-ஐ படித்துப் பாருங்கள். நாம் காணும் செய்தி இது உண்மையாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

"அது இருளும் அந்தகாரமுமான நாள், அது மப்பும் மந்தாரமுமான நாள், விடியற்கால வெளுப்பு பர்வதங்களின்மேல் பரவுகிறதுபோல ஏராளமான பலத்த ஒரு ஜாதி தீவிரமாக வந்து பரவும், அப்படிப்பட்டது முன் ஒரு காலத்திலும் உண்டானதுமில்லை. இனித்தலைமுறை தலைமுறையாக வரும் வருஷங்களிலும் உண்டாவதுமில்லை. அவைகளுக்கு முன்னாக அக்கினி பட்சிக்கும், அவைகளுக்குப் பின்னாக ஜுவாலை எரிக்கும், அவைகளுக்கு முன்னாகத் தேசம் ஏதேன் தோட்டத்தைப்போலவும், அவைகளுக்குப் பின்னாகப் பாழான வனாந்தரத்தைப்போலவும் இருக்கும். அவைகளுக்கு ஒன்றும் தப்பிப்போவதில்லை. அவைகளின் சாயல் குதிரைகளின் சாயலை

ஒத்தது. அவைகள் குதிரை வீரரைப்போல ஓடும்.

அவைகள் ஓடுகிற இரதங்களின் இரைச்சல்போலவும், செத்தைகளை எரிக்கிற அக்கினிஜுவாலையின் இரைச்சல் போலவும், யுத்தத்துக்கு ஆயத்தப்பட்ட பலத்த ஜனத்தின் இரைச்சல் போலவும், பர்வதங்களுடைய சிகரங்களின்மேல் குதிக்கும். அவைகளுக்கு முன்பாக ஜனங்கள் நடுங்குவார்கள். எல்லா முகங்களும் கருகிப்போகும். அவைகள் பராக்கிரமசாலிகளைப் போல ஓடும். யுத்த வீரரைப்போல மதிலேறும். வரிசைகள் பிசகாமல், ஒவ்வொன்றும் தன் தன் அணியிலே செல்லும்.

ஒன்றை ஒன்று நெருங்காது. ஒவ்வொன்றும் தன் தன் பாதையிலே செல்லும். அவைகள் ஆயுதங்களுக்குள் விழுந்தாலும் காயம்படாமற்போகும். அவைகள் பட்டணம் எங்கும் செல்லும். மதிலின்மேல் ஓடும், வீடுகளின்மேல் ஏறும். பலகணி வழியாய்த் திருடனைப்போல உள்ளே நுழையும். அவைகளுக்கு முன்பாகப் பூமி அதிரும். வானங்கள் அசையும். சூரியனும், சந்திரனும் இருண்டு போகும். நட்சத்திரங்கள் ஒளி மங்கும்.

"கர்த்தர் தமது சேனைக்கு முன் சத்தமிடுவார். அவருடைய பாளயம் மகா பெரிது. அவருடைய வார்த்தையின்படி செய்கிறதற்கு வல்லமையுள்ளது. கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும். அதைச் சகிக்கிறவன் யார்? ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும், அழுகையோடும், புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று வேதத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. வேதத்தில் நாம் படிக்கும் இந்தப் பகுதி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இப்படி நடக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. வேதத்தில் காணும் பல வரலாற்று உண்மைகள் அப்படியே நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகையால் இந்தச் செய்தி நம்மை சிந்திக்கத் தூண்டுகிறது.

இந்த திருமறைச் செய்தி அறிவியல் கண்டுபிடிப்பான ரோபட் என்ற யுத்தத்திற்கு பயன்படுத்தும் இயந்திர மனிதனாகவும்கூட இருக்கலாம். எது எப்படி இருப்பினும் நாம் நம்மைப் படைத்த மெய்தேவனை அறிந்து, நமது பாபத்தை விட்டு விலகி, தூய வாழ்க்கை நடத்தி, தேவனை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும். காலம் கடந்து கொண்டு இருக்கிறது. ஆண்டவருடைய வருகை மிகவும் சமீபமாக இருக்கும் என்று வேத

வல்லுனர்கள் கூறுகின்றனர். அழிவுக்கு தப்பிக்க இன்றே அந்த பரம தேவனாகிய இயேசுவை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.

"என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்" (யோவான் 5:24) என்கிறார் இயேசு. *"நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்"* என்ற இயேசு கிறிஸ்துவைப் பற்றி மேலும் அறிய அருகில் உள்ள ஒரு திருச்சபைக்கு செல்லுங்கள். வேதத்தை படியுங்கள். அதன்படி நடவுங்கள்.

வேதம் காட்டும் அறிவியல் உண்மைகள்

எனக்கு பைபிளை முழுமையா, ஆழமா படிச்சாப் பிறகுதான் அதில இல்லாத விஷயம் என்று ஒன்றுமே கிடையாது. எல்லாமே அதுல இருக்குது. அதில விண்ணியல் இருக்கு, மண்ணியல் இருக்கு, உயிரியல், உடலியல், அறிவியல், பொறியியல், விஞ்ஞானம், மெய்ஞானம், அறநெறி, வாழ்க்கை நெறி, சமூக நெறி, அரசு நெறி என இப்படி சொல்லி மாளாத விஷயங்கள் அதுல இருக்கின்றன. கண்ணையும், மனசையும் நல்லாத் திறந்துக்கிட்டு தேவ ஆவியின் அருளோடு, பயபக்தியாய் நாம பரிசுத்த வேதாகமத்தைப் படிக்கணும். அப்போத்தான் புரியாத பல வேத ரகசியங்கள் எல்லாம் நம்மோட மரமண்டைக்குப் புரியும் என்று நான் புரிந்து கொண்டேன்.

நம்மோட வெறும் மனுஷ அறிவுல, படிப்பு அறிவுல, அனுபவ அறிவுல, பரிசுத்த வேதாகமத்தை அலசி ஆராய்ந்து பார்க்கக்கூடாது. அப்படிப் படிச்சா வெறும் குழப்பங்கள்தான் மிஞ்சும். அப்படி தன்னோட மண்டை அறிவுனால மட்டுமே வேதாகமத்தை ஆராய்ந்து பார்த்துட்டு என் சொந்த ஊரான சாத்தூரில் தன்னை அதிமேதாவின்னு நினைச்சுக்கிட்டு இருக்கிற ஜெகதீசன் என்ற ஒருவர் பைபிளை தலைகீழா படிச்சுட்டு, ஒவ்வொண்ணுக்கும் அனர்த்தமா வியாக்கியானம் பண்ணி, பைபிள் வெறும் ஒரு புரட்டு, இயேசு ஒரு சாதாரண மனுஷர் அப்படீன்னு எல்லாம் எழுதி அதை டைப் செய்து, எனக்கு இரண்டு, மூணு தடவை அனுப்பி இருந்தார். ஒரே ஒரு தடவை மாத்திரம் அவர் எழுதி இருந்த குப்பையை படிச்சேன். அதுக்கப்புறம் அவர் எழுதினதை நான் படிக்காமலேயே கிழிச்சுப் போட்டுட்டேன். அவர் தன்னோட பெயரை மட்டும்தான் அதில போட்டிருந்தாரே ஒழிய,

அவரோட விலாசத்தையோ, டெலிபோன் நம்பரையோ அதில எழுதலை. தைரியம் இருந்தா எழுதி இருக்கணும். நானும் பதில் எழுதியிருப்பேன். பிசாசு சிலபேரை இப்படித்தான் குழப்பி அவங்களை கெடுப்பான். பாவம் இந்த ஜெகதீசன். இந்த ஜெகத்துக்கே ஈசனான இயேசு கிறிஸ்துவையும் புரிஞ்சுக்கிடலை. தேவ ஆவியினால் அருளப்பட்ட பரிசுத்த வேதாகமத்தையும் புரிஞ்சுக்கிடலை.

அப்பவே நினைச்சேன். பரிசுத்த வேதாகமத்தைக் குறிச்சும், அதன் மேன்மை, சிறப்பு, தனித்தன்மை, அது எவ்வளவு ஆதாரப்பூர்வமான வரலாறு, சரித்திரம் மற்றும் அதனுடைய ஈடு இணையற்ற தன்மை எல்லாவற்றையும் தெளிவா விளக்கி, ஆதாரத்தோட ஒரு புத்தகம் எழுதணும். இதுபோல இன்னும் எத்தனையோ ஜெகதீசன்கள் இருக்காங்களே. அவங்களும் கெட்டுப்போகாதபடிக்கு, அவங்களோட அகக் கண்களும் திறக்கப்படணுமேன்னு நினைச்சு ஜெபிச்சேன். ஆண்டவர் அதுக்கு வழிவாசல்களைத் திறந்தார்.

முதலில் ஜஸ்டின் பிரபாகரனின் புத்தகம் எனக்குக் கிடைச்சது. அடுத்து சகோ. ஆல்பிரட் ஸ்டீபன் எழுதிய "திருமறை காட்டும் அறிவியல் உண்மைகள்" என்ற புத்தகமும் கிடைச்சது. இதைத்தான் தேவகிருபை, தேவசித்தம், தேவ வழி நடத்துதல் என்பது. எனக்குத் தேவையான புத்தகங்கள், மெட்டீரியல்ஸ் எங்கெங்கிருந்தோ, எப்படியாவது ஏற்ற வேளையில எனக்குக் கிடைச்சிடும். நான் எழுதுற ஒவ்வொரு புத்தகத்திற்குமே இப்படித்தான் ஏதாவது அற்புதம் நடக்கும். ஆரம்பத்தில ஏகப்பட்ட தடைகள் வரும். ஆனா அது அத்தனையும் மீறி கடைசியில அற்புதமும் நடக்கும்.

சகோ.ஆ. ஆல்பிரட் ஸ்டீபன், M.A., M.A. Th., DBE., CJ & MC படித்தவர். வேத பண்டிதர்கள் சங்கத்தில் அவர் ஒரு உறுப்பினர். 1965 முதல் "உறையூர் வளவன்"கிற பெயர்ல இவர் அநேகம் பொது அறிவு நூல்களையும், கதை, கட்டுரைகளையும் எழுதி இருக்கிறார். "இந்து மதம் இந்திய மதமா?" என்ற சமய ஆராய்ச்சி நூல் ஒரு புரட்சிப்படைப்பாகும். "தமிழ்நாடு சுவிசேஷ சமூக நல மையம்" என்ற ஒரு ஊழிய நிறுவனத்தை திருக்கோவிலூரில் ஏற்படுத்தி பல நண்பர்களையும் அதில் இணைத்து இறைப்பணி செய்து வருகிறார்.

சகோ. ஆல்பிரட் எழுதிய "திருமறை காட்டும் அறிவியல் உண்மைகள்" என்ற ஒரு சிறிய நூலைப் படித்தேன். மிக நுணுக்கமாக, பிரமாதமாக வேதத்தை ஆராய்ந்து அது

அறிவியலோடு எவ்வளவு ஆழமா, நெருக்கமா சம்பந்தப்பட்டு இருக்கிறது என்பதை மிகத் தெள்ளத் தெளிவாக எழுதி இருந்தார். அவரைத் தொடர்பு கொண்டு அவர் எழுதியுள்ளவைகளை எனது நூலில் எழுதி வெளியிட அவரின் அனுமதியைக் கோரினேன். மிகவும் சந்தோஷத்தோடு அனுமதி அளித்தார். அவருக்கு என் நன்றி உரியது. கர்த்தர் அபரிமிதமாக அவரை ஆசீர்வதித்து, இன்னும் இது போன்ற பல புத்தகங்களை எழுத கிருபை தருவாராக.

ஆன்மீகமும், அறிவியலும் ஒன்றோடு ஒன்று இணையாக இணைந்து காட்டுவது பரிசுத்த வேதாகமம் மட்டுமே. அறிவியலின் அடிப்படையில் உள்ள திருமறை காட்டும் போதகங்களை உலகம் பின்பற்றினால்தான் மனித சமுதாயம் மேம்படும். உலகம் ஒரே குடும்பமாக அமையும். ஒற்றுமையும், சமாதானமும், சகோதரத்துவமும், சமத்துவமும் நிலவி, தீவிரவாதம், வன்முறைகள், மதக்கலவரங்கள், ஜாதி ஏற்றத்தாழ்வுகள் இல்லாத ஒரு அமைதிப்பூங்காவாக மாறும். அதற்காக வேதத்தை அறிந்த அனைவரும் கண்ணீரோடு முழங்கால் படியிட்டு கர்ப்ப வேதனைப்படுவோம். பாரத பூமியை பரலோக பூமியாக்கி அதை அந்த பரமனுக்கே பாதப்படியாக்குவோம்.

அறிவியல் காட்டும் மெய்ப்பொருள்

ஆன்மீக கருத்துக்களோடு அறிவியல் உண்மைகள் ஒத்துப் போவதில்லை என்றே பலரும் கருதுகின்றனர். ஆனால், பல அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு ஆன்மீக கருத்தே காரணமாயிருக்கிறது என்ற உண்மையை பரிசுத்த வேதாகமத்தின் மூலம் நாம் அறிய முடிகிறது.

ஆதாம், ஏவாள் தேவனால் படைக்கப்பட்டவர்கள் என்று வேதம் கூறுகிறது. ஆனால் டார்வின் கொள்கைப்படி மனிதர்கள் குரங்கிலிருந்து வந்தவர்கள் என்கிறதே என அறிவியல் வினா உங்கள் உள்ளத்தில் எழும்புகிறது இல்லையா? அறிவியல் கண்டுபிடிப்புகள், புதிய கண்டுபிடிப்பு வரை தான் உண்மைகளாய் இருக்கும். அது மாறக்கூடியது. குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற கொள்கை உண்மை என்றால், குரங்கைப்போல வேறு ஒரு ஜீவனிடமிருந்தும் ஏன் மனிதரைப்போல் ஒன்று உருவாகியிருக்கக்கூடாது? அவர் கொள்கைப்படி அப்படி உருவாகியிருக்க வேண்டுமே படிப்படியான மாற்றம் குரங்கில் மட்டும்தான் ஏற்பட்டிருக்க வேண்டுமா? இது சிந்திக்கப்பட வேண்டிய ஒரு கருத்து. இல்லையா?

இப்பொழுது பைபிள் காட்டும் அறிவியல் உண்மைகளில்

சிலவற்றை மட்டும் பார்ப்போம். அந்த அறிவியல் உண்மைகள் எவ்வளவு உண்மையோ, அப்படியே அது காட்டும் மெய்தேவனும் உண்மை மெய்ப்பொருள் காண்பது அறிவு.

"இலக்கியம் என்பது உலகைச் சீர்திருத்த வேண்டும். தெய்வீகத் தன்மையை உலகுக்கு உணர்த்த வேண்டும். ஆன்மீக ஒளிக்கும் மனித பிறவிக்கும் உறவை உண்டு பண்ண வேண்டும்" என்கிறார் பேராசிரியர் டாக்டர் இராதாகிருஷ்ணன். இதனை இலக்கணமாகக் கொண்டு ஓர் இலக்கிய ஆன்மீக, அறிவியல் நூலைத் தேடினால், நமக்கு கிடைப்பது வேதாகமம் மட்டுமே. அதனால்தான் அதை Living Bible அதாவது ஜீவனுள்ள திருமறை என்று அழைக்கிறாாகள்.

"வானங்களை சிருஷ்டித்துப் பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதை குடியிருப்பதற்காக உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்கிறதாவது. நானே கர்த்தர், வேறொருவர் இல்லை" (ஏசாயா 45:18) என்று திருமறையில் ஏசாயா தீர்க்கதரிசி எழுதியுள்ளார். இங்கு வானங்கள் என்பது வானத்தில் உள்ள கிரகங்களை குறிப்பிடுகிறது. பூமி மட்டுமே மனிதர்கள் வாழக்கூடியதாக தேவன் உருவேற்படுத்தினார் என்கிறது வேதம்.

1969-ம் ஆண்டு, ஜூன் மாதம், 21-ம் நாள் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஆம்ஸ்டராங் முதல் முதலாக சந்திரனில் இறங்கி உலகத்தையே வியப்புறச் செய்தார். அதன்பின் பல நாடுகள் கூட்டு முயற்சியாக சந்திரனில் குடியேற முடியுமா என்ற ஆய்வில் ஈடுபட்டன. ஆனால் பூமி மட்டுமே மனிதர்கள் வாழ தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டது என்று வேதம் கூறுகிறது.

"நீ கழுகைப்போல உயரப்போனாலும், நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத்தள்ளுவேன்" என்று ஒபதியா 1:4-ல் கர்த்தர் சொல்கிறார். ஆம்ஸ்ட்ராங் சென்ற வான ஊர்தியின் பெயர் ஈகிள் (Eagle). இன்று பல நாட்டு விஞ்ஞானிகள் ஆய்வு செய்து மனிதர்கள் சந்திரனில் உயிர் வாழ முடியாது என்று கண்டுபிடித்த முடிவை தேவன் அன்றே நமக்கு வெளிப்படுத்திவிட்டார்.

அதுமட்டுமல்ல 1969-ம் ஆண்டு ஆம்ஸ்ட்ராங் சந்திரனிலிருந்து ஒரு பாறையைக் கொண்டு வந்தார். அது மிகவும் உறுதியாய் இரும்பைவிட கடினமாய் இருந்தது என்று விஞ்ஞானிகள் தங்கள் கருத்தை தெரிவித்தனர். ஆனால் திருமறை சங்கீதம் 89:37-ல்

"சந்திரனைப் போல அது என்றென்றைக்கும் உறுதியாகவும், ஆகாயத்து மண்டலத்துக் காட்சியைப் போல் உண்மையாயும் இருக்கும் என்று விளம்பினீர்" என்று எழுதப்பட்டுள்ளது.

சுமார் 3200 ஆண்டுகளுக்கு முன்பே சந்திரன் என்றென்றைக்கும் உறுதியானது என்று தாவீது எழுதி வைத்துள்ளார். அதுமட்டுமல்ல, ***"சந்திரனைக் காலக் குறிப்புகளுக்காக படைத்தார்"*** என்று சங்கீதம் 104:14-ல் அன்றே எழுதி வைக்கப்பட்டுள்ளது. சந்திரனின் தோற்றம், மறைவு ஆகியவற்றின் அடிப்படையில்தான் மாதங்கள் கணக்கிடப்பட்டன. சந்திரன் பூமியை ஒருமுறை சுற்றிவர 29½ நாட்கள் ஆகிறது. இவ்வாறு 12 முறை சுற்றிவர 354¼ நாட்கள். இதை சந்திர வருடம் (Lunar Year) என்று கணக்கிட்டனர். அதன் பின் சூரிய வருடம் (Solar Year) 365¼ நாட்கள் என்று கணக்கிடப்பட்டது.

ஒரு காலத்தில் பூமி தட்டையானது என்று மக்கள் கருதி இருந்தனர். கி.பி.1530-ல் ரீன் விஷ் என்ற விஞ்ஞானி பூமி அந்தரத்தில் தொங்கவிடப்பட்டிருக்கிறது என்று கண்டுபிடித்தார். ஆனால் பைபிளில் 3000 ஆண்டுகளுக்கு முன்பே ***"தேவன் உத்தரமண்டலத்தை வெட்ட வெளியிலேயே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்க வைத்திருக்கிறார்"*** என யோபு 26.17-லிலும், ***"தேவன் பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர்"*** (ஏசாயா 40:22) என்றும், பூமி உருண்டையாக உள்ளது என்றும் அன்றே வேதத்தில் எழுதப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல ரோபட் போன்ற இயந்திர மனிதனைப் பற்றியும், அது போர்க்காலத்தில் பயன்படுத்தப்படும் என்று வேதத்தில் உள்ளது. ***"அவைகள் பராக்கிரமசாலிகளைப் போல ஓடும். யுத்த வீரனைப் போல மதிலேறும், வரிசைகள் பிசகாமல், ஒவ்வொன்றும் தன் தன் அணியாக செல்லும்"*** என யோவேல் 2:7-ல் எழுதப்பட்டுள்ளது. இதுபோன்ற அறிவியல் உண்மைகளைக் கொண்ட திருமறை இறைவனைப் பற்றிக் கூறுவதும், நூற்றுக்கு நூறு உண்மை என்று நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

கி.மு.740-ல் வாழ்ந்த ஏசாயா என்ற தீர்க்கதரிசி கிறிஸ்து இஸ்ரவேல் நாட்டில் ஒரு கன்னிப்பெண் வயிற்றில் பரிசுத்த ஆவியால் பிறப்பார் என்றும், ஜீவபலியாய் தன்னை ஒப்புக்கொடுத்து நம்மை பாவத்திலிருந்து மீட்டுக் கொள்வார் என்றும் எழுதிவைத்தார். அதன்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உதித்தார் என்பது வரலாற்று உண்மை. இந்து மத வேதங்களிலும் அவர் பிறப்பு எழுதப்பட்டுள்ளது. மத்திய ஆசியாவிலிருந்து

இந்தியாவிற்கு வந்த ஆரியர்கள், யூத மத கருத்துக்களை உள்ளடக்கிய வேதங்களை இந்தியாவிற்கு ஏற்ப எழுதி வைத்தார்கள். ஆகையால், இயேசுவின் பிறப்பு இந்திய வேதங்களிலும் காண முடிகிறது. தீர்க்க தரிசிகள் எழுதிவைத்ததைப் போல இயேசு கிறிஸ்து நமக்காக ஜீவபலியாய் தன்னை ஒப்புக் கொடுத்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அறிவியல் உண்மைகளைப் போல் இந்த வரலாற்று உண்மையும் சமய் வரலாற்று ஆராய்ச்சியாளர்களால் நிரூபிக்கப்பட்டதாகும்.

சாம வேதத்தில் தாண்டீய மகா பிரமாணத்தில் "ப்ரஜா பதிர் தேவப்பஹும் ஆத்மானம் யக்தம் கருத்வாப்ராயச்சித்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு தேவன் தம்மையே பலியாகக் கொடுத்துப் பாவ மீட்பை சம்பாதிப்பார் என்பதாகும். இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மட்டுமே பொருந்தும். இதை தேவாரம், திருவாசகம், நாலாயிரம் திவ்யப்பிரபந்தம், சிவஞானபோதம், பிரம்ம சூத்திரம் எல்லாமே உறுதிப்படுத்துகின்றன. இதைப்பற்றி மேலும் விரிவாக தெரிந்து கொள்ள நான் எழுதியுள்ள "உண்மையான கடவுள் யார்?", "சைவமும், வைணவமும் கிறிஸ்தவமே" மற்றும் "சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்" என்ற புத்தகங்களையும், சீடிக்களையும் பாருங்கள்.

காலப்போக்கில் புராணங்களும், இதிகாசங்களும், சில இலக்கியங்களும் புராணப்புரட்டர்களால் திசை திருப்பப்பட்டு, படைத்திட்ட, எங்கும் நிறைந்த உருவமற்ற இறைவனை மறக்கச் செய்து மனிதரால் படைக்கப்பட்ட உருவங்களை வழிபடச் செய்துவிட்டது என்பதே மிகவும் வருந்தத்தக்க சமய வரலாற்று உண்மையாக இருக்கிறது.

"எப்பொருள் எத்தன்மைதாயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்கிறார் திருவள்ளுவர்.

மெய்ப்பொருள் காண திருமறையைப் படியுங்கள்.

ஞானமுள்ள படைப்பு

"பின்பு தேவன் வானத்தின் கீழேயிருந்த ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. தேவன் வெட்டாந்தரைக்கு பூமி என்று பெயரிட்டார். சேர்ந்த ஜலத்திற்கு சமுத்திரம் என்று பெயரிட்டார்" ஆதியாகமம் 1:9, 10.

திருமறையில் உலகப் படைப்பைப் பற்றி இவ்விதமாகக் காண்கிறோம். உலகத்தின் மொத்தப் பரப்பளவு 18 கோடியே 31 இலட்சத்து 10 ஆயிரத்து 150 சதுர மைல்கள் என்று கணக்கிட்டுள்ளனர். மொத்தப் பரப்பளவில் சமுத்திரத்தின் பரப்பளவு 13 கோடியே 72 இலட்சம் சதுர மைல்கள். மொத்தப் பரப்பளவில் பூமியின் பரப்பளவு 5 கோடியே 60 இலட்சம் சதுர மைல்கள். உலகத்தின் மொத்தப் பரப்பளவில் தரையைவிட நீர்ப்பாகம் அதிகம் உள்ளது என்று அளவிட்டுள்ளனர்.

இந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்பை சுமார் 3200 ஆண்டுகளுக்கு முன்பே திருமறை நமக்குக் கூறியுள்ளது என்றால் அது திருவெளிப்பாடு என்பதை ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும். *"தேவன் சமுத்திரத்தை பெரிதும், விஸ்தாரமுமாய் உண்டாக்கினார்"* என்று சங்கீதம் 104:25 கூறுகிறது. பூமியை விட சமுத்திரம் பெரியதும், விஸ்தாரமுமாய் படைக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை வேதம் நமக்கு தெளிவாகக் கூறுகிறது. எரேமியா தீர்க்கதரிசி உலகப் படைப்பைப் பற்றிக் கூறும்போது *"தேவன் பூமியைத் தம்முடைய வல்லமையால் உண்டாக்கி பூச்சக்கரத்தைத் தமது ஞானத்தினால் படைத்தார்"* (எரேமியா 10:12) என்கிறார்.

ஆம், தேவனுடைய படைப்புக்கள் அனைத்தும் அவருடைய வல்லமையையும், ஞானத்தையும் வெளிப்படுத்துகின்றன. அல்லேலூயா மண்ணிலிருந்து படைக்கப்பட்ட மனிதனின் உடலிலும் பெரும்பகுதி நீரும் மற்றப் பொருள்கள் நீரைவிட குறைவாகவும் உள்ளது என்பதை இங்கு நினைவு கூறுவது நல்லது.

சந்திர மண்டலத்தில் மனிதன் வாழ முடியுமா?

"நீ கழுகைப்போல உயரப் போனாலும், நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத்தள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" ஒபதியா 1:4. திருமறையில் மிகவும் சிறிய புத்தகம் ஒப்தியா. அதில் ஒரே ஒரு அதிகாரம்தான் உண்டு. தேவன் ஒபதியாவிற்கு வெளிப்படுத்திய தரிசனமே இது கூறும் செய்தி.

1969-ம் ஆண்டு, ஜுன் மாதம், 21-ம் நாள் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஆம்ஸ்ட்ராங் முதன் முதலில் சந்திரனில் இறங்கி உலகத்தையே வியப்படையச் செய்தார். உலக நாடுகள் அவரைப் பாராட்டின. அவரைப்பற்றி எழுதாத செய்தித்தாள்கள், இதழ்கள் இல்லையென்றே சொல்ல வேண்டும். அவர் சந்திரனில் இறங்கப்

பயன்படுத்திய ஊர்தியின் பெயர் ஈகிள் (Eagle) - கழுகு. எவ்வளவு அதிசயமான ஒற்றுமை பாருங்கள். *"நீ கழுகைப் போல உயரப் போனாலும்"* என்று சத்திய வசனமான திருமறை அழகாகக் கூறுகிறது. முதன் முதல் சந்திரனில் இறங்கியது அமெரிக்க நாட்டைச் சேர்ந்த "கழுகு" என்ற பெயர் கொண்ட ஊர்தி.

அதன்பின் பலமுறை ரஷ்ய, அமெரிக்க விஞ்ஞானிகள் சந்திரனைப் பற்றி ஆராய்ச்சி செய்தனர். ஆனால் அங்கு மனிதன் குடியிருக்க இயலாது என்பதே அவர்கள் முடிவாக இருக்கிறது. தேவனுடைய வார்த்தைகள் உண்மையும், உறுதியுமானவை. அவைகளைப் பொய்யாக்கவோ, மாற்றவோ மனிதனால் முடியாது என்பதை பல கோடி மதிப்புள்ள பொருள்களை செலவு செய்து பல உயிர்களைப் பணயம் வைத்து அமெரிக்க ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டு கொண்டனர். ஆனால் கர்த்தர் தேவ மனிதர்களுக்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இதை வெளிப்படுத்தி இருக்கிறார் பாருங்கள். தேவன் தரும் ஞானம் எல்லாவற்றையும் விடச் சிறந்தது இல்லையா?

உறுதியான சந்திரன்

"சந்திரனைப்போல அது என்றென்றைக்கும் உறுதியாகவும், ஆகாயமண்டலத்துச் சாட்சியைப் போல் உண்மையாயும் இருக்கும் என்று விளம்பினீர்" என்று சங்கீதம் 89:37 கூறுகிறது. திருமறையில் உறுதிக்கு உதாரணமாக சந்திரனை ஒப்பிட்டு எழுதப்பட்டுள்ளதைக் காண்கிறோம். உலகில் உறுதியான பல பொருள்கள் இருக்கின்றன. எத்தனையோ உறுதியான உலோகங்கள் தாவீதின் காலத்தில் அதாவது சுமார் 3200 ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. அல்லது உறுதியான மலையை ஒப்பிட்டு சொல்லியிருக்கலாம். ஆனால் திருமறையில் மனிதன் என்றுமே கண்டிராத சந்திரனை ஒப்பிட்டு கூறப்பட்டுள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

சந்திரன் உறுதியானதுதானா? ஆம், அது உறுதியானதுதான். சந்திரனில் முதல் முதலாக இறங்கின ஆம்ஸ்ட்ராங் தேவனுடைய அதிசயமான படைப்புகளைக் கண்டு தேவனை துதித்தார். அவர் பூமிக்கு திரும்பும்போது சந்திரனிலிருந்து ஒரு பாறையைக் கொண்டுவந்தார். அவர் கொண்டு வந்த பாறையை உலகின் பல விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர். அவர்கள் அந்தப் பாறை இரும்பை விடவும் கடினமானது என்று தங்கள் கருத்துகளை வெளியிட்டு இருக்கிறார்கள்.

சந்திரன் உறுதியானது என்று எந்த டெஸ்ட்டுமே செய்யாமல்

வேதம் கூறும் உண்மையை பல நாட்டு விஞ்ஞானிகள் அதை சோதித்து ஆராய்ச்சி செய்து பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு சொல்கிறார்கள். இப்படி நாத்திகரும் மறுக்க முடியாத பல உண்மை சத்தியத்தை சில ஆஸ்தீக வேஷதாரிகள் எப்படி மறுக்கின்றனர் என்று தெரியவில்லை. பிசாசானவன் அவர்கள் கண்களையும், கருத்துக்களையும் குருடாக்கி வைத்திருக்கிறான்.

சந்திரன் காட்டும் காலம்

"சந்திரனைக் காலக்குறிப்புகளுக்காகப் படைத்தார்" என்று சங்கீதம் 104:14. உலகப்படைப்பின் ரகசியத்தை சங்கீதக்காரன் எழுதுகிறான். சந்திரன் ஏன் படைக்கப்பட்டது? சந்திரனைவிடப் பெரிய கிரகங்கள் நம் கண்களுக்குக் காண முடியாதவைகளாக வெகு தூரத்தில் இருக்கின்றன. சந்திரனை மட்டும் நாம் காணும் தூரத்தில் கர்த்தர் ஏன் படைத்தார் என்ற வினாவிற்கு வேதாகமம் விடை தருகிறது.

சந்திரன் இப்பொழுது இருப்பதைப்போல படைக்கப்படாமல் இருந்தால், பூமியின் சுழற்சியைக் கூட நம்மால் நன்கு அறிந்து கொள்ள முடியாது. பௌர்ணமி, அமாவாசை இவற்றை நாம் காணவும் முடியாது. குறிப்பாக காலத்தை நாம் கணக்கிடுவது மிகவும் கடினமாகி இருக்கும். இதைத்தான் சங்கீதக்காரன் சந்திரனைக் காலக் குறிப்புகளுக்காகப் படைத்தார் என்று திட்டமாகக் கூறுகிறான்.

சந்திரன் பூமியை ஒருமுறை சுற்றிவர 29½ நாட்கள் ஆகிறது. இவ்வாறு 12 முறை சுற்றிவர 354¼ (சரியாக) நாட்கள் ஆகிறது. இதை சந்திரவருடம் என்கிறோம் (Lunar Year). இதன் அடிப்படையில்தான் நாட்கள் கணக்கிடப்பட்டன.

பின்னர் சூரிய வருடம் (Solar Year) கணக்கிடப்பட்டது. அது 365¼ நாட்களாகும். காலக் கணக்கீட்டிற்கு சந்திரன் முக்கியமான ஒன்றாகும். இதன் அடிப்படையில் பஞ்சாங்கங்கள் உருவாக்கப்பட்டது. சோதிடக்கலையின் அடிப்படைக் கிரகம் சந்திரன்தான். மாதம் என்பதைக் குறிக்கும் பழங்கால எபிரேயச் சொல் "யெறஹ்" (Yerah) என்பது (யாத். 2:2, யோபு 39:2, சக.11:8) சந்திரன் என்று பொருள்படும். சந்திரனின் தோற்றம், மறைவு ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு மாதங்கள் கணக்கிடப்பட்டன. சந்திரன் தோன்றும் முதல் நாள் முக்கிய நாளாகக் கொண்டாடப்பட்டது. (1 சாமு.20:15, 18:24, இரா.4:23, ஏசா.1:13, 14, எசே.46:3, ஆமோஸ் 8:5).

அன்று அவர்கள் கண்ட காலக்குறிப்புகளே இன்றும் உலகமெங்கும் எடுத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது. அரேபியர்கள் சந்திரனைக் கொண்டே பண்டிகைக் காலங்களை இன்றும் கணக்கிட்டு வருகின்றனர். தமிழ் பஞ்சாங்க முறை சந்திரனை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளன. ***"சந்திரனைக் காலக்குறிப்புகளுக்காகப் படைத்தார்"*** என்பது எவ்வளவு நிச்சயமாக இருக்கிறது பார்த்தீர்களா?

எண்ணற்ற விண்மீன்கள்

300 ஆண்டுகளுக்கு முன்புவரை வானத்து விண்மீன்கள் சில ஆயிரத்துக்குட்பட்டனவைகளே என்று எண்ணியிருந்தனர். பெயர் பெற்ற யேல் பல்கலைக்கழகத்தில் கூட அவ்விதமாகவே கற்பிக்கப்பட்டு வந்தது. 17-ஆம் நூற்றாண்டில் தொலைநோக்கு கருவி (Telescope) என்ற கருவி கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின் வானத்தில் 1022 விண்மீன்கள் இருக்கின்றன என்று "ப்பாச்சாஸ் என்ற வானியல் மேதை கண்டுபிடித்தார். இது தவறு என்றும், 1056 நட்சத்திரங்கள் இருக்கின்றன என்று தாலமி என்ற விஞ்ஞானி கூறினார். அதன்பின் கெப்ளர் என்ற ஒரு விஞ்ஞானி வேறு ஒரு எண்ணிக்கையை கூறினார். ஆனால் இவர்கள் கண்டுபிடிப்பு எல்லாமே தவறு.

உலகிலேயே மிகப்பெரிய தொலைநோக்கியான 5 மீட்டர் விட்டமுள்ள ஒளியியற் கண்ணாடி மூலம்கூட சிறிய அளவுள்ள நட்சத்திரங்களைக் காண்பது கடினம். இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் வானத்து நட்சத்திரங்களை முழுவதுமாக எண்ணிவிட முடியாது என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். திருமறையில் ***"வானத்து நட்சத்திரங்கள் எண்ணப்படாததுமாயிருக்கிறது"*** (எரேமியா 33:22) என்றே எழுதப்பட்டுள்ளது. எரேமியாவிற்கு அந்த விஞ்ஞான அறிவை கொடுத்தது யார்? நட்சத்திரங்கள் பற்றி மேலும் சில விபரங்களையும் பாருங்கள்.

கோடையில் நட்சத்திரங்கள் மிகவும் மினுமினுப்பது புயல் மழை இவற்றின் அறிகுறி. மழைக்கு முன் நீல ஒளியையும், வறட்சிக்குப் பின் பச்சை ஒளியையும் அவைகள் சிந்துகின்றன. நட்சத்திரங்கள் மினுமினுப்பது அதன் இயற்கைத் தன்மை அல்ல. சூரிய வெப்பத்தால் பூமி சூடு அடைந்து வெப்ப அலைகள் ஏற்பட்டு அவை வழியே தெரியும் தூரத்திலுள்ள பொருட்கள் நடுங்குவதாகத் தோன்ற என்ன காரணமோ அதே காரணம்தான் நட்சத்திரங்கள் மினுமினுப்பதற்கும் என்கிறார் வானவியல் அறிஞர்

கெ.ஆ. திஹாவ். நட்சத்திர அளவை அறிய ஒளிமானி எனப்படும் கருவி பயன்படுத்தப்படுகிறது.

மிகப் பெரிய நட்சத்திரமான "அன்டாரிஸ்" என்பது 450,000,000 கி.மீட்டர் விட்டமுடையது. அது சூரியனைச் சுற்றிவரும் பூமியின் கிரகப்பாதையை விடப் பெரியது. அதாவது பூமியின் கிரகப்பாதை 300,000,000 கி.மீ. விட்டமே. அதையும்விட ஒன்றரை மடங்கு பெரியது. இதையெல்லாம் படைத்த இறைவனான கர்த்தர் எவ்வளவு பெரியவர். இவைகள் எல்லாம் இயற்கையாகவே உருவானது என்று சில பகுத்தறிவுப் பண்பாளர்கள் கூறுகின்றனர். அவர்களால் ஜீரணிக்க முடியாதவைகளை இயற்கை என்று சொல்லிவிடுவார்கள் போல இருக்குது.

இசைபாடும் விண்மீன்கள்

"அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி, தேவபுத்திரர்கள் எல்லாருமே கெம்பீரித்தார்களே" - யோபு 38:7.

தேவன் உலகத்தை சிருஷ்டித்தபோது உதயகாலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடியதாய் யோபு எழுதியுள்ளார். இது மகிழ்ச்சியைக் காட்டும் வகையில் விண்மீன்கள் இசை எழுப்பின என்று மிகைப்படுத்தி எழுதப்பட்ட வர்ணனையாகவே இதுநாள்வரை எண்ணியிருக்கின்றனர். ஆனால் இன்றைய கண்டுபிடிப்புகள் யோபு எழுதினவைகள் அனைத்தும் உண்மையே என்று நிரூபிக்கின்றன.

திரைப்படத்தின் ஒளி அந்தப் படத்தின் வழி புகுந்து வரும்போது ஒலியினை ஏற்படுத்த முடியும் என்று நாம் அறிகிறோம். அதைப் போலவே ஒளியினை ஒலியாக, இசையாக மாற்றக்கூடும் என்று பௌதீக அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர். இத்தகைய புதிய கண்டுபிடிப்புக்கள் நட்சத்திரங்களிலிருந்து வரும் ஒளி, ஒலியாக, இசையாக தேவனைப் புகழ் பாடின என்று யோபு கூறுவதை ஏற்றுக் கொள்ளுவது பொருத்தம்தானே.

இந்த உண்மையை எந்த சாதாரண மனிதனும் தன்னுடைய சுய ஞானத்தால், சிந்தனையால், அறிவால் கண்டு பிடிக்க முடியாது என்பதையும் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தினதின் மூலம் மட்டுமே யோபு அறிந்து எழுதியுள்ளார் என்பதை ஒருவருமே மறுக்க முடியாது.

யோபுவின் புத்தகத்தில் இதுபோன்ற பல அறிவியல் உண்மைகளைக் காணும்போது, பரிசுத்த ஆவியின் வல்லமை

நிறைவின் பிரதிபலிப்பே அவர் கூறியுள்ள உண்மைகள் என்பதை கி.மு.5000-ல் வாழ்ந்த யோபுவின் சரித்திரம் நமக்குச் சான்று பகர்கிறது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக இந்த இயற்கை விநோதங்களை, இரகசியங்களை படைத்தது மாத்திரமல்ல. அவைகளை நம்முடைய பரிசுத்தவான்களுக்கும், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எவ்வளவு அழகாக தேவன் வெளிப்படுத்தியும் இருக்கிறார். பார்த்தீர்களா

அந்தரங்கத்தில் பூமி

"தேவன் உத்தரமண்டலத்தை வெட்ட வெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்க வைத்திருக்கிறார்" - யோபு 26:17. யோபு சரித்திரத்தை எழுதிய காலத்தில் பூமியைப் பற்றிய எண்ணங்கள் வேறுபட்டதாக இருந்தன. பூமி தட்டையானது என்ற கருத்தே நிலவி வந்தது. பூமி பாயைப்போலச் சுருட்டப்பட்டதென புராணக் கதைகளும், பலம்பொருந்திய மனிதன் பூமியைத் தோளின்மீது சுமந்து கொண்டிருப்பதாகவும், பூமி நான்கு யானைகள்மீது இருப்பதாகவும் கருத்துக்கள் இருந்துவந்த காலம் அது.

கி.பி. 1530-ல் ரீன்விஷ் என்ற விஞ்ஞானி பூமி அந்தரத்தில் தொங்கவிடப்பட்டிருக்கிறதென்று கண்டுபிடித்தார். அதுவரை பூமியைப்பற்றிய புராணக் கதைகளே நம்பப்பட்டு வந்தன. பூமியை வெட்டவெளியில், அந்தரத்தில் தேவன் தொங்கவிட்டதினால்தான் விஞ்ஞானிகள் இன்று விண்வெளியில், செயற்கைக் கோள்களைச் செலுத்த முடிகிறது.

இந்த பூமி 18 கோடியே 31 இலட்சத்து 10 ஆயிரத்து 150 சதுர மைல் பரப்பளவு கொண்டது. பெரிய மலைகளும், நகரங்களும், சமுத்திரமும் கொண்ட பெரிய பூமி அந்தரத்தில் தொங்கவிடப்பட்டிருப்பதை கொஞ்சம் கற்பனைப் பண்ணிப் பாருங்கள். நம்மால் நினைத்தும் பார்க்கவே முடியாத அளவு சைஸ், வெயிட் உள்ள இந்த பூமியை அப்படியே அந்தரத்தில் எந்தவித ஆதாரமும் இல்லாமல் தொங்கவிடுவது என்பதை நினைத்தாவது பார்க்க முடிகிறதா? தேவனுடைய மகிமையை, வல்லமையை பார்த்தீர்களா?

பூமி வெட்ட வெளியிலிருப்பதால்தான் நட்சத்திரங்களையும், சந்திரனையும் நம்மால் பார்க்க முடிகிறது. ஒளியைப் பெற முடிகிறது. செயற்கைக் கோள்கள் மூலம் பல விஞ்ஞான உண்மைகளையும், நவீன செய்தித் தொடர்புப் பயனையும் அடைய முடிகிறது. தேவன் ஒவ்வொன்றையும் எவ்வளவு அழகாக

சிந்தித்து உருவாக்கி இருக்கிறார் பார்த்தீர்களா? அப்பேர்ப்பட்ட தேவனை ஆராதிப்பது நமக்குக் கிடைத்த பெரிய சிலாக்கியம், பாக்கியம் அல்லவா?

உலகின் மையம்

எசேக்கியேல் தீர்க்கதரிசி 38-ஆம் அதிகாரம், 10-ஆம் வசனத்தில் யூதர்களை தேசத்தின் நடுவில் குடியிருக்கும் ஜனமென்று சொல்கிறார். ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பில் உலகத்தின் மையத்திலே வசிப்போர் (who dwell at the centre of the earth...) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

புவியியலின்படி இறைவனின் உலகப் படைப்பின் மையம் என்று இஸ்ரேல் நாட்டைத்தான் சொல்ல வேண்டும். பூமி உருண்டை பக்கவாட்டில் சுற்றிவருகிறது என்பதை அறிவோம். அப்படிப் பார்க்கும்போது பூமியின் மையம் யூதர்களின் நாடே. அதனால்தான் இறைவன் மனிதர்களை அங்கே படைத்தார்.

இன்றைய உலக வரலாற்று ஆசிரியர்கள் உலகத்தில் பல்வேறு கண்டங்களில் வசிக்கும் மக்கள் எல்லாரும் மத்திய ஆசியாவிலிருந்தே சென்றுள்ளனர் என்று கூறியிருக்கின்றனர். மொழிநூலார் கூட உலக மொழிகள் யாவும் மத்திய ஆசிய மொழிகளோடு மட்டுமே நெருங்கிய தொடர்பு உடையனவாக இருக்கின்றன என்று எழுதியிருக்கின்றனர். ஆதியாகமத்தில் *"நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய். உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சமெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்"* (ஆதி.28:14) என்று யாக்கோபின் தேவன் சொல்வதைப் பார்க்கிறோம்.

அமெரிக்க கண்டத்தைக் கண்டுபிடிக்க கொலம்பசின் கடல் பயணத்திற்கு உதவியவர்கள் ஸ்பெயின் தேசத்து யூதர்களே. வெகுகாலத்திற்கு முன்பே உலக வரைபடத்தை வரைய ஆரம்பித்தவர்கள் யூதர்களே. தேசங்களின் நடுவே அதாவது உலகத்தின் நடுவே குடியிருப்பவர்கள் யூதர்களே என்பதை மறுக்க முடியாது. உலகத்தின் வரைபடம் வரையப்படுவதற்கு சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பே திருமறையில் எசேக்கியேல் தீர்க்கதரிசி உலகத்தின் நடுவே குடியிருப்பவர்கள் என்று யூதர்களைக் குறிப்பிட்டிருக்கிறார் என்றால், இது தேவனுடைய வெளிப்பாடே என்பதை யாரால் மறுக்க முடியும்?

நீண்ட நாளும் வரலாற்றுச் செய்திகளும்

உலகம் படைக்கப்பட்ட நாட்களிலிருந்து ஒரு நாள் மட்டும் சூரியன் அதிக நேரம் மறையாமலிருந்தது என்றும், அந்த நாள் நீண்ட பகல்

பொழுதைக் கொண்டிருந்தது என்றும் வரலாற்றுக் குறிப்புகளில் காணப்படுகின்றன. அதை மெய்ப்பிக்கும் முறையில் கம்ப்யூட்டர் கண்டுபிடிப்பும் கூறுகிறது.

இதைக் குறித்து மறைந்த பண்டிதரும், யேல் (Yale) சர்வ கலாசாலையில் பணிபுரிந்தவருமான ஏ.எல். டாட்டன் (A.L. Totten) திருமறையில் யோசுவாவின் புத்தகத்தில் குறிக்கப்பட்டுள்ள *"அப்படியே சூரியன் அஸ்தமிக்கத் தீ விரிக்காமல், ஏறக்குறைய ஒரு பகல் முழுவதும் நடுவானில் நின்றது. இப்படி கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்லை கேட்ட அந்த நாளையொத்த நாள் அதற்கு முன்னுமில்லை. அதற்குப் பின்னுமில்லை..."* (யோசுவா 10:13, 14) என்ற நீண்ட பகல் பொழுதைக் குறித்து ஆராய முற்பட்டார்.

சீனருடைய வரலாற்றில் இயோ (Yeo) என்ற மன்னன் அவர் ஆண்ட காலத்தில் நடந்த நிகழ்ச்சியாக இந்த நீண்ட நாளைப்பற்றி பதிவு செய்து வைத்துள்ளார். டாட்டன் இதனை ஆராய்ந்தபோது யோசுவாவின் காலமும், சீன நாட்டில் இயோவின் ஆட்சிக் காலமும் ஒன்றே என்று கண்டுள்ளார்.

மேலும் அவர் இது தொடர்பாக தன் ஆராய்ச்சியை மேற்கொண்டபோது ஆதி காலத்தில் எகிப்து தேசத்திலுள்ள பூசாரிகள், கிரேக்க வரலாற்று ஆசிரியரான ஏரோதத்தஸ் போன்றவர்களின் குறிப்புகளையும் கண்டார். மற்றும் பாரசீகத்தில் கிடைக்கப் பெற்ற பண்டைக்கால எழுத்துப் பிரதி ஒன்றிலும் இந்த நீண்ட நாள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது குறித்து நாடோடிக் கதைகளும் அவருக்குக் கிடைத்தன. ஆனால் இது ஏன் நிறுத்தப்பட்டது என்ற உண்மை திருமறையில் மட்டுமே இருக்கக் கண்டார். திருமறையில் ஏறக்குறைய என்று குறிக்கப்பட்டது, 24 மணி நேரத்திற்கு 40 நிமிடங்கள் குறைவு என்று கணக்கிட்டார். இந்த 40 நிமிடங்களை தேவன் எப்படி பூர்ணப்படுத்தினார் என்பதை அவர் ஆராய முற்பட்டார்.

"அப்பொழுது ஏசாயா தீர்க்கத்தரிசி கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில், அவர் ஆகாசுடைய சூரிய கடிகாரத்தில் பாகைக்குப் பாகை முன்போன சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பும்படி செய்தார்" (2 இரா. 20:11) என்பதை திருமறையில் படித்த டாட்டன் தேவன் எவ்விதமாய் குறைவுபட்ட நாளை பூரணப்படுத்தினார் என்பதைக் கண்டுபிடித்தார். நீண்ட நாளைக்குறித்து வரலாற்றுக் குறிப்புகளும், செவி வழிச் செய்திகளும், வான சாஸ்திரங்களும் இருப்பினும் அது எப்படி

ஏற்பட்டது, அந்த நாள் எப்படி நிறைவுபடுத்தப்பட்டது என்ற உண்மை திருமறையில் மட்டுமே உள்ளது என்றும், அது உண்மையே என்றும் டாட்டன் வெளியிட்டார்.

திருமறையில் கூறப்பட்டுள்ள பல உண்மைகளை நடந்திருக்கக்கூடுமா என்று வினா எழுப்பும் அறிவு ஜீவிகள், ***"உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும்"*** (சங்.119:18) என்று சங்கீதக்காரன் வேண்டியதுபோல வேண்டினால் மட்டுமே அவர்களால் இதுபோன்ற அதிசய அற்புதங்களையும், தேவனுடைய மகத்துவமான வல்லமையையும் புரிந்து கொள்ள முடியும். அதற்காக நாம் ஜெபிப்போம்.

நீண்ட நாளும் கம்பியூட்டர் பொறியும்

நீண்ட நாள் பற்றிய ஏ.எல். டாட்டன் கண்ட ஆய்வினைப் பார்த்தோம். இப்பொழுது விண்வெளியாளரும், ஒரு புகழ்பெற்ற இயந்திரக் கம்பெனியின் தலைவருமான திரு.ஹரால்ட் ஹில் கண்ட திருமறை உண்மையை பாருங்கள்.

அமெரிக்காவிலுள்ள மேடிசன் மாநிலத்தில் கிரின்பெல்ட் என்று ஒரு நகரம் இருக்கிறது. இங்கு அமைக்கப்பட்டிருக்கும் விண்வெளி ஆய்வுக்கூடம் உலகப் புகழ்பெற்ற ஒன்றாகும். இங்கு விண்வெளி அறிவியல் நிபுணர்கள் ஒன்றுகூடி விண்வெளி பற்றிய ஆராய்ச்சிகளை செய்து வருகின்றனர். ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின் சூரியன், சந்திரன் மற்றும் விண்வெளிக் கோள்கள் எங்கு அமைந்திருக்கும் என்று அறிவது அவர்களின் அடிப்படை நோக்கமாக இருந்தது. காரணம் வெகு தூரத்திலுள்ள கோள்களுக்கு அனுப்பப்படும் விண்கலங்கள் செல்ல எத்தனையோ வருடங்கள் ஆகும். இதனைப் பத்திரமாக அனுப்ப வேண்டுமானால் இது சம்மந்தமான அவர்கள் ஆராய்ச்சி மிகவும் முக்கியமானதாகும்.

அதற்காக IBM என்ற புகழ்பெற்ற நிறுவனம் தயாரித்த கம்ப்யூட்டர் கணிதப்பொறி இயந்திரத்தில் ஆய்வு நாளையும், வருடத்தையும் குறித்து மேலும் அது பற்றிய செய்திகளைத் தரும்படி அந்தப் பொறியை இயக்கினார்கள். சில நொடிகளில் அதன் சிவப்பு விளக்கு எரியத் தொடங்கியது. பொறி இயங்க தடையாக ஏதோ உள்ளது என்பதை அது காட்டியது. நிறுவனத்தார் தங்கள் பொறியை நன்கு சோதித்துப் பார்த்து அதில் எவ்விதக் கோளாறும் இல்லை என்று உறுதியாகச் சொன்னார்கள். பின்பு ஏன் பொறி தொடர்ந்து செயல்படுவது தடைப்படுகிறது என்று

ஆராய்ந்தார்கள். பொறியில் எந்தக் குறையும் இல்லை என்றும், அது தரும் செய்தியில் தொடர்ச்சி விட்டுப் போனதாலேயே அது செயல்படமுடியவில்லை என்பதையும் கண்டுபிடித்தார்கள். அது தந்த தகவல்களின்படி உலக நாளில் ஒருநாள் குறைவுபட்டது. அது குறித்து விஞ்ஞானிகளால் எந்தவிதமான விளக்கத்தையும் தர முடியவில்லை.

அங்கிருந்த ஒருவர் திருமறையில் அது குறித்த விவரம் இருப்பதை நினைவூட்டினார். திருமறை கொண்டுவரப்பட்டது. அறிவியல் விஞ்ஞானிகள் ஆன்மீக விஞ்ஞானிகளாக மாறினார்கள். *"அப்படியே சூரியன் அஸ்தமிக்கத் தீ விரியாமல் ஏறக்குறைய ஒரு பகல் முழுவதும் நடுவானில் நின்றது. இப்படிக் கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்லை கேட்ட அந்த நாளையொத்த நாள் அதற்கு முன்னுமில்லை, அதற்குப் பின்னுமில்லை"* என்று யோசுவா 10:13-ல் எழுதி இருப்பதைக் கண்டார்கள்.

பொறி செயல்படாமையின் காரணத்தை இப்போது அறிந்து கொண்ட விஞ்ஞானிகள் மீண்டும் பொறியை இயக்கி குறைவுப்பட்ட நாளின் விபரத்தைக் காண முற்பட்டனர். அது 23 மணி 20 நிமிடங்களைக் காட்டியது. மீதி 40 நிமிடங்கள் என்னவானது என்று விஞ்ஞானிகள் சிந்திக்க முற்பட்டனர். கணிதப்பொறி அதற்கு விடையளிக்க முடியாது என்று அறிந்து மீண்டும் திருமறையில் விடைகாண முற்பட்டனர். அதற்கான விடையை 2 இராஜாக்கள் 20:11-ல் கண்டனர். *"10 பாகை பின்னிட்டுத் திரும்பும்படி செய்தார்"* என்று உள்ளது.

அதாவது பூமி சூரியனை 360 பாகை சுத்த அது எடுத்துக் கொள்ளும் நேரம் 24 மணியாகும். அப்படியானால் 10 பாகை செல்ல எவ்வளவு நேரம் பிடிக்கும் என்று கணக்கிட்டனர்.

24 x 60 = 1440

1440

.... = 40 நிமிடம்

360

விஞ்ஞானம் தர முடியாத விடையைத் திருமறையில் கண்டனர். திருமறையை எழுதியவர்கள் சாதாரண மனிதர்களா என்ன?

திருமறையின் வார்த்தைகள் மனிதரின் மண்டை அறிவில் எழுதப்படவில்லை. *"வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டு இருக்கிறது"* என்று II தீமோ.3:16-ல் கூறப்பட்டு இருக்கிறது. திருமறையை தந்த கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். பைபிள் கிறிஸ்தவர்களுடைய வேதப் புத்தகம் மாத்திரமல்ல. இந்த உலகத்தில் பிறந்த அனைவருமே ஜாதி, மத, பேதங்களை மறந்து, படித்து அறிந்து, தெளிந்து வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை கூறும் வேதம் மாத்திரமல்ல, அது ஒரு உலக வரலாற்று நூல். விஞ்ஞானிகள், மெய்ஞானிகள், அஞ்ஞானிகள் அனைவருமே கற்றுத்தேற வேண்டிய ஒரு அரிய வேதம், அறிய வேண்டிய வேதம் அது

காற்றுக்கு நிறையுண்டு, ஜலத்திற்கும் அளவுண்டு

இன்றும் விஞ்ஞான அறிவற்ற ஒரு மனிதனிடம், "காற்றுக்கு எடையுண்டா?" என்று கேட்டால், இந்த இருபதாம் நூற்றாண்டில்கூட "இல்லை" என்றே கூறுவான். ஆனால் கிறிஸ்தவ திருமறையில் முதல் முதலாக எழுதப்பட்ட புத்தகம் என்று கருதப்படும் யோபுவின் புத்தகத்தில் 28-ம் அதிகாரம், 5-ம் வசனத்தில், *"அவர் காற்றுக்கு அதின் நிறையை நியமித்து, ஜலத்துக்கு அதின் அளவைப் பிரமாணித்து..."* என்று எழுதப்பட்டிருக்கிறது.

கி.பி.630-ல் கலிலியோ என்ற விஞ்ஞானி காற்றுக்கு எடையுண்டு என்று கண்டுபிடித்து உலகுக்கு அறிவித்தார். அது நாள் வரை காற்றுக்கு எடையுண்டு என்பதை எவரும் நம்பாதிருந்தார்கள். ஆனால் கலிலியோ பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே யோபு பரிசுத்த ஆவியின் உதவியால் காற்றுக்கு எடையுண்டு என்பதை நமக்கு அறிவித்துள்ளார்.

மற்றும் அவர் "ஜலத்திற்கு அதன் அளவைப் பிரமாணித்து..." என்று எழுதுகிறார். இன்று ஒரு அணையிலிருந்து ஒரு வினாடிக்கு எவ்வளவு தண்ணீர் வெளியே வருகிறது என்று கணக்கிடுகின்றனர். ஆனால் யோபு வாழ்ந்த காலத்தில் நிறுத்தல், அளத்தல் போன்ற அளவுகள் நடைமுறையில் இருந்தாலும் ஓர் அணையின் நீர் இவற்றை அளப்பது அறியாததாகவேயிருந்தது. அந்த நிலையிலும் யோபு இதை எழுதி இருக்கிறார் பாருங்கள். இதைத்தான் தேவன் கொடுக்கும் ஞானம் என்பது.

அகிலம் படைத்த அணு

கலிபோர்னியாவில் வாழ்ந்த பெரிய அறிவியல் மேதை டாக்டர் மில்லிக்கம் அணுவை இரண்டாகப் பிரிப்பதில் வெற்றி கண்டு

பௌதீகத் துறையில் நோபல் பரிசு பெற்றார். உலகம் முழுவதும் அணுக்களால் நிரப்பப்பட்டுள்ளது என்பதையும், கண்ணுக்குத் தெரியும் எல்லா ஜடப் பொருளும் அணுக்களின் கூட்டுத் தன்மையே என்றும் இவர் வெளியிட்ட உண்மை ஏற்கனவே திருமறையில் கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் உங்களால் நம்ப முடிகிறதா?

பவுல் அடிகளார் எபிரேயருக்கு எழுதின நிருபத்தில் *"விசுவாசத்தினாலே உலகம் தேவனுடைய வார்த்தையினாலே உண்டாக்கப்பட்டதென்றும் இவ்விதமாய்க் காணப்படுகிறவைகள் தோன்றப்படாதவைகளால் உண்டானதென்றும் அறிந்திருக்கிறோம்"* என்று எழுதியுள்ளார்.

கண்ணுக்குத் தோன்றப்படாதவைகளான அணுக்களால் நம்மால் காணப்படுகிறவைகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன என்ற உண்மையை இவர் எப்படித் தெரிந்துகொண்டு எழுதியிருக்கிறார் பாருங்கள். இதுதான் பரிசுத்த ஆவியின் வல்லமை என்பது கர்த்தருக்கே மகிமை சர்வ வல்ல தேவனாகிய இயேசுவே, எங்களுக்கு உமது சிருஷ்டிப்பின் வல்லமைகளை புரிந்து கொண்டு உம்மைப் போற்றும் மெய்ஞானத்தை எங்களுக்குத் தாரும் என்று அந்த சர்வேஸ்வரனிடம் மன்றாடுவோமா?

பிணி தீர்க்கும் சாக்கடல்

"... இந்த தண்ணீர் கிழக்கு தேசத்துக்குப் புறப்பட்டுப்போய், வனாந்தர வழியாய் ஓடி கடலில் விழும். இது கடலில் பாய்ந்து விழுந்த பின்பு, அதின் தண்ணீர் ஆரோக்கியமாகும்" என்று எசேக்கியேல் 47:8-லில் எழுதப்பட்டுள்ளது. எசேக்கியேல் தீர்க்கதரிசி சவக்கடலைப்பற்றி எழுதிய வசனம் இது. இஸ்ரவேலர்கள் இந்தப் பகுதியை உப்புக் கடல் என்றும், கிழக்குக் கடல் என்றும் அழைக்கின்றனர்.

இந்த சவக்கடலில் திருமறையில் கூறப்பட்டுள்ள, வானத்து அக்கினியால் அழிக்கப்பட்ட நகரங்கள் மறைந்துகிடக்கின்றன. இங்கு நிலக் கீல் கிடைப்பதால் இதைத் தார்க்கடல் என்றும், அங்கு மீன் போன்ற ஜீவராசிகள் வசிக்க முடியாததால் சவக்கடல் என்றும் அழைப்பர். இதன்கீழ் சோதோமும், கொமோராவும் மற்றும் மூன்று நகரங்களும் மறைந்து கிடப்பதாகக் கூறப்படுகிறது. ஸ்டிராபோன் போன்ற ஆராய்ச்சியாளர்கள் இதன்கீழ் 13 நகரங்கள் மறைந்து கிடப்பதாகவும் கூறுகின்றனர்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி, ***"அதன் தண்ணீர் ஆரோக்கியமாகும்"*** என்று எழுதி இருக்கிறார். சவக்கடல் என்று பெயர் பெற்றதும், உயிர் ஜீவன்கள் வசிக்க முடியாததுமான இந்தக் கடலின் தண்ணீர் எப்படி ஆரோக்கியமாகும் என்று ஆராய்ச்சியாளர்கள் விடைகாண முயன்றனர்.

இந்தக் கடலிலுள்ள வெந்நீர் ஊற்றுகள் எல்லா நோய்களையும் தீர்க்கக்கூடியது என்ற செய்தி தீர்க்கதரிசியின் வாக்கு நிறைவேறக்கூடிய வகையில் காணப்படுகிறதல்லவா? ஏரோது மன்னன் சுகவீனமுற்று மரணத்தருவாயில் இருந்தபோது இந்த வெந்நீர் ஊற்றில் குளித்துச் சுகம் பெற்றுள்ளான். ரோமர்களின் ஆட்சியில் மக்கள் கூட்டம் கூட்டமாய் இங்கு வந்து சுகம் பெற்றுச் சென்றிருக்கின்றனர். மற்றும் இதன் மகிமையைப் பற்றி ஞானிகள் பலரும் எழுதியுள்ள குறிப்புகள் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகளில் அரிஸ்டாட்டில், ஸ்ட்ராபோன், பிளினி, டாசிடஸ் இவர்களது ஆராய்ச்சிக் குறிப்புகள் முக்கியமானதாகும்.

இந்த நதியில் கிடைக்கும் இரசாயனக் கலவை இறந்த உடலைக் கெட்டுப்போகாமல் பாதுகாக்கப் பயன்படுகிறது. கப்பல்களின்மீதும் இந்தக் கலவையைப் பூசுகின்றனர். 1967-ம் ஆண்டுக்குப் பின்னர் இந்தக் கடல் இஸ்ரேல் நாட்டின் ஆளுகையின்கீழ் வந்தது. இன்று சுற்றுலாப் பயணிகளின் உள்ளம் கவரும் இடமாக அது இருக்கிறது. இந்தப் பகுதி கடல் மட்டத்திலிருந்து சுமார் 800 மீட்டர் தாழ்வானதாகும். மருத்துவக் குணமுடைய இந்தக் கடல் பகுதிக்கு, மருத்துவ பயன் அடையவும், பொழுதுபோக்கவும், சூரியக் கதிர்களில் குளிர்காயவும் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்த வண்ணமாக இருக்கின்றனர்.

இங்குள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கும்ரான் (Qumran) குகைகளில்தான், 1947-ஆம் ஆண்டு "சடக்கடல் சுருள்கள்" (Dead Sea Scrolls) என்றழைக்கப்படும் பழமையான வேதாகமச் சுருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதில் பழைய ஏற்பாட்டில் எஸ்தர் புத்தகம் தவிர மற்ற எல்லாப் புத்தகங்களும் கிடைத்தன. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஏசாயா புத்தகமும், கி.மு. 450-ஆம் ஆண்டு எழுதப்பட்ட வேதாகமத்தின் நகல் ஒன்றும்கூட அவற்றுள் இருந்தன. ஆண்டவர் தமது சிருஷ்டிப்பின் பிள்ளைகளுக்கு தான் அறிவித்த வேதத்தை எப்படியெல்லாம் பாதுகாத்துக் கொடுக்கிறார் பார்த்தீர்களா? அதை நாம் அலட்சியப்படுத்தலாமா?

வல்லமையான படைப்பு

"தேவனுடைய வல்லமையைப் பிரசித்தப்படுத்துங்கள். அவருடைய மகிமை இஸ்ரவேலின்மீதும், அவருடைய வல்லமை மேக மண்டலங்களிலும் உள்ளது" (சங்கீதம் 68:34), என்ற திருமறை வசனம் எவ்வளவு உண்மையானது இன்று இஸ்ரவேலர் பற்றிய வரலாற்று உண்மைகள், தேவனுடைய மகிமை அவர்கள் மேலுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

தேவனுடைய வல்லமை மேக மண்டலங்களில் அவருடைய சிருஷ்டிப்பிலிலிருக்கிறது என்பதை விஞ்ஞானிகளின் புதிய கண்டுபிடிப்புகள் நமக்கு நினைப்பூட்டுகின்றன. நியூயார்க் நகரிலுள்ள விஞ்ஞானக் கல்லூரி ஒன்றின் முன்னாள் தலைவர் மேதை ஏ. கிரேசி மாரிசன் (A. Cressy Maurison) "கணித சாஸ்திரத்தின் அடிப்படையில் இப்பூமியும் அதிலுள்ள யாவும் தேவனால் உண்டாக்கப்பட்டவைகள் என்றும், அவைகள் தாமாகவே பரிணாமக் கொள்கையின்படி தோன்றியிருக்க முடியாது என்றும் நிரூபிக்க முடியும்" என்றார்.

அதற்கு அவர் மேக மண்டலங்களில் அதன் சிருஷ்டிப்பு திட்டவட்டமான அமைப்பும், நோக்கமும் கொண்டவைகளாக இருக்கின்றன என்பதையும் எடுத்துக் காட்டினார். பூமி தன்னுடைய அச்சில் மணிக்கு 1000 மைல் வேகத்தில் சுழன்று கொண்டிருக்கிறது. இது 100 மைல் வேகத்தில் சுழலத் தொடங்கினால் பூமியில் இரவும், பகலும் பத்து மடங்கு நேரம் கொண்டதாக இருக்கும் என்கிறார். அப்படியானால் 10 நாள் இரவுக்குப்பின்தான் பகல் ஏற்படும். அப்படி ஏற்பட்ட பகல் பத்து நாட்கள் இருக்கும். அதன்பின்தான் மீண்டும் பத்து நாள் இரவு ஏற்படும். இப்படி ஏற்பட்டால் சூரியனின் உஷ்ணத்தால் பயிர்களும், ஜீவன்களும் அழிந்துவிடும். அல்லது பத்து நாட்கள் தொடர்ந்த இரவினால் ஏற்படும் குளிரினால் பூமியின் பயிர்களும், ஜீவன்களும் அழிந்துவிடும்.

பூமி தனக்கு வேண்டிய 12,000ᵒகு வெப்பத்தை மட்டும் தன் மேற்பரப்பில் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் சூரியனிடமிருந்து மிகச் சரியான தொலைவில் அமைந்துள்ளது. பூமி தன் அச்சில் 23ᵒ சாய்வாக இருந்து தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது. இதனால்தான் நான்கு பருவகாலங்கள் மாறி, மாறி வருகின்றன. உலகத்தில் பயிர் அதன் அடிப்படையில் தடையின்றி செழித்து வாழ வழி செய்கிறது. பூமி அவ்விதம் 23ᵒ சாய்வாக தன் அச்சில்

அமைக்கப்படாமலிருந்தால் நீராவி வட துருவத்திற்கோ, தென் துருவத்திற்கோ சென்றுவிடும். பனி நிறைந்த கண்டங்கள் உருவாகிவிடும். அங்கு எந்தப் பயிரையும் விளைவிக்க முடியாது. பார்த்தீர்களா? ஒவ்வொன்றையும் எவ்வளவு துல்லியமாக கணக்கிட்டு நம் இறைவன் சகலத்தையும் படைத்திருக்கிறார். படைப்பில் ஒரு சின்ன மாறுதல் இருந்தாலும் எந்த உயிரினமுமே உயிர் வாழ முடியுமா? அப்பேர்ப்பட்ட சகலகலாவல்ல தேவனை ஆராதிக்காமல் நாம் இருக்கலாமா?

இந்த பிரபஞ்சத்தையும், அதில் உயிர் வாழும் எண்ணற்ற ஜீவராசிகளையும், மனிதர்களையும் இப்படித்தான் படைக்கப்பட்டது என்று வேறு எந்த வேதமாவது இவ்வளவு தெள்ளத்தெளிவாக கூறுகிறதா? அப்படிக் கூறப்பட்டவைகளை எந்த விஞ்ஞானிகளாவது ஆராய்ந்து கூறியிருக்கின்றார்களா? சிந்தித்துப் பாருங்கள். ஆண்டவர் நமக்கு ஆராய்ந்து அறியும் அந்த ஆறாவது அறிவைக் கொடுத்திருப்பதே அதற்குத்தானே. இவைகள் அனைத்தையும் ஒழுங்கும், கிரமமுமாக, விஞ்ஞான, அறிவியல் ஞானத்தோடு படைத்த தேவனை மனிதர்கள் படைத்த ஒரு சிலையிலும், விக்கிர"த்திலும் காண முடியுமா? அப்பேர்ப்பட்ட லோகேஸ்வரனை ஒரு மிருகத்தின் சாயலிலும், பறவை, மச்சம், பாம்பின் உருவிலும் செய்து வழிபடுவது அவருடைய மனதை புண்படுத்தாதா? அவருக்கு கொடுக்க வேண்டிய கனத்தை அவருக்கு மாத்திரம்தானே கொடுக்கணும். அதை மற்றவைகளுக்கு கொடுத்தால் நமக்கு ஆசீர்வாதமாக இருக்குமா? சிந்தியுங்கள்.

உலகின் பயிர்கள்

"பின்பு தேவன்: பூமியானது ஜாதி ஜாதியான ஜீவ ஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டு மிருகங்களையும், ஜாதி, ஜாதியாகப் பிறப்பிக்கக் கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று" (ஆதி.1:24).

1903-ஆம் ஆண்டு சர் கெல்வின் பிரபு (Lord Kelvin) என்ற விஞ்ஞானி, "உயிர் உலகில் முதலில் உண்டான முறையை விஞ்ஞானத்தின் மூலம் ஆராய்ந்தால், உயிர் சிருஷ்டிக்கும் ஒரு சக்தியால் உருவானது என உணரலாம். நீங்கள் நன்றாகச் சிந்தீப்பீர்கள் என்றால் விஞ்ஞானம் உங்களைக் கடவுள் உண்டு என்று நம்பவைக்கும்" என்றார். இவர்தான் வெப்ப அளவைக் கண்டுபிடித்த விஞ்ஞானி. சக்தியைக் குறித்து இரண்டு

விதிகளைக் கண்டுபிடித்தவர் (First and Second Laws of Thermodynamics). சாமுவேல் மோர்ஸ் (Samuel F.B. Mores) என்ற அறிஞர் தந்தி முறையைக் கண்டுபிடிக்க கெல்வின் அவருக்கு உதவினார்.

இவரின் பணியைப் பாராட்டி 21 டாக்டர் பட்டங்கள் இவருக்குக் கொடுக்கப்பட்டன. அட்லாண்டிக் போன் (Atlantic Cable) என்ற அமைப்பினைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வெற்றி கண்டவர். சர் என்ற சிறப்புப் பட்டம் பெற்றவர். இவ்வளவு பெரிய அறிவியல் மேதை உயிரினங்கள் படைக்கப்பட ஒரு சக்தி தேவை, அதுவே இறைவன் என்று கூறியுள்ளார். அந்த இறைவன்தான் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாக இருக்கக்கூடிய பரித்த வேதாகமம் கூறும் திரியேக தேவனாகிய கர்த்தர் - இயேசு கிறிஸ்து 1824-ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது 83-ஆவது வயதில் 1907-இல் இறைவனடி சேர்ந்தார். 21 டாக்டர்கள் பட்டம் பெற்ற ஒரு அறிவியல் மேதை இறைவன் இருக்கிறார் என்று அழுத்தம் திருத்தமாக ஆதாரத்தைக் கொண்டு சொல்கிறார். இங்கு ஒரு கூட்ட மக்கள் தெய்வமே கிடையாது என்று கூறி வருகின்றனர். அப்பேர்ப்பட்ட சர்வ வல்ல தேவனை தெருமுனையிலும், முக்கிலும், முடுக்கிலும் ஒரு கல்லை நட்டு, அதுக்கு சந்தனம், குங்குமம், மாலை போட்டு, கற்பூர ஆரத்தி காட்டினால், அறிவுள்ள யாருமே அதில் தெய்வம் இல்லை என்றுதான் சொல்லுவார்கள். கோயிலுக்குப் போய் 1008 மந்திரங்களை சொல்லுகிறவர்கள், செய்கின்ற அக்கிர அட்டூழியங்களைப் பார்த்துட்டு தெய்வமே இல்லை என்றும் சொல்கிறார்கள். தெய்வத்துக்கு கண் இருந்தால் இவர்கள் செய்கிற பாபங்களை பார்த்திட்டு சும்மா இருக்குமா என்று கேட்கிறார்கள். தெய்வம் என்று ஒன்று இருந்தால் எனக்கு ஏன் இத்தனை கஷ்டம், துன்பம், நோய் நொடிகள்? அந்த குழந்தை ஏன் ஊனமாப் பொறக்கணும்? அவ புருஷன் ஏன் சின்ன வயசுலேயே அகால மரணம் அடையணும்? சுனாமியில ஏன் இத்தனை பேரு சாகணும்? இதுனால எத்தனை பேர் அனாதை ஆகுறாங்க? ஆக்ஸிடெண்ட்ல ஏன் அத்தனை பேரு சாகணும்? என்றெல்லாம் கேட்கலாம். அந்த ஆதங்கத்தில் தெய்வமே இல்லைன்னும் சொல்லலாம்.

மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தேவன் சோதோம் கோமோராவை ஏன் அக்கினியினால் அழிச்சாரு? அங்கே பாவம் பெருகிப்போச்சு. ஜலப்பிரளயத்தினால இந்த உலகத்தையே அழிச்சாரு. ஏன்? ஜனங்களோட அக்கிரமம் அதிகமாகிடுச்சு. ஆனா அதில நீதியோட வாழ்ந்த நோவாவையும்,

அவன் குடும்பத்தாரை மாத்திரம் காப்பாத்தினாரு. எகிப்தின் பார்வோனையும், அவன் சேனைகள் அனைவரையுமே செங்கடலில் அழிச்சாரு. ஏன்? எத்தனை தடவை சொல்லியும், கஷ்டங்களை, உபத்திரவங்களை, நோய்களை கொடுத்தும், தலைச்சன் குழந்தைகளை அழிச்சும் அவன் மனம் திருந்தலை. ஆண்டவரோட வார்த்தைகளுக்கு கீழ்படியலை. அதுனால அழிச்சாரு. பாவம் செய்த சிலருக்கு உடனே தண்டனையை கொடுக்கிறார். சில பேரை விட்டுப் பிடிக்கிறாரு. சில பேரோட குடும்பத்தை, பிள்ளைகளை, பரம்பரையையே தண்டிக்கிறாரு. இது அத்தனைக்கும் மேலே கடைசியில நியாயத் தீர்ப்புன்னு ஒண்ணு இருக்கு. அவனவன் செய்த கிரியைகளுக்கு தக்க பலன் இருக்கு. ஒருத்தரும் தப்பிக்க முடியாது. அவர்களின் பூலோக கிரியைகளுக்கு ஏற்ப சொர்க்கம், நரகம்னு இருக்கு.

அப்படி யாருமே கெட்டுப் போகக்கூடாதே, நரகத்துக்கு போகக்கூடாதே, எல்லோரும் சொர்க்கம் போகணுமேங்கிறதுக்காகத்தான் இந்த கிறிஸ்தவங்க ஊர் ஊரா, கிராமம் கிராமமா, தெருத்தெருவா போயி "மனந்திரும்புங்க. பாவ விமோசனம் பெற இயேசுகிட்ட வாங்க"ன்னு போயி சொல்றாங்க. செய்த பாவங்களை இயேசு ஒருத்தராலதான் போக்க முடியும். ஏன்னா அவர் ஒருத்தர்தான் நம்முடைய பாவங்களுக்காக இரத்தம் சிந்தியவர். இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு இல்லைன்னு தாண்டிய மஹா பிரமாணம், ரிக்வேதம், பிரம்மசூத்திரம், சிவஞானபோதம், சாந்தோக்கிய உபநிஷத்து, புருஷ சூக்தம், பிருகதாரணிய உபநிஷத்து, சாதாதப வசனம் எல்லாமே சொல்லுது. ஆனா எந்த தெய்வம் இரத்தம் சிந்தி இருக்கு இயேசுவைத் தவிர? சிந்தித்து செயல்படுங்க. இது மத மாற்றமல்ல. மன மாற்றம். பாவ வாழ்க்கை, சிந்தனையிலிருந்து விடுதலை பெற. எதுக்காக இந்த மனமாற்றம்? நாமளும், நம்ம குடும்பத்தாரும் இப்போதும், எப்போதும் நல்லா இருக்கணும். இம்மையிலும், மறுமையிலும் சந்தோஷம், சமாதானத்தோட இருக்கணும். நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளணும் என்கிறதுக்காகத்தான். இப்போதே ஒரு முடிவு எடுங்க இவ்வளவு ஞானத்தோடு, அதிசயத்தோடு, அற்புதமாய் இந்த பிரபஞ்சத்தையும் படைத்து, அதை தன் பரிசுத்த வேதாகமத்தின் மூலமாக வெளிப்படுத்தியுள்ள அந்த பரமேஸ்வரனாகிய இயேசு உங்களுக்கு வேணுமா? வேண்டாமா? என்று. ஜீவனையும், மரணத்தையும் உங்களுக்கு முன்பாக வைக்கிறேன். நன்மையையும், தீமையையும், ஆசீர்வாதத்தையும், சாபத்தையும்,

சொர்க்கத்தையும், நரகத்தையும் உங்களுக்கு முன்பாக வைக்கிறேன். சாய்ஸ் இஸ் யுவர்ஸ்

அறிய முடியாத அதிசயம்

தேவனுடைய படைப்பின் இரகசியத்தை நாம் அறிவது கடினம். சந்திரனின் தூரத்தைக் கணக்கிட்டு அங்கு மனிதன் சென்று வந்தான். ஆனால் சமுத்திரத்தின் அதிசயங்களை அவனால் முழுவதுமாக ஆராய முடியவில்லை. பசிபிக் கடலில் மரியானா (Mariana) என்றழைக்கப்படும் பெரிய அகழி ஒன்றுள்ளது. இதுவே உலகத்திலுள்ள மிக ஆழமான பள்ளமாகும். இமயமலையை அதற்குள் நிறுத்தினால் இமயம் மூழ்கிவிடும் அளவு ஆழமானது என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

1960-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 23-ம் நாள் ஜாக்கிஸ் பிக்கார்டு (Jacques Piccard) என்ற ஆராய்ச்சியாளரும், டான் வால்ஷ் (Donwalsh) என்ற ஆராய்ச்சியாளரும் மரியானா அகழியைக் குறித்து ஆராயச் சென்றனர். அவர்கள் ஆய்வுக்குப் பயன்படுத்திய பேதிஸ் கோப்பி, டிரிஸ்டி (Trieste) 3½ அங்குலம் கனமுள்ள எஃகினால் செய்யப்பட்டிருந்தது. அது அதிக ஆழத்தில் ஏற்படும் அதிக அழுத்தத்தின் எதிர்ப்புச் சக்தியை தாங்கக் கூடியதாக அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் கருவி மரியானா அகழியின் அடிப்பாகத்தை அடைந்ததும் -38°F வெப்ப நிலையைக் காட்டிற்று.

அகழியின் ஆழத்திற்கு மனிதர்கள் சென்று ஆராய முடியாது. ஆராய்ச்சியாளர்களிடம் 3600 அடி ஆழம் சென்று ஆராயக்கூடிய கருவிகளும், மின் சாதனங்களும் இருப்பினும் அவைகளை அதற்கும் அடியில் அனுப்புவது இயலாது என்கிறார்கள். நீரோட்டங்கள் அதன் பாதையை மாற்றி விடும் என்கின்றனர்.

தேவனுடைய படைப்பின் மகிமையும், வல்லமையும் மனித ஞானத்திற்கு அப்பாற்பட்டது என்பதற்கு மரியானா அகழி உதாரணமாகத் திகழ்கிறது. இதுபோன்று இன்னும் எண்ணிமாளாத அற்புத அடையாளங்கள் தேவனுடைய சிருஷ்டிப்பில் இருக்கிறது. அப்பேர்ப்பட்ட தேவன் சொல்கிறார்: *"நானே வழியும், சத்தியமும், ஜீவனும்"* என்று. நித்திய ஜீவனைத்தரும் அந்த ஜீவாதிபதியை நாம் பற்றிப் பிடித்துக் கொள்ளாவிட்டால் நஷ்டம் யாருக்கு? நமக்கும், நமது பிள்ளைகளுக்கும்தானே?

விசித்திர உயிரினங்கள்

திருமறையில் இறைவன் படைப்பான ஆதாம், ஏவாள் வரலாற்றையும், அதே வேளையில் அறிவியலில் காணப்படும் டார்வின் பரிணாமக் கொள்கையையும் எப்படி நம்புவது என்று குழம்பிக் கிடக்கும் கிறிஸ்தவர்கள் உண்டு. அறிவியல் கருத்துக்கள் காலப்போக்கில் மாறக்கூடியன. புதிய கண்டுபிடிப்புக்கள் பழைய கொள்கைகளைப் பொய்யாக்குகின்றன. ஆனால் சத்திய வசனம் என்றென்றும் மாறாத உண்மையாக நிலைத்து நிற்கிறது.

பரிணாமக் கொள்கைகளுக்குச் சவாலாக உள்ள சில விசித்திர உயிரினங்களைப் பற்றி நாம் படிக்கும்போது மனிதர்கள் கண்டுபிடித்த பரிணாமக் கொள்கை அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்பதை அறிந்து கொள்ளலாம்.

கடலிலுள்ள முள்தோலிகள் (Echinodermata) பிரிவைச் சார்ந்த கடல் வெள்ளரி தன் உறுப்புக்களை எதிரிகள் தாக்கும்போது அதை அவைகளுக்கு உணவாக விட்டுவிட்டு தான் தப்பித்துக் கொள்ளுமாம். இவற்றின் உடல் கடலின் அடித்தளத்தில் கிடக்கும் வெள்ளரியை வடிவில் ஒத்திருக்குமாம். உடலின் முன் நுனியில் உணர்கொம்பும் (Antenna), வாயும் உள்ளன. குழல் கால்களின் உதவியால் இந்தப் பிராணி ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கும், செங்குத்தான பாறைகள் மேலும்கூட செல்லக்கூடியது.

தன் உடல் உறுப்புக்களை விட்டுச்சென்று தப்பிக்கக்கூடிய பிராணிகள் வெள்ளரியைப்போல பலவுண்டு. முதல் கடல் வெள்ளரி இத்தகைய தப்பித்துக் கொள்ளும் உபாயத்தையும், புது உறுப்புக்களை உருவாக்கிக் கொள்ளும் முறையையும் எப்படிக் கற்றுக் கொண்டது என்பதை பரிணாமக் கொள்கையால் விளக்க முடியாது. இது இறைவன் மட்டுமே அறிந்த படைப்பின் அதிசயமல்லவா?

இதுபோன்ற பல விசித்திர உயிரினங்களை உயிரியல் வல்லுநர்கள் எடுத்துக்காட்டக் கூடும். பரிணாமக் கொள்கையில் எவ்விதத் தொடர்புமற்ற உயிரினங்கள் உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. உலகத் தோற்றத்தின்போது இருந்த பல உயிரினங்கள் அழிவுற்றுள்ளன. குரங்கிலிருந்து மனிதன் தோன்றியதைப் போல ஏன் அந்த உயிரினங்களிலிருந்தும் ஓர் அறிவுள்ள ஜீவன் தோன்றியிருக்கக்கூடாது? குரங்கிற்குப் பொருந்தும் பரிணாமக் கொள்கை ஏன் யானையிலிருந்து ஓர் அறிவு ஜீவனை உலகிற்குத் தந்திருக்கக் கூடாது?

எப்பேர்ப்பட்ட மேதையாக இருந்தாலும், இறைவனுடைய வல்லமையை பற்றியும், அவருடைய சிருஷ்டிப்பைப் பற்றியும் பூரணமாக யாராலுமே புரிந்து கொள்ள முடியாது.

மண்ணின் மைந்தன் மனிதன்

"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதி.2:7) என்று மோசே திருமறையில் எழுதுகிறார். மோசேயைப் பற்றி திருமறையில் நாம் படிக்கும்போது மோசே எகிப்தியரின் கலைகளையெல்லாம் கற்றவர் என்றும் ஒரு இராஜகுமாரனைப்போல அரசனுக்கு வேண்டிய எல்லா விதமான கலைகளையும் அவர் கற்றிருந்தார் என்பதையும் காண்கிறோம். ஆனால் அவரின் எழுத்துக்களில் பூர்வீக எகிப்தியரின் நம்பிக்கைகள் எதுவும் பிரதிபலிக்கவில்லை. மாறாக புதிய விஞ்ஞானத்திற்கு ஏற்ப எழுதப்பட்டுள்ளதையே காண முடியும்.

பூமி தட்டையென்றும், அது நான்கு கல்தூண்கள்மீது வைக்கப்பட்டுள்ளது என்றும் பண்டைய எகிப்தியர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். இந்தப் பழங்கதைகளை எல்லாம் கற்றிருந்தும் மோசே இவைகளைப் பற்றி ஏன் எழுதவில்லை? திருமறை தேவனுடைய வசனமாக இருந்தது. மோசே தான் சுய சித்தமாக எதையும் எழுதாமல் தேவனுடைய வார்த்தைகளை மட்டுமே எழுதினார் என்பதையே இது காட்டுகிறது.

புகழ்பெற்ற வேதியியல் நிபுணர் டாக்டர் எட்வின் இ. சுலோசன் என்பவர் "திருமறையிலுள்ள குறைவற்ற அறிவியல் உண்மைகள் மிகவும் அதிசயப்படத்தக்கவையாகும். பூமியிலுள்ள மண்ணிலிருந்து மனிதன் உருவாக்கப்பட்டான் என்று முதல் ஆகமத்தில் எழுதப்பட்டுள்ளது. இது அறிவியலின்படியான உண்மையாகும். பூமியின் மண்ணில் 14 இரசாயனப் பொருள்கள் உள்ளன. அதே 14 இரசாயனப் பொருள்கள் மனிதனின் உடலிலும் உள்ளன" என்ற வியப்பான செய்தியைத் தெரிவித்தார். மிருகங்களின் உடலில் இந்த இரசாயனப் பொருள்கள் மாறுபடுகின்றன. மனித உடலில் காணப்படும் இந்த 14 இரசாயனப் பொருட்கள் குரங்கின் உடம்பில் இல்லை. பிறகு மனிதன் குரங்கிலிருந்து பிறந்தான் என்று கூறுவது எவ்வளவு நகைப்பிற்குரியது.

இந்த உண்மையை மோசேக்குப் போதித்தவர் யார்? நமது தேவனாகிய கர்த்தர் தாமே என்பதை மறுக்க முடியுமா? பூமியின்

படைப்பில் சமுத்திரத்தின் பரப்பளவு அதிகமாகவும், நிலத்தின் பரப்பளவு குறைவாகவும் இருப்பதைப் போலவே மனிதனின் உடலில் பெரும்பகுதி நீராகவே உள்ளது என்பதுவும் ஒரு அதிசயமான உண்மையாகும்

கேசேர் பட்டணம்

திருமறையில் கேசேர் என்ற நகரைப் பற்றிப் படிக்கிறோம். இந்த நகரை பார்வோன் மன்னன் சாலோமோனுக்குச் சீதனமாகக் கொடுத்தான் (1 இரா. 9:15, 16). கேசேர் நகரை பார்வோன் கைப்பற்றி அங்கு குடியிருந்த கானானியரைக் கொண்டு நகரை அக்கினியால் சுட்டெரித்து பின்பு புதிய நகரைக் கட்டி அதனை சாலோமோனுக்குச் சீதனமாகக் கொடுத்துள்ளான்.

புதைபொருள் ஆய்வாளரும் பேராசிரியருமான ஆர்.ஏ.எஸ். மக்கலிஸ்டார் (R.A.S. Macalister) இஸ்ரேல் நாட்டில் அழிவுற்றுக் காணப்பட்ட அந்த நகரைக் கண்டு பிடித்தார். அங்கு கிடைக்கப் பெற்ற ஒரு கற்பலகையில் ஒவ்வொரு மாதங்களுக்கு ஏற்ப அங்கு பயிரிடப்பட்ட பயிர்களின் பெயர்ப்பட்டியலைக் கண்டுபிடித்தார். அதில் ஒன்று சணல். அவர் கண்டுபிடித்தபோது அங்கு சணல் பயிரிடப்படாமலிருந்தது. அங்கு சணல் பயிரிடப்படக்கூடுமா என்றும் வினா எழும்பிற்று. ஆனால் இந்த ஆய்வின் பயனாக இன்று அந்த இடம் சணல் அதிகம் பயிரிடப்படும் ஒரு இடமாக மாறி உள்ளது.

மேய்ச்சல் நிலம் நிகேவ்

திருமறை என்றும் குறைவற்றதாய் இருக்கிறது. திருமறையில் காணப்படும் நிகேவ் என்ற பகுதி குடியேற்றம் இல்லாத இடமாக இருந்தது. ஆனால் ஆதியாகமத்தில் தந்தை ஆபிரகாம் தன் ஆட்டு மந்தைகளையும், எருது மாடுகளையும் மந்தை மந்தையாக இங்கு மேய்த்தான் என்று எழுதப்பட்டுள்ளது. வருடத்திற்கு 4 அங்குலம் தண்ணீர் மட்டுமே மழையாகப் பெய்யக்கூடிய இந்த இடத்தில் மேய்ச்சலுக்கு ஏற்றவிதமான தண்ணீர் எப்படிக் கிடைத்தது என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் வியந்தவண்ணமாக அங்குள்ள சிறு சிறு குன்றுகளை ஆராய்ந்தனர். அதில் இரண்டு அடி ஆழமுள்ள பள்ளங்கள் உள்ளதையும், அவைகள் நீரை ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைந்திருப்பதையும் கண்டுபிடித்தார்கள்.

1952-ஆம் ஆண்டு இஸ்ரேல் யுத்தம் நடந்தபோது யுத்த சாரணர் குழுவைச் சார்ந்த இளம் வாலிபர்களும், பெண்களும் இந்த நிகேவ்

பகுதியில் கூடாரம் போட்டுத் தங்கியிருந்தனர். அவர்கள் இந்தத் திருமறை உண்மையை மனதில் கொண்டு, மழைநீர் தேங்கக்கூடிய சிறு சிறு தேக்கங்களைக் கட்டினர். அவைகள் 65 ஏக்கர் நிலத்தில் 40 அணைகளாகக் கட்டப்பட்டன. அடுத்த மழைகாலத்தில் அங்கு செழிப்பான புல்வெளிகள் உருவாகியிருப்பதைக் கண்டனர். அவை 300 ஆடுகளுக்கு ஒரு வருடத்திற்குப் போதுமானவை என்றும் அறிந்தனர்.

ஈசாக்கின் தொட்டி

மற்றும் திருமறையில் "இந்தப்பகுதியில் ஈசாக்கு தொட்டி கட்டினான்" என்று படித்து, அதனைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அதன் பயனாக சுண்ணாம்புக் கல்லில் கட்டப்பட்ட 37 தொட்டிகளைக் கண்டுபிடித்தனர். ஒவ்வொன்றும் 20000 காலன் தண்ணீர் கொள்ளக்கூடியதாக இருந்தது. இதில் இப்பொழுது சேகரிக்கப்படும் நீர் ஆறு மைல் தூரம் வரையிலுள்ள ஆடுமாடுகளுக்குப் பயன்படுவதாக உள்ளது. பைபிளில் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொரு வார்த்தையும் சத்தியமானவைகள், ஆதாரப்பூர்வமானது, நிரூபிக்கப்பட்டவைகள். இது மனித கற்பனையில் எழுதப்பட்ட ஒரு புராணமோ, காப்பியமோ, கதையோ அல்ல.

நாடு காத்த திருமறை

1948-ஆம் ஆண்டு இஸ்ரேல் நாட்டிற்கும், சிரியாவிற்கும் போர் மூண்டது. சீரியர்கள் எந்தப்பக்கமாக இஸ்ரேலுக்குள் புகுவார்கள் என்ற வினா எழும்பிற்று. வேதப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கையில் ஜெனரல் யாதீன், சுமார் 2800 ஆண்டுகளுக்கு முன் சீரியர்களும், அர்மீனியர்களும் தமஸ்குவிலிருந்து இஸ்ரேலுக்குள் புகுந்து அதை மேற்கொள்ள முயன்றனர் என்பதைப் படித்தார். அவர்கள் 2800 ஆண்டுகளுக்கு முன்னர் தன் நாட்டிற்குள் புகுந்த வழியைக் கண்டுபிடித்து தன் படையை எதிர்க்கும்படி அங்கு நிறுத்தினார். திருமறை வழிகாட்டியபடியே சீரியர்கள் இஸ்ரேலுக்குள் புகுந்தனர். தோற்கடிக்கப்பட்டனர். தன் நாட்டைக் காக்க திருமறையே வழி காட்டியதாக ஜெனரல் ஈகாவேல் யாதீன் பின்பு கூறினார்.

ஆபிரகாம் நட்ட மரம்

ஒரு நாட்டின் செழுமைக்கு மரங்கள் இன்றியமையாதவைகள் என்று நாம் அறிவோம். இஸ்ரேல் நாடு உருவானதும் உலகமெங்குமிருந்து வந்த யூதர்கள் அங்கு வந்து சேர்ந்தனர்.

அழிவுற்றிருந்த அந்த நாட்டைக் காக்க மரங்களை நடத் திட்டமிட்டுச் செயல்பட்டனர். இஸ்ரேல் நாட்டின் நீர்வளம், தட்பவெப்ப நிலை இவற்றிற்கேற்ப எந்த மரத்தை எங்கு நட வேண்டும் என்று ஆராய முற்பட்டனர். பொறுப்பை ஏற்ற வனத்துறை அதிகாரி டாக்டர் ஜோசப் வெயிட்ஸ் திருமறையை நம்பும் கிறிஸ்தவர். அவர் வேதத்தை ஆராய்ந்து ஆபிரகாம் முதலில் நட்ட மரம் இற்றாமரிங்க மரம் என்று கண்டுபிடித்தார்.

டாக்டர் ஜோசப் வெயிட்ஸ் தலைமையில் பெயர்செபாவில் ஆபிரகாம் நட்ட அதே பகுதியில் இரண்டு மில்லியன் மரங்களை நடத் திட்டமிடப்பட்டது. அந்தப் பகுதியினை ஆராய்ந்தபோது, ஆறு அங்குலமே மழை பெய்யும் தெற்குப் பகுதியில் இற்றாமரிங்க மரங்கள் நிற்பதைக் கண்டனர். அவைகளில் ஒன்று ஆபிரகாம் காலத்தில் நடப்பட்ட மரம் என்று அங்குள்ளவர்கள் நம்பினர். அவர்கள் திட்டமிட்டபடியே மரங்கள் நடப்பட்டன. மரங்கள் நன்றாகச் செழித்து வளர்ந்தன. திருமறை மரம் நடுவதற்கும் வழிகாட்டி இருக்கிறது பார்த்தீர்களா?

எசேக்கியேல் தீர்க்கதரிசி சொன்ன "பாழாய்க் கிடந்த இந்த பூமி ஏதேன் தோட்டத்தைப் போலாயிற்று" என்ற தீர்க்கதரிசன உண்மை நிறைவேறிற்று வேத வசனங்கள் சத்தியமானவைகள். நித்தியமானவைகள். பைபிளை பற்றிப் பிடித்துக் கொண்டு நாமும் அதன்படி நடந்தால், நம் வாழ்க்கையும், நமது வாரிசுகளின் வாழ்க்கையும் செழிக்கும்.

சோதோம், கொமோரா

திருமறையில் சோதோம், கொமோரா என்ற இரு நகரங்களைப் பற்றிப் படிக்கிறோம். ஆதியாகமம் 14-ஆம் அதிகாரத்தில் நான்கு கிழக்கத்திய அரசர்கள் ஒன்று சேர்ந்து கூட்டணியாக இந்த சோதோம், கொமோரா நாடுகளின் அரசர்களுக்கு எதிராகப் போர் தொடுத்தனர் என்பதைக் காண்கிறோம்.

இந்த இரண்டு சமவெளி நகரங்களையும் கி.மு. 2000 ஆண்டுகள் அளவில் பாவச் செயல்களினிமித்தம் தேவன் அழித்ததாகச் சொல்லப்படுகிறது. இது ஒரு கற்பனையாகவோ உதாரணமாகவோ இருக்க முடியாது. ஏனெனில் இந்த இரு நகரங்களைக் குறித்து நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறும்பொழுது, இவற்றின் அழிவை நியாயத்தீர்ப்போடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

"லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து,

எல்லாரையும் அழித்துப் போட்டது. மனுஷ குமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்" என்று லூக்கா 17:29, 30 -ல் பார்க்கிறோம்.

இதன்மூலம் சோதோம், கொமோரா நகரங்கள் அழிக்கப்பட்டது உண்மை என்பதோடு அவை அக்கினியாலும், கந்தகத்தாலும் அழிக்கப்பட்டன என்பதையும் அறிகிறோம். இந்த இடங்கள் போரினாலோ, வெள்ளத்தினாலோ அழிக்கப்பட்டது என்று கூறியிருந்தால் வரலாற்று ஆசிரியர்கள் உடனே நம்பியிருப்பார்கள். ஆனால் அக்கினியாலும், கந்தகத்தாலும் அழிக்கப்பட்டது என்றவுடன் "இது கூடுமா?" என்ற கேள்வி எழுந்தது. அதற்கு விடைகாண விஞ்ஞானிகளும், அகழ்வாராய்ச்சி நிபுணர்களும் முயன்றனர்.

இராஸ்ட் (RAST), ஸ்காப் (SCHAUB) என்ற இரண்டு அறிஞர்கள் இந்த நகரங்களின் அழிவுப் பகுதியைத் தோண்டி எடுத்தனர். அகழ்வாராய்ச்சியின்போது கிடைக்கப்பெற்ற பொருள்களில் கந்தகம், உப்பு, நீலக்கீல் இவைகள் படிந்திருப்பதைக் கண்டனர். இதைக்குறித்து அவர்கள் மேலும் ஆராய்ந்து அதன் காரணத்தை அறிந்தனர். "இந்நகரங்கள் அக்கினியாலும், நிலநடுக்கத்தாலும் அழிக்கப்பட்டமை புவியியல் மற்றும் நிலவியல் அடிப்படையில் நிகழ்ந்திருக்கக்கூடியதே. சவக்கடலின் தென்கோடியில் கந்தகம், உப்பு ஆகியவை படிந்துள்ள நிலப்பகுதிகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அங்குள்ள பாறைகளில் கசிகிற எண்ணெயில் நிலக்கீலும் அதையொத்த பொருட்களும் கலந்திருப்பதைக் காண்கிறோம்" என்றனர்.

நிலச்சரிவின் காரணமாக மத்திய பகுதியிலிருந்த நிலக்கீல் எண்ணெய் பூமிக்குமேல் கொப்பளித்து, மேலே ஏறி, நெருப்புப் பற்றி, சிதறி விழுந்துள்ளது. இதில் கந்தகமும், உப்பும் கலந்து கொட்டின. இதை மெய்ப்பிக்கும் வகையில் பேராசிரியர்கள் கைல் (KYLE) அங்குள்ள குன்றுகளின் உச்சியில் உப்புப் படிவங்களை கண்டுபிடித்துள்ளார். பார்த்தீர்களா? பைபிளில் உள்ள எந்த ஒரு வார்த்தையையும் எவருமே மறுத்துச் சொல்ல முடியாத சத்தியங்களைக் கொண்டது. இதை இன்றைய விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன. அந்த வேதத்தை நாம் உதாசீனம் செய்யலாமா?

யோனாவின் வரலாறு

ஒரு மனிதன் மூன்று நாட்கள் மீனின் வயிற்றிலிருந்தான் என்ற நிகழ்ச்சி உண்மையாக இருக்க முடியுமா என்று வினா எழுப்புவோர்

பலர். அவர்களில் முக்கியமானவர்கள் நவீன வேதப் பண்டிதர்கள் (Modern Theologian) என்ற பெயரில் உலாவரும் அந்திக் கிறிஸ்துவின் இன்றைய சீடர்கள். தேவனைப் பற்றி அறிய ஞானம் வேண்டும். இந்த உலகப் பிரகாரமான புத்தியோடு அவற்றைப் பார்க்க இயலாது. அதனால்தான் சாலமோன் "ஞானத்தையும் புத்தியையும் தாரும்" என்று தேவனிடம் வேண்டினான்.

இப்பொழுது நம்முன் வைக்கப்பட்டிருக்கும் கேள்விகள் (1) யோனா வாழ்ந்தது உண்மையா? (2) அவன் மூன்று நாட்கள் இரவும், பகலும் ஒரு மீனின் வயிற்றிலிருக்க முடியுமா? என்பவைகளாகும். அவற்றிற்கு வரலாற்று அறிவியல் அடிப்படையில் விடை காண்போம்.

முதலாவதாக யோனாவைப் பற்றி 2 இராஜாக்கள் 14-ம் அதிகாரம் 25-ம் வசனத்தில் காண்கிறோம். *"காத்தேப்பேர் ஊரானாகிய அமித்தாய் என்னும் தீர்க்கதரிசியின் குமாரன் யோனா என்னும் தம்முடைய ஊழியக்காரனைக் கொண்டு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின்படியே அவன் ஆமாத்தின் எல்லை முதற்கொண்டு, சமபூமியின் கடல் மட்டுமுள்ள இஸ்ரவேலின் எல்லைகளைத் திரும்பச் சேர்த்துக் கொண்டான்".*

இராஜாக்கள் புத்தகத்திலுள்ள எல்லா நிகழ்ச்சிகளும் வரலாற்று ஆதாரங்கள் கொண்டதே. இதனால் ஆமித்தாய் என்ற தீர்க்கதரிசியின் மகன் யோனா சாத்தேப்பேர் என்னும் ஊரில் இருந்தான் என்பது ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும். யோனா அந்த நாளில ஒரு சாதாரண குடிமகனாக அல்ல ஒரு மன்னரின் தீர்க்கதரிசியின் மகனாகவும் பின்னர் யோனா இஸ்ரவேலரின் மன்னரான யோவாசின் குமாரன் யெரொபெயாம் என்பவன் அரசாண்ட காலத்தில் தீர்க்கதரிசனம் சொன்னான் என்பதையும் நாம் காண்கிறோம்.

இயேசு கிறிஸ்து யோனாவைக் குறித்து *"ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. யோனா இரவும் பகலும் மூன்று நாள் மீனின் வயிற்றில் இருந்ததைப் போல மனுஷ குமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்"* (மத்தேயு 12:39, 40) என்று சொல்வதைக் காண்கிறோம். யோனாவின் கதை ஒரு கற்பனை நிகழ்ச்சியாக இருப்பின் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அதைப் பற்றிக் கூறியிருக்க மாட்டார்.

மற்றும் புதைப்பொருள் ஆய்வின்போது காணப்பட்டவைகள் யோனா நினைவே என்ற பட்டணத்தில் ஊழியம் செய்ததை மெய்ப்பிக்கின்றன. இப்பொழுது இரண்டாவது கேள்விக்குப் பதில் காண்போம். யோனாவின் புத்தகத்தைப் படிக்கும்போது ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார் என்று காண்கிறோம். ஒரு மீன் ஒரு மனிதனை விழுங்க முடியுமா என்ற கேள்விக்கு இடமில்லை. ஒரு பெரிய மீன் என்று சொல்வதிலிருந்து அது சாதாரணமான மற்ற மீன்களைப் போல அல்ல என்பதையும், தேவனால் ஆயத்தப்படுத்தப்பட்ட பெரிய மீன் என்பதையும் அறிகிறோம். திருமறையின் மூலப்பாஷையான கிரேக்க மொழியில் "KETOS" என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. KETOS என்ற சொல்லுக்கு கடலில் வாழும் மிகப்பெரிய உயிரினம் என்று பொருள்படும்.

கடலில் வாழும் திமிங்கலம் (Whale), பெரிய சுறா (Shark), திமிங்கில சுறா (Whale Shark) என்று பல வகையான மீன்கள் பெரிய உருவமைப்புக் கொண்டவை என்றும், அவற்றின் வயிற்றில் ஒரு மனிதன் தாராளமாக இருக்கக்கூடும் என்றும் வல்லுநர்கள் சொல்லுகின்றனர். திமிங்கலம் பிடிக்கச் செல்பவர்கள், மிகக் கோபமாகத் தாக்கும் திமிங்கலத்திடமிருந்து தப்பிக்க பெரிய எண்ணெய் பீப்பாய்களைக் கடலில் தூக்கிப் போடுவார்களாம். அவை அவற்றை அப்படியே விழுங்கிவிடுமாம். இவைகளைப் பார்க்கும்போது ஒரு மனிதனை மீன் அல்லது திமிங்கலம் போன்ற பெரிய கடல்வாழ் உயிரினம் விழுங்குவது நிகழக்கூடிய ஒன்றே.

அடுத்த கேள்வி ஒரு மனிதன் ஒரு மீனின் வயிற்றில் மூன்று நாட்கள் உயிரோடிருக்க முடியுமா என்பதாகும். ஜேம்ஸ் பார்ட்லே (James Bartlay) என்ற மனிதர் 1895-ஆம் ஆண்டு ஒரு திமிங்கலத்தால் விழுங்கப்பட்டு மீண்டும் உயிருடன் கொண்டுவரப்பட்டார் என்ற வரலாற்று நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அவர் உடலிலுள்ள தோல் மட்டுமே திமிங்கலத்தின் வயிற்றிலுள்ள அமிலத்தினால் பாதிக்கப்பட்டிருந்ததாம்.

சவக்கடலில் மிதக்கும் எண்ணெய் யோனா கடலில் விழுந்த பகுதியிலும் மிதந்து வந்திருக்கக்கூடுமானால் யோனாவின் உடலில் அந்த எண்ணெய் பூசப்பட்டிருக்கும். இதனால் அவனது உடல் தண்ணீர், அமிலம் இவற்றால் பாதிக்கப்படாமலிருக்க ஏதுவுண்டு என்று நான் கருதுகிறேன். இன்றும் நீண்ட நேரம் நீச்சல் போட்டியில் பங்கு கொள்பவர்கள் ஒருவகை எண்ணெயை உடல்மீது பூசிக்கொள்வதை நாம் அறிவோம். யோனாவின் வாழ்க்கை ஒரு உண்மை வரலாறு என்பதில் ஐயமேயில்லை.

மீன் விழுங்கிய யோனா

ஆஸ்திரேலியாவில் சிட்னி கடற்கரையில் கூஜி கடல் பகுதியில் போர்ட் ஹொப்சன் என்பவர் படகில் போய்க்கொண்டிருக்கும்போது ஒரு சிறிய சுறாவை, பெரிய சுறா ஒன்று விழுங்குவதைக் கண்டார். உடனே அவரது சகோதரர் அந்தச் சுறாவைப் பிடித்து, அதை ஹொப்சனுக்கே கொடுத்து விட்டார்.

ஹொப்சன் மீன் பண்ணை வைத்திருப்பவர். அந்தச் சுறாவைத் தன் மீன் பண்ணையிலுள்ள பெரிய நீர்த்தொட்டியில் கொண்டு வந்துவிட்டு, அதைப் பார்த்துக் கொண்டிருந்தார். சுறா கோபமாகச் சுற்றிச் சுற்றி வந்து மிகவும் களைத்த நிலையில் தனது பெரிய வாயைத் திறந்து கக்கிற்று. இதை மக்கள் கூட்டம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

இராட்சசச் சுறாவின் வாயிலிருந்து குட்டிச் சுறாமீன்கள், மீன்கள், சிறு கடல்வாழ் பிராணிகள் இவைகளுடன் ஒரு மனிதக் கையும் வெளிவந்தது. எல்லோரும் திகைத்து நிற்கையில், போர்ட் ஹொப்சன் அந்த மனிதக் கையை அப்படியே வெளியே எடுத்துவிட்டார். அதன் மணிக்கட்டில் கயிறு ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய போலீசார் புலன் விசாரணை செய்து அது வெட்டி எடுக்கப்பட்ட கை, அதை சுறா விழுங்கியுள்ளது என்று கண்டுபிடித்தனர். அது ஜேம்ஸ் சிமித் என்பவனின் கை என்றும் கண்டுபிடிக்கப்பட்டது. சுறாமீன் விழுங்கிய கை, மீண்டும் வெளியே கக்கப்பட்டபொழுது, அதன்மேல் கட்டப்பட்ட கயிறுகூடப் பழுதடையாமலிருந்துள்ளது. அந்தக் கை பரிசோதனைக்கு அனுப்பப்படக்கூடிய நல்ல நிலையிலும், அது யாருடைய கை என்று கண்டுபிடிக்கக்கூடிய நிலையிலும் இருந்திருக்கிறது.

இந்த நிலையில் தேவ மைந்தன் யோனா மீனால் விழுங்கப்பட்டு மூன்று நாட்கள் கழித்து உயிருடன் வந்தான் என்பதை நடக்க முடியாததா? நடக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவே. அதுவும் தேவன் நினைத்தால் அவரால் கூடாத காரியம் என்ன இருக்க முடியும்? அது நிச்சயமாக நடக்கக்கூடியதே. (ஆதாரம்: முத்தாரம் 6.11.87 இதழ்).

நோவாவின் பேழை

திருமறையில் ஆதியாகமத்தில் உலகப் பெரு வெள்ளத்தைப் பற்றிப் படிக்கிறோம். இது பற்றிய குறிப்புகள் பல நாடுகளிலும் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. அகழ்வாராய்ச்சியின் மூலமும் இது உண்மை என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆதியாகமத்தில் தேவன் பேழை எவ்விதம் செய்யப்பட வேண்டும் என்றும், அதன் அளவு எவ்வளவாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அந்த அளவில் செய்யப்பட்ட பேழைக்குள் *"சகல மாம்சமான ஜீவன்களிலும் ஆணும் பெண்ணுமாக வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு உன்னுடன் உயிரோடே காக்கப்படுவதற்கு பேழைக்குள்ளே சேர்த்துக்கொள்"* என்று தேவன் கூறியபடி நோவா சேர்த்துக் கொண்டால் பேழையின் அளவு போதுமானதா என்ற ஐயம் எழும்பிற்று.

இதுபற்றி எழுதும் டாக்டர் ஹோவர்ட் ஆஸ்குட் என்ற உயிர் நூல் அறிஞர், அளவில் ஆட்டை விடப் பெரிதான நில வாழ் பாலூட்டிகள் பல்வேறு இனங்களின் எண்ணிக்கை அதிகப்பட்சம் 290 எனவும், எலியின் அளவிலிருந்து ஆட்டின் அளவு வரை உள்ள பாலூட்டிகளின் இனம் 757 எனவும், எலி, வௌவால் அளவிலுள்ளவைகள் 1359 இனங்கள் என்றும் கணக்கிட்டு அவைகளின் சராசரி அளவு ஒரு பூனையின் அளவே என்றும் கூறியுள்ளார். மற்றும் ஒரு பூனை இருப்பதற்கு 5 சதுர அடி அளவு போதுமானதென்றும், இந்த அளவில் கணக்கிடும்போது எல்லா பாலூட்டிகளும் ஒவ்வொரு இனத்திலும் ஆணும் பெண்ணுமாக தங்குவதற்கு 33750 சதுர அடியுள்ள அறையில் மூன்றில் இரு பகுதியே போதுமானது என்கிறார். மற்றும் 10,000 இனப்பறவைகள், 979 இன ஊர்வன, 1252 இனப் பல்லிகள் அந்த பேழைக்குள் வசதியாகத் தங்கியிருக்கக்கூடும் என்றும் கணக்கிட்டுள்ளார்.

மனிதனின் சிந்தனையை ஆட்டிப்படைக்கும் சாத்தான் திருமறையைப் பற்றிய சந்தேகங்களை உண்டு பண்ணி அவனது விசுவாசத்தைக் குறைக்கலாம். ஆனால் திருமறை ஒரு திருவெளிப்பாடு என்பதை மறந்துவிடக்கூடாது. *"ஆவிக்குரியவன் நிதானித்தறிகிறான்"* என்கிறது வேதம்.

நோவாவின் பேழை அளவு

"தேவன் நோவாவை நோக்கி நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு. அந்தப் பேழையிலே அறைகள் உண்டு பண்ணி, அதை உள்ளும் புறம்புமாகக் கீல் பூசு. நீ அதைப் பண்ண வேண்டிய விதம் என்னவென்றால், பேழையின் நீளம் முந்நூறு முழமும், அதின் அகலம் ஐம்பது முழமும், அதின் உயரம் முப்பது முழமுமாய் இருக்க வேண்டும்" ஆதியாகமம் 6:14, 15.

நோவாவின் பேழை ஒரு கற்பனைக் கதையென்றும் இந்த அளவில் ஒரு கப்பல் கட்டப்பட்டால் அது நீரில் மிதக்காது என்றும் கப்பல்

கட்டும் வல்லுனர்கள் சிலர் கருத்துத் தெரிவித்தனர். இது குறித்த விவாதம் எழுந்தபோது ஹாலந்து நாட்டைச் சேர்ந்த பீட்டர் ஜான்சன் (Peter Johnson) என்ற கப்பல் கட்டும் வல்லுனர் ஒரு கப்பலைக் கட்டினார். சாதாரணமாக ஒரு முழம் என்பது 1½ அடியை குறிக்கும். இதனை 17.5 அங்குலம் என்று கணக்கிடுகின்றனர். இதன்படி பேழையின் அளவு 437.5 அடி x 72.92 அடி x 43.75 அடியாகும். இந்தப் பேழையின் பரப்பளவு 95700 சதுர அடியாகும். பேழையின் கொள்ளளவு 1396000 கன அடியாகும். அதன் எடை சுமாராக 13960 டன் ஆகும்.

பீட்டர் ஜான்சன் கட்டிய கப்பல் நன்றாகத் தண்ணீரில் மிதந்து சென்றது. மேலும் இது எந்தச் சூழ்நிலையிலும், வேகமான அலைகள் ஏற்படினும் கவிழக் கூடாததாக இருந்ததைக் கண்டு வியந்தனர். கப்பல் கட்டும் வல்லுநர்கள் அதனைப் பார்வையிட்டு, இந்தக் கப்பல் மிகப்பெரிய பழுவைச் சுமக்கக் கூடியதாகவும், கவிழ்ந்து விழாதபடியும் இருக்கிறது என்று கருத்துத் தெரிவித்தனர். பழு ஏற்றிச் செல்லும் சரக்குக் கப்பல்களுக்கு இதுபோன்ற அளவு கப்பல்கள் மிகவும் சிறந்தது என்ற முடிவிற்கும் வந்தனர். பின்னர் இதன் அடிப்படையில் "ப்ளூட்டன் (Fleutan)" என்ற சரக்குக் கப்பல் கட்டப்பட்டது. இதன் வருடம் 1858. 1884-இல் "எட்டுரியா (Eturia)" என்ற கப்பல் இந்த அளவின் அடிப்படையில் ஆனால் இதனைவிடப் பெரிய சரக்குக் கப்பலாகக் கட்டப்பட்டது.

கப்பல் கட்டும் தொழிலுக்கும் நோவாவின் பேழை வழிகாட்டியாக இருந்தது வியப்புக்குரியதே. இப்படி ஒன்றா இரண்டா ஆண்டவரின் மகிமையை எடுத்துச் சொல்ல? நம் வாழ்நாள் முழுவதும் அதற்குப் போதாது.

மக்கபேயர் யுத்தம்

பாபிலோன் சிறையிருப்புக் காலத்திலிருந்து கிறிஸ்து பிறப்புக் காலம் வரைக்கும் உள்ள இடைக்காலச் சரித்திரம் வேத புத்தகத்தில் முழுவதுமாக இல்லை. இதுபற்றி எழுதப்பட்ட வரலாற்றுச் சான்றுகள் 1 மக்கபேயர், 2 மக்கபேயர் என்ற புத்தகங்களில் எழுதப்பட்டிருந்தன. அவைகள் தள்ளுபடி ஆகமத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மக்கபேயர் என்ற சொல் சம்மட்டியைக் குறிக்கிறது.

இந்த மக்கபேயர் யுத்தங்களைப் பற்றி லாரன்ஸ் இ. பிரவுன் (Lawrence E. Browne) என்பவர் "பாபிலோன் முதல் பெத்லகேம் வரை" (From Babylon to Bethlehem) என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார்.

பாபிலோன் சிறையிருப்புக் காலத்தில் பெர்சியர், கிரேக்கர், ரோமர் ஆகிய வெளிநாட்டவரின் ஆதிக்கம் கடுமையாக இருந்தது. அவர்கள் யூத சமயத்தை அழிக்க முற்பட்டனர். அவர்களில் கிரேக்க மன்னன் அந்தியாக்கஸ் (Antiochus) என்பவன் கிரேக்கப் பற்றும், அதன்பால் வெறியும் கொண்டவன். யூதக் கலாச்சாரத்தை அழித்து கிரேக்கப் பண்பாட்டைப் புகுத்த வேண்டும் என்று எருசலேம் நகருக்கு வந்தான். பரிசுத்த தேவாலயத்தில் ஒரு பலிபீடத்தைக் கட்டினான். கிரேக்கத் தெய்வமான சீயூஸ் (Zeus)-க்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான். பன்றியைப் பலியிட்டான். தேவாலயத்தில் ஆசாரியர்கள் தங்கும் அறையில் விபச்சாரம் செய்யச் செய்தான். அது விபச்சார விடுதியாக்கப்பட்டது.

யூதர்களை கிரேக்க தெய்வமான சீயூஸ்சுக்குப் பலியிடும்படி கட்டளையிட்டான். கிரேக்க தெய்வத்திற்குப் பலி செலுத்த ஒரு யூதன் சம்மதித்தான். கிரேக்க அதிகாரி ஒருவன் அந்த யூதனை பலிபீடத்தண்டை அழைத்து வந்தான். கிரேக்கர்கள் ஆரவாரம் செய்தனர். அங்கு நின்று கொண்டிருந்த மத்தத்தியாஸ் (Matiathias) என்ற யூதன் யூத வைராக்கியமுள்ளவன். திடீரென்று பாய்ந்து பலிகொடுக்க வந்த யூதனையே வெட்டி வீழ்த்தினான். அருகிலிருந்த கிரேக்க அதிகாரியையும் வெட்டி வீழ்த்திவிட்டு மக்களின் மத்தியில் ஓடி ஒழிந்து கொண்டான்.

அவனைப் பின்பற்றி வைராக்கியமுள்ள யூதர்கள் நாட்டைவிட்டுச் சென்றனர். ஆயிரக்கணக்கானோர் ஒன்றுகூடி ஒரு சேனையை உருவாக்கினர். தங்கள் யூத வைராக்கியத்தைக் காக்கப் போர் தொடுத்தனர். யுத்தம் ஆரம்பமாகியது. பாய்ந்து வந்த அவர்களை எதிர்க்க கிரேக்கர்களால் முடியவில்லை. யூதர்கள் வெற்றி பெற்றனர். இது சரித்திரம்.

"அவர்களுக்குப் பயப்படாதிருங்கள். நீங்கள் மகத்துவமும், பயங்கரமுமான ஆண்டவரை நினைத்து, உங்கள் சகோதரருக்காகவும், உங்கள் குமாரருக்காகவும், உங்கள் குமாரத்திக்காகவும், உங்கள் மனைவிகளுக்காகவும், உங்கள் வீடுகளுக்காகவும் யுத்தம் பண்ணுங்கள்" (நெகேமியா 4:14). ***"நம்முடைய தேவன் நமக்காக யுத்தம் பண்ணுவார்"*** என்று நெகேமியா கூறியது (நெகே.4:20) எவ்வளவு உண்மையானது பார்த்தீர்களா? அவரை நம்பும்போது அவர் நமக்காக யுத்தம் பண்ணுவார்.

எயிட்ஸ் - கொள்ளை நோய்

கடைசி கால வேதனைகளுக்கு ஆரம்பமாக நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இப்படியாகச் சொல்லுகிறார்: ***"ஜனத்துக்கு***

விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும். பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்" என்று (மத்.24:7)-ல் கூறப்பட்டுள்ளது. இதனை மெய்ப்பிக்கும் வகையில் நடக்கும் நிகழ்ச்சிகளை நாம் காண்கிறோம். அவற்றையெல்லாம் இங்கு எழுத இயலாது. கொள்ளை நோயை மட்டும் காண்போம்.

எயிட்ஸ் (Acquired Immune Deficiency Syndrome - AIDS) என்ற கொள்ளைநோய் உலகெங்கும் பரவலாகக் காணப்படுகிறது. தொற்று நோயான இந்நோய் முதலில் அமெரிக்க நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது. எங்கள் நாட்டில் இந்த நோய் இல்லை என்று இறுமாப்புக் கொண்ட நாடுகளும் இது தங்கள் நாட்டிலும் இருப்பதைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றனர். காரணம், இதனை ஒழிப்பது எளிதானதன்று. இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டிலும் இந்த நோய் இருக்கிறது என்பதை முதன் முதலில் 1988-ம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் கண்டுபிடித்தனர்.

இந்த நோய் மிக வேகமாக உலகமெங்கும் பரவி வருகிறது. அமெரிக்காவில் இந்த நோய் கண்டுபிடிக்கப்பட்டவுடன் இது ஒருவகை குரங்கின் மூலம் பரவியது என்றும், ஆண் புணர்ச்சி காரணமாக உருவானது என்றும் சொல்லப்பட்டது. ஆனால் இன்று இந்த நோய் உலகமெங்கும் காணப்படுகிறது. குறிப்பாக விலைமாதரிடம் அதிகம் காணப்படுகிறது. அமெரிக்காவில் 2 இலட்சத்திற்கும் அதிகமானவர்களும், ஆப்பிரிக்க நாடுகளில் மிக அதிக அளவும், மேற்கு ஜெர்மனியில் 70 சதவீத மக்களும் இந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று சொல்லப்படுகிறது.

பொதுவுடைமை நாடுகளான ரஷ்யா, ருமேனியா, பல்கேரியா, சீனா போன்ற நாடுகள் வழக்கம்போல் சிறிதளவும் தங்கள் உண்மை நிலையை வெளியிடாமல் மௌனம் சாதிக்கின்றன. பிரிட்டிஷ் வானொலி (BBC) செய்தி மருத்துவத்துறையின் தலைமை மருத்துவரான டாக்டர் ஸ்டீபன் ஹெட்ஜஸ் இந்த நோயின் பயங்கரத்தைப் பற்றி வானொலியில் பேசினார். எயிட்ஸ் வியாதியில் நிபுணரான டாக்டர் டோனிபின்சிவ் என்பவர் இதற்கு மருத்துவ ரீதியான தடுப்பு முறை இல்லை என்று கூறியுள்ளார்.

இந்தக் கொடிய நோயைப்பற்றி உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) எயிட்ஸ் கட்டுப்பாடுத்துறைத் தலைவர் யோனத்தான் மேன் என்பவர் இந்த நோய் உலகெங்கும் ஒரு கோடிக்கும் அதிகமானோரைப் பிடித்துள்ளது (1989-ல்) என்று கூறுகிறார். இவர்களில் மிகவும் மோசமான நிலையில் 44600 பேர்கள் 99

நாடுகளில் இருப்பதாக அறிவித்தார். இவை அவர்கள் அறிந்தவரையில் கொடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள். அவர்கள் அறிவித்ததைவிட இன்னும் அதிகமான பேரை இந்த நோய் பிடித்துள்ளது என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது. இது குறித்து நமது அரசு இந்தியாவின் எல்லா மொழிகளிலும் முன்னெச்சரிக்கை விளம்பரங்களைக் கொடுத்து வருகிறது.

இந்தக் கொள்ளை நோயைப் பற்றி வேதாகமம் 3000 ஆண்டுகளுக்கு முன்பே கூறியிருக்கிறது. வேசித்தனத்தால் ஏற்படும் இந்தக் கொள்ளை நோயைப் பற்றி எசேக்கியேல் தீர்க்கதரிசி எழுதியிருக்கிறார். வெளிப்படுத்தல் நூலில் யோவான் எழுதியிருக்கிறார். இவைகள் எல்லாம் கடைசிக்கால அறிகுறிகள்.

இதைப்பற்றி ஒன்று கூற ஆசைப்படுகிறேன். இந்த வியாதி மிக விரைவில் மிருகங்களையும் பாதிக்கும். இதன் மூலம் கோடிக்கணக்கான மிருக ஜீவன்கள் எயிட்ஸ் வியாதியினால் இறக்கும். இந்த உண்மையைப் பற்றிய செய்திகள் இதுவரை வரவில்லை என்றாலும், நிச்சயமாக மிக விரைவில் நீங்கள் அறிந்து கொள்வீர்கள். அப்பொழுது இதனை நினைவில் கொள்ளுங்கள். ஏனென்றால் கொள்ளை நோயினால் மிருக ஜீவன்களையும் அழிப்பேன் என்று தேவன் சொல்லிய திருமறைச் சொல் நிறைவேறியே தீரும், ஆமென்.

கடந்த வருடம் எத்தியோப்பியாவில் ஏற்பட்ட பஞ்சத்தைப் பற்றி எழுதாத உலக ஏடுகளே இல்லை. இவ்வளவு கொடிய பஞ்சத்தை உலகம் காணவில்லை என்றெல்லாம் விமர்சனம் செய்யப்பட்டதை நீங்கள் படித்திருப்பீர்கள். இது நடக்கும் என்று திருமறையில் முன்னமே கூறப்பட்டுள்ளதை நீங்கள் படித்திருந்தால், இது குறித்து ஆச்சரியப்பட்டிருக்கமாட்டீர்கள். எசேக்கியல் 29-ம் அதிகாரம், 8, 9, 10 வசனங்களைப் படித்துப் பாருங்கள்.

குடும்பக் கட்டுப்பாடு

திருமறையில் குடும்பக் கட்டுப்பாடு பற்றி குறிக்கப்பட்டுள்ளது என்றால் ஆச்சரியமாக உள்ளதல்லவா? ஒரு இடத்தில் "விதை அடிக்கப்பட்டவன்" என்று எழுதப்பட்டுள்ளது. திருமறை காலத்தில் குடும்பக் கட்டுப்பாடு என்பது தேவையற்றதாக இருந்தது. ஆனாலும் சமூக விரோதிகளுக்கு குடும்பக் கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ளது. *"விதையடிக்கப்பட்டவனும், கோசமறுக்கப்பட்டவனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது"* (உபாகமம் 23:1). இதன் முன் பகுதி மற்றும்

பிற்பகுதியைப் படிக்கும்போது குற்றவாளிகள் விதையடிக்கப்பட்டனர் என்று அறிய முடிகிறது.

இது மக்கள் தொகையைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செய்யப்படாவிட்டாலும், சமூக விரோதிகளின் வம்சம் வளரக்கூடாது என்ற எண்ணத்தில் செய்யப்பட்டது என்பதை புரிந்து கொள்ளக்கூடும்.

இதன் மூலம் ஒரு மனிதனுடைய குண இயல்புகள் தலைமுறை தலைமுறையாக வரக்கூடியது என்பதை அவர்கள் அறிந்துள்ளனர் என்பதையும், ஒரு குற்றவாளியின் பரம்பரை வளர்ந்துவிடக்கூடாது என்று இம்முறையைக் கையாண்டனர் என்றும் அறிய முடிகிறது.

மனிதனும் ஆவியும்

"சகல பிராணிகளின் ஜீவனும், மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையிலிருக்கிறது" யோபு 12:10. *"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணிலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்"* ஆதியாகமம் 2:7.

உலகில் தேவன் படைத்த உயிரினங்களில் மனிதன் மட்டுமே ஆத்துமாவை உடையவன் என்றும் மற்ற உயிர்கள் எல்லாம் ஜீவனை மட்டும் உடையன என்றும் வேதம் தெளிவாக நமக்குப் போதிக்கிறது. மனிதன் மட்டுமே ஆத்துமாவை ஆதாயப்படுத்திக் கொள்ள முடியும். படைத்திட்ட இறைவனைத் துதிக்க முடியும். மனிதனின் படைப்பு ஒரு உன்னதப் படைப்பு, தெய்வீக சாயல் இல்லையா? அல்லேலூயா?

ஜீவாத்துமாவை உடைய மனிதன் தன் ஆத்துமாவை ஆதாயப்படுத்தத் தவறினால் அவன் நிலை மிகவும் பயங்கரமான ஒன்றாகும். இதனைப் பற்றி நான் இங்கு விரிவாக எழுத இயலாது. திருமறை நமக்குக் காட்டும் அறிவியல் உண்மைகளை மட்டும் எடுத்துக் காட்டுவதே இந்தச் சிறிய புத்தகத்தின் நோக்கம். *"சகல பிராணிகளின் ஜீவனும், மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கைகளிலிருக்கிறது"* என்று யோபுவின் புத்தகத்தில் படிக்கிறோம். *"மாம்சமான சகல மனுஷரின் ஆவி"* என்று எழுதப்பட்டுள்ளவைகளைக் காண வேண்டும். அப்படியானால் மாம்சமற்ற மனுஷரின் ஆவி என்று ஒன்று உண்டா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். திருமறையில் ஒவ்வொரு எழுத்தும், வார்த்தையும் சத்தியமானது.

உலகில் மாம்சமற்ற மனுஷரின் ஆவிகள் உண்டு. நாம் ஜெபிக்கும்போது சில ஆவிகள் நான் தற்கொலை செய்து கொண்டவன், கொலை செய்யப்பட்டவன், விபத்தில் இறந்தவன் என்றெல்லாம் அவைகள் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். அவைகளும் உலகில் உலாவிக் கொண்டிருக்கின்றன. தேவனால் குறிக்கப்பட்ட காலம் வரும்வரை அவைகள் உலகில் உலாவுகின்றன. ஒருமுறை ராஜா தேசிங்கு காலத்தில் உயிர் பிரிந்த ஒரு வீரனின் ஆவி செஞ்சி கோட்டையிலிருந்து அனுமன் சிலையிலிருந்து அங்கு உல்லாசப் பயணம் சென்ற மாணவிகளைப் பிடித்து பின்பு விரட்டப்பட்டதாக நான் கேள்விப்பட்டுள்ளேன்.

மயக்க மருந்து

"அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரையடைந்தான். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து அந்த இடத்தைச் சதைகளினால் அடைத்தார்" (ஆதியாகமம் 2:21).

உலகில் முதல் முதலாக செய்யப்பட்ட பெரிய அறுவை சிகிச்சை (Surgery) தேவன் ஆதாமுக்குச் செய்ததுதான். மிகப்பண்டைய நாட்கள் முதல் உலக நாடுகளில் குறிப்பாக கிரேக்க, ரோம், சீனா போன்ற நாடுகளில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு வந்துள்ளதை காண்கிறோம். குழந்தைப் பேற்றின்போது குழந்தைகளை தாய் வயிற்றிலிருந்து அறுவைச் சிகிச்சையின் மூலம் எடுக்கப்பட்ட நிகழ்ச்சிகூட வரலாற்றில் உண்டு. ஆனால் அறுவைச் சிகிச்சை செய்த மருத்துவர்கள் சிறந்த மருத்துவர்களாக இருந்தும் மயக்க மருந்திட்டு பின்னர் நோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்யும் விதத்தை அறியாதிருந்தனர். அறுவைச் சிகிச்சையின்போது நோயாளியை மேசையில் கட்டி, சிலர் கை, கால்களை இறுக்கிப் பிடித்துக் கொள்ள மருத்துவர் அறுவைச் சிகிச்சையைச் செய்வர்.

ஸ்காட்லாந்து தேசத்தைச் சேர்ந்த ஜேம்ஸ் சிம்சன் (James Simson) 1811-ஆம் ஆண்டு பிறந்தவர். சிறந்த கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த இவர், கிறிஸ்துவுக்குள் வளர்க்கப்பட்டார். சிறுவயது முதலே திருமறையை நன்கு படித்து விசுவாசத்தில் வளர்ந்தவர். இவர் எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் மருத்தவ பேராசிரியராகப் பணியாற்றி வந்தார். மருத்துவத்தில் தனிச் சிறப்புற்று விளங்கினார். ***"தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரையடைந்தான். அவர் அவன்***

விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தை சதைகளினால் அடைத்தார்" (பிளாஸ்டிக் சர்ஜரியும் தேவன் தான் முதலில் செய்துள்ளார்) என்ற வேத வசனங்கள் இவரைச் சிந்திக்க வைத்தன.

இதனை அடிப்படையாகக் கொண்டு இவர் பல ஆராய்ச்சிகளைச் செய்தார். அதன் பலனாக 1847-ம் ஆண்டு குளோரோஃபார்ம் (Chloroform) என்ற மயக்க மருந்து இவரால் கண்டுபிடிக்கப்பட்டது. அன்று தேவன் ஆதாம் வலியின்றி இருக்க அயர்ந்த நித்திரையை உண்டு பண்ணினார். இன்று சாத்தான் நம்மில் மிகப்பலர் திருமறையின் உண்மைகளைக் கண்டுகொள்ளாமலிருக்க அயர்ந்த நித்திரையை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறான். சத்திய வசனம் சத்தியமானது.

உயிர்நூல் அறிஞர் பவுல்

உயிர் நூலில் "தொடர்பு கோட்பாடு" (Continuity Theory) என்று ஒரு கோட்பாடு உண்டு. இது இருபதாம் நூற்றாண்டில் தோன்றியதாகும். இதன்படி உடலிலுள்ள செல்களின் அமைப்பில் தொடர்பு ஒற்றுமை உண்டு என்பதே இந்தத் தொடர்பு கோட்பாடாகும். ஆனால் இந்தத் தொடர்பு கோட்பாடு தவறு என்றும், உடலில் உள்ள செல்களில் பொதுவான ஒற்றுமை இருப்பினும் இவைகள் மாறுபட்டன என்றும், அவைகளை எவ்விதம் கண்டுகொள்வது என்றும் உயிர்நூல் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதன் மூலம் ஒரு மனிதனின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட செல் அல்லது மிருகத்தின் உடலிலுள்ள செல் இவற்றின் தன்மையிலிருந்து அது மிருகத்தினுடையதா அல்லது மனிதனுக்குரியதா என்று கண்டுபிடிக்க இயலும். இவைகள் ஒவ்வொரு மிருகத்திற்கும், பறவைக்கும், கடல்வாழ் பிராணிகளுக்கும் மாறுபடுகிறது. இந்த உண்மையை விஞ்ஞானிகள் 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் கண்டுபிடித்தார்கள்.

ஆனால் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே பவுல் இப்படியாக எழுதியுள்ளார்: *"எல்லா மாம்சமும் ஒரேவிதமான மாம்சமல்ல. மனுஷனுடைய மாம்சம் வேறே, மிருகங்களுடைய மாம்சம் வேறே. மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளின் மாம்சம் வேறே"* என்று எழுதியுள்ளார்.

இதனை ஏற்கும் உலகம், டார்வின் கொள்கையை எப்படி ஏற்க முடியும்? டார்வின் கொள்கை உண்மையாயிருக்குமானால்

குரங்கின் உடலிலுள்ள செல்லும், மனிதனின் உடலிலுள்ள செல்லும் ஒன்றாகவே இருக்க வேண்டுமே. மனித இரத்தம் குரங்கின் இரத்தத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. மனித இரத்தத்திற்கும், பன்றியின் இரத்தத்திற்கும் தொடர்பு அதிகமாக உள்ளது என்று கண்டு பிடித்திருக்கின்றனர். தாய்ப்பாலுக்கும், கழுதையின் பாலுக்கும்தான் ஒற்றுமை அதிகம் இருப்பதாக கண்டுபிடித்திருக்கின்றனர்.

வேதம் உண்மையானது. அறிவுடையோர் ஏற்றுக் கொள்ளக்கூடியது.

உயிர் இரத்தத்திலிருக்கிறது

மனிதனுடைய உயிர் எங்குள்ளது என்ற கேள்விக்கு இதயத்திலுள்ளது, தலையிலுள்ளது என்றெல்லாம் எண்ணி வந்த காலமுண்டு. ஆனால் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே *"மாம்சத்தின் உயிர் இரத்தத்திலிருக்கிறது"* (லேவியராகமம் 17:11) என்று திருமறையில் எழுதப்பட்டுள்ளது.

1628-ஆம் ஆண்டு டாக்டர் வில்லியம் ஹார்வே என்ற அறிவியல் மேதை மனித உடலின் இரத்தச் சுழற்சி முறையைக் கண்டுபிடித்தார். இவரே மனிதன் உயிர்வாழ இரத்த ஓட்டம் அவசியம் என்பதை அறிவித்தார்.

160 பவுண்டு எடையுள்ள மனிதனின் உடலில் எட்டில் இரண்டு பாகம் அதாவது 20 பவுண்டு எடை இரத்தம் இருக்கிறது. ஒரே நேரத்தில் மூன்றில் ஒரு பாகம் இரத்தம் சிந்தப்பட்டால் ஒருவன் மரணமடைகிறான். ஆனால் அந்த இரத்தத்தை உடல் ஒரே வாரத்தில் உற்பத்தி செய்து கொள்ள முடியும். இரத்தத்திலுள்ள மஞ்சள் நிற திரவத்தில் சிகப்பு மற்றும் வெள்ளை அணுக்கள் (Cells) உள்ளன. சிகப்பு அணுக்கள் அதிகமாக இருப்பதால் இரத்தம் சிவப்பு நிறமாகத் தெரிகிறது. ஒரு சொட்டு இரத்தத்தில் 5,000,000 சிகப்பு அணுக்களும், 7000 வெள்ளை அணுக்களும் இருக்கின்றன. சிகப்பு அணுக்கள் உடலின் திசுக்கள் உயிர்வாழத் தேவையான ஆக்ஸிஜனை எடுத்துச் செல்கின்றன. வெள்ளை அணுக்கள் காவல்காரர்களைபோல் இடைவிடாமல் உழைத்து, நோய்க் கிருமிகளுடன் போராடி நம்மைக் காத்து வருகிறது. இவ்வாறு நாம் உயிர்வாழ இரத்தம் அவசியமாயிருக்கிறது.

பற்களுள்ள இயந்திரம்

"இதோ போரடிக்கிறதற்கு நான் உன்னைப் புதிதும் கூர்மையுமான பற்களுள்ள யந்திரமாக்குகிறேன். நீ

மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய்" (ஏசாயா 41:15). திருமறையில் மேற்கண்ட வசனம் ஒரு உதாரணமாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க இது வழிவகுத்தது என்று கூறினால் அது மிகையல்ல.

எந்த இயந்திரமும் பயன்படுத்தப்படாத காலத்தில் வாழ்ந்தவர் ஏசாயா. அவர் வாழ்ந்த கி.மு. எட்டாம் நூற்றாண்டில் போரடிப்பதற்கு ஓர் இயந்திரம் உருவாக்கப்படும் என்றே எவரும் எண்ணியிருக்க மாட்டார்கள். இத்தகைய நிலையில் ஓர் இயந்திரத்தைப் பற்றிய எடுத்துக்காட்டைக் கூறுகிறார் ஏசாயா.

மலைகள் மேலும், கரடுமுரடான இடங்களில் செல்லவும் "டாங்க்" போன்ற பெரும் இராணுவ பீரங்கிகள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் சக்கரங்கள் பற்களைப் போல அமைந்துள்ளன. *"புதிதும், கூர்மையுமான பற்களுள்ள இயந்திரமாக்குகிறேன். நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய்"* என்று கூறப்பட்டுள்ளதுபோல பற்சக்கரங்களில் செல்லும் புல்டோசர் போன்ற இயந்திரங்கள் பாறைகளை நொறுக்கித் தூள் தூளாக்குவதை இன்று காண்கிறோம் அல்லவா? திருமறை வசனங்கள் பல புதிய, நவீன கண்டுபிடிப்புகளுக்கு வித்திட்டுள்ளன என்பதை யாராவது மறுக்க முடியுமா?

மழை

"அவர் நீர்த்துளிகளை அணுவைப்போல ஏறப்பண்ணுகிறார். அவைகள் மேகத்திலிருந்து மழையாய்ச் சொரிகிறது" (யோபு 36:27).

யோபுவின் புத்தகம் கி.மு. 1000-இல் எழுதப்பட்டது என்று வேத வித்தகர்கள் கருதுகின்றனர். அந்தக் காலத்தில் மழையைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் நிலவி வந்தன. இறைவன் வானத்திலிருந்து தண்ணீரைக் கொட்டுவதாகக் கூட நம்பி வந்தனர்.

நீராவியே மேகமாக மேலே சென்று மழையாகப் பொழிகிறது என்ற அறிவியல் உண்மையை அந்தக் காலத்திலேயே யோபுவுக்குப் போதித்தது யார்? வேதாகமம் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் எழுதப்பட்ட நூல் என்பதை நிரூபிக்க இன்னும் எத்தனை ஆதாரங்களைக் கூற வேண்டும்? வேதம், வேதாந்தம் என்று அழைக்கப்படுகின்ற வேறு எந்த நூலிலாவது இப்படி இத்தனை விஞ்ஞான, மெய்ஞ்ஞான, அறிவியல், உயிரியல், விண்ணியல், மண்ணியல் உண்மைகளைக் காண முடியுமா?

நிலக்கரியும், யோபுவும்

"பூமியின்மேல் ஆகாரம் விளையும். அதன் கீழிடங்களிலிருக்கிறவைகளோ, அக்கினியால் மாறினது போலிருக்கும். அதின் கல்லுகளில் இந்திரநீலம் விளையும்" (யோபு 28:5).

இன்று உலகம் முழுவதும் நிலக்கரியின் பயனை அறிந்திருக்கிறது. வளரும் உலகத்திற்கு நிலக்கரி இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. உலகிலுள்ள நிலக்கரியின் அளவு 7 டிரில்லியன் டன் என்று விஞ்ஞானிகள் கணக்கிட்டு இருக்கின்றனர்.

உலகத்திலுள்ள நிலக்கரி எல்லாம் ஒரே காலத்தில் உண்டாக்கப்பட்டிருக்கக்கூடும் என்பது விஞ்ஞானிகளின் கணிப்பு. இது உண்டாக பல மில்லியன் வருடங்கள் ஆகியிருக்கக்கூடும் என்று விஞ்ஞானிகள் கருதியது மாறி, இப்பொழுது சில ஆயிரம் ஆண்டுகளே போதுமானது என்று சொல்கிறார்கள். உடா (UTAH) பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஜார்ஜ் ஆர். ஹில் (Dr. George R. Hill) என்ற விஞ்ஞானி இதனை தமது ஆராய்ச்சிகளின் மூலம் நிரூபித்து, நிலக்கரி உருவாக குறுகிய காலம் போதுமானது என்ற உண்மையை வெளியிட்டிருக்கிறார்.

இதுபோன்ற பல ஆராய்ச்சிகளில் உலகம் தோன்றி பல மில்லியன் ஆண்டுகள் ஆகிவிட்டன என்ற கருத்து மறுக்கப்பட்டது மட்டுமின்றி, உலகம் ஒருமுறை நீரால் அழிக்கப்பட்டது என்பதற்கும் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நோவாவின் காலத்துப் பெரு வெள்ளத்தால் மரங்கள் ஒரு சில இடங்களில் அடித்துச் செல்லப்பட்டு அங்கு நிலக்கரி உண்டாயிருக்க வேண்டும் என்ற உண்மையை நிரூபிக்கத் தக்க வகையில் நிலக்கரி உண்டாக வெறும் வெப்பமும், அழுத்தமும் மட்டும் போதாது, அவைகளுக்குத் தண்ணீரும் தேவை என்ற உண்மை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நிலக்கரி உருவாகிய கதை எப்படியாக இருந்தாலும் தேவ மனிதன் யோபு நமக்கு வெப்பத்தைத் தரும் நிலக்கரி பூமியின்கீழ் இருப்பதை *"அக்கினியால் மாறினது போலிருக்கும்"* என்று வெளிப்படுத்தியுள்ளார். மற்றும் நிலக்கரியிலிருந்து கிடைக்கும் வைரத்தையும் நமக்கு முன் அறிவித்தார். *"அதின் கல்லுகளில் இந்திர நீலம் விளையும்"* என்று சொல்கிறார். அது எத்தனை உண்மையானது அல்லேலூயா.

உறைந்த மழையின் பண்டகசாலை

முதலாம் உலகப் போர்க்காலத்தில் இங்கிலாந்து வெடிமருந்துகள்

உலகின் பல பாகங்களுக்கு அனுப்பப்பட வேண்டியிருந்தது. கடல் அரசி என்று பெயர் பெற்ற பிரிட்டிஷ் கடல் படை, போரில் முக்கிய பங்கு வகித்தது. உலகின் பல பாகங்களிலும் இங்கிலாந்து தேச காலனி நாடுகள் இருந்ததால் எல்லா காலனி நாடுகளையும் பாதுகாக்க வேண்டியிருந்தது.

கப்பல் மூலம் வெகுதூரம் அனுப்பப்படும் வெடி மருந்துகள் காற்றில் மாறுதலடைந்து காளான் பூத்துக் கெட்டுவிடும். இதனால் பெரும் நஷ்டம் ஏற்பட்டதோடு, குறித்த காலத்தில் வெடிமருந்து போய்ச் சேரமுடியாத நிலையும் ஏற்பட்டது. இதனை அறிந்த அரசி நாட்டின் அறிவியல் மேதைகள் கூட்டத்தில் இவ்விதம் கெடாமலிருக்க புதிய முறையினைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அந்தக் கூட்டத்திலிருந்த கிறிஸ்தவ விசுவாசியான அறிவியல் மேதை ஒருவர் எழுத்து அதற்கான வழி திருமறையில் கூறப்பட்டுள்ளது என்று சொல்லி அந்த வசனங்களை வாசித்தார்:

"உறைந்த மழையின் பண்டகசாலைக்குள் நீ பிரவேசித்தாயோ? கல் மழையிருக்கிற பண்டகசாலைகளைப் பார்த்தாயோ? ஆபத்து வருங்காலத்திலும், கலகமும், யுத்தமும் வருங்காலத்திலும் பிரயோகிக்கும்படி நான் அவைகளை வைத்து வைத்திருக்கிறேன்" (யோபு 38:22, 23). கல் மழையான ஐஸ் கட்டியைக் கொண்டுள்ள குளிர்பதனப்பெட்டி உருவாக இந்த வசனமே வழி வகுத்தது

ஈயத்தால் ஆன எழுத்துக்கள்

முதல் முதலாக அச்சு எழுத்துக்கள் சீனர்களால் தயாரிக்கப்பட்டன என்று நம்பப்படுகிறது. மரம், களிமண் இவைகளால் செய்யப்பட்ட எழுத்துக்களை தொடக்க காலத்தில் சீனர்கள் பயன்படுத்தினர். மோசேயின் காலத்தில் எகிப்து, சுமேரியா ஆகிய நாடுகளில் களிமண் பலகையில் எழுதப்பட்ட எழுத்துக்கள் தொன்மையானவை. ஆனால் அதனை அச்சு எழுத்துக்களாகச் செய்து நகல் எடுக்க முயன்றவர்கள் சீனர்களே. இவ்வகையில் தயாரிக்கப்பட்ட உலகின் முதல் அச்சுப் புத்தகம் கி.பி. 868 மே 11-ஆம் நாள் சீனாவைச் சேர்ந்த வாங்சிக் என்பவரால் வெளியிடப்பட்டது. "கிரக சூத்ரா" என்பது இந்த நூலின் பெயர்.

கி.பி.360-1278-க்கு இடைப்பட்ட காலத்தில் சீனாவில் அச்சுக்கலை வளர்ச்சி பெற்றது. 1301-இல் சீனாவில பீசெங் என்பவர் வெள்ளைக் களிமண்ணால் செய்யப்பட்ட எழுத்துக்களை இரும்புச் சட்டத்துக்குள் அடுக்கி அச்செழுத்துக்களைத் தயாரித்தார். பின்பு இவரே தகர

எழுத்துக்களைத் தயார் செய்தார். 1314-இல் வாங்-சாங் என்பவர் மரக்கட்டையில் எழுத்துக்களையும், ஜெனரல் இ என்பவர் உலோகத்தாலான எழுத்துக்களையும் உருவாக்கினர். கி.பி. 1457-இல் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த கூட்டன்பர்க் என்பவர் அச்சுப் பொறியைக் கண்டுபிடித்தார். இவர் ஈய எழுத்துக்களைப் பயன்படுத்தினார்.

20-ஆம் நூற்றாண்டில் அச்சுக்கலை மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது. பலவிதமான அச்சு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் அவை எல்லாவற்றிலும் எழுத்துக்கள் ஈய எழுத்துக்களே திருமறையில் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பே அச்சு எழுத்துக்கள் ஈயத்தில் செய்யப்பட வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது. *"....நான் இப்பொழுது சொல்லும் வார்த்தைகள் எழுதப்பட்டால் நலமாயிருக்கும். அவைகள் ஒரு புஸ்தகத்தில் வரையப்பட்டு அல்லது என்றைக்கும் நிலைக்க அவைகள் கருங்கல்லிலே உளிவெட்டாகவும், ஈய எழுத்தாகவும் பதித்தால் நலமாயிருக்கும்"* (யோபு 19:24).

சாலொமோன் ராஜாவின் தூண்கள்

"அந்தத் தூண்களோவெனில், ஒவ்வொரு தூணும் பதினெட்டு முழ உயரமாயிருந்தது. பன்னிரண்டு முழ நூல் அதைச் சுற்றும். நாலு விரற்கடை அதின் கனம். உள்ளே குழாயாயிருந்தது" (எரேமியா 52:21).

சாலோமோன் ராஜாவின் அரண்மனைத் தூண் உள்ளே குழாயாயிருந்தது என்று சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட அந்தத் தூணைப் பற்றி எரேமியா தீர்க்கதரிசி எழுதுகிறார்.

முன்பு குழாய்களைவிட முழுவதும் இரும்பாலான தூண்களே சக்தி வாய்ந்தவை என்று எண்ணியிருந்தனர். ஆனால் தற்கால கண்டுபிடிப்பின்படி குழாய்களே மிகக் குறைந்த மூலப்பொருளில் பலமுள்ளவைகளாக இருக்கின்றன என்று கட்டிடப் பொறியாளர்கள் கருதுகின்றனர். குழாய் தூண்கள் (Tuber Tresses) மூலம் பெரிய அறைகளை அமைக்கின்றனர். இவை பல வகைகளில் பயனுடையனவாக உள்ளன. குறைந்த மூலப்பொருளை உடையது. எடை குறைவானது. பலம் பொருந்தியது. இவைகளைக் கையாள்வது எளிது.

இந்த உண்மையை 20-ஆம் நூற்றாண்டு கட்டிட பொறியாளர்கள் கண்டுபிடித்தனர். ஆனால் இதனைச் சுமார் 3000

ஆண்டுகளுக்கு முன்பே தெய்வீக ஞானமுடைய மன்னன் சாலொமோன் கண்டுபிடித்து தன் அரண்மனையைக் கட்டியிருந்தான் என்று திருமறை நமக்குக் காட்டுகிறது.

போலீஸ் நாய்

இங்கிலாந்து நாட்டில் ஜான் லைட் என்ற பெயருடைய போலீஸ் அதிகாரி ஒருவர் இருந்தார். காவல் துறையில் கண்டிப்பான சிறந்த அதிகாரி என்று பெயர் பெற்ற அவர் வீட்டில் மூன்று அல்சேஷன் நாய்கள் இருந்தன. ஒருநாள் அவர் வீட்டில் திருடர்கள் புகுந்து பொருட்களைக் களவாடிச் சென்றுவிட்டனர். திறமைமிக்க காவல் துறை அதிகாரியின் வீட்டில் திருட்டுப் போனதைக் குறித்து ஊர் முழுவதும் பேச்சாக இருந்தது. காவல்துறையும் அதிர்ச்சியடைந்தது.

உள்ளூர் தினத்தாள்கள் "போலீஸ் அதிகாரியின் வீட்டில் திருட்டு" என்று கொட்டை எழுத்துக்களில் செய்தி வெளியிட்டன. அத்தோடு அவர் வீட்டில் மூன்று அல்சேஷன் நாய்கள் இருக்கின்றன என்ற செய்தியையும் வெளியிட்டிருந்தன. ஜான் லைட் திருட்டுப்போன பொருட்களைப் பற்றி அதிகம் கவலைப்படவில்லை. அவரது திறமைக்குச் சவால் விடும் வகையில் இது நடந்துள்ளது என்பதே அவருக்கு வருத்தத்தைத் தந்தது.

ஜான்லைட் பக்தியுள்ள நல்ல கிறிஸ்தவர். ஜெபத்தோட தன் வேதத்தைத் திறந்து படித்தார். அவர் கண்களில் *"பிடித்து இழுக்க நாய்களும்"* (எரேமியா 15:3) என்ற வசனம் பட்டது. தேவன் தனக்கு இதை வெளிப்படுத்தியுள்ளார் என்று எண்ணிச் சிந்தித்தார். திருட்டுப்போன அறைகளில் தன் நாய்களை விட்டார். அவை மோப்பம் பிடித்து அதே ஊரிலிருந்த திருடனைக் கண்டுபிடித்து இழுத்து வந்தன. அதன்பிறகே இங்கிலாந்து காவல் துறையில் போலீஸ் நாய்களைப் பழக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் உலகம் முழுவதும் பரவியது.

நகர முன்னேற்றம்

இன்றைய சமூக முன்னேற்றத்திற்கும், நாகரீக வளர்ச்சிக்கும் ஏற்ப பல திட்டங்களை அரசு எடுத்து வருகிறது. அவைகளுக்கு திருமறை எவ்வாறு வழிகாட்டியாக இருந்துள்ளது என்பதை இங்கு காண்போம்.

நகரத்திற்குத் தண்ணீர்

"இந்த எசேக்கியா கீயோன் என்னும் ஆற்றிலே அணை கட்டி, அதன் தண்ணீரை மேற்கேயிருந்து தாழத் தாவீதின்

நகரத்திற்கு நேராகத் திருப்பினான்" - 2 நாளாகமம் 32:30.

"எசேக்கியாவின் மற்ற வர்த்தமானங்களும் அவனுடைய எல்லா வல்லமையும், அவன் ஒரு குளத்தையும் சாலகத்தையும் உண்டாக்கினதினாலே தண்ணீரை நகரத்திற்குள்ளே வரப்பண்ணினதும்..." என்று 2 இராஜாக்கள் 20:20-ல் எழுதப்பட்டுள்ளது.

ஆலயத்தில் பண்டகசாலை

அந்தக் காலத்தில் மன்னர்கள் ஆலயங்களின் பண்டகச் சாலையில் உணவுப்பொருள்களைச் சேர்த்து வைத்தனர். பஞ்சகாலங்களில் அவை மக்களுக்குப் பயன்பட்டது. இதற்கு ஆதாரமாக இருந்தது திருமறையே.

"அப்பொழுது எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்தில் பண்டக சாலைகளை ஆயத்தப்படுத்தச் சொன்னான்" - 2 நாளாகமம் 31:11.

வண்ணார்துறை

இன்று துணி துவைப்பதற்காக வண்ணார் துறைகளை அரசு கட்டித் தருவதை பல பெரிய நகரங்களில் காண்கிறோம். கி.மு. 744-ம் ஆண்டிலேயே மத்திய ஆசியாவில் இவ்விதமான வண்ணார்துறைகள் இருந்ததை திருமறை மூலம் அறிகிறோம்.

"அவன் வந்து வண்ணார்துறையின் வழியிலுள்ள மேல்குளத்துச் சாலகத்தண்டையிலே நின்றான்" - ஏசாயா 36:2.

குளிர் வசதி வீடுகள்

வெப்பம் தெரியாத வகையில் குளிர்ச்சியான அறை வீடுகளை அன்று கட்டியிருந்தனர். இன்றைய (Air Conditioned) வீடுகளுக்கு அவைகள் முன்னோடியாக இருந்தன என்பதை நியாயாதிபதிகள் 3:20, எரேமியா 36:22 பகுதிகளில் காண்கிறோம்.

துணைப்பதிவாளர் அலுவலகம்

ஒரு நிலம் அல்லது வீட்டை வாங்கும்போது துணைப்பதிவாளர் அலுவலகத்தில் (Sub Registrar Office) பத்திரம் எழுதி அதில் இரண்டு சாட்சிகளின் கையெழுத்தை வாங்குவதும், அலுவலக முத்திரையிடுவதும் இன்று இருந்துவரும் வழக்கமாகும். அதை அன்றே நடைமுறைப்படுத்தப்பட்டதை திருமறையில் காண முடியும்.

"...நிலங்கள் விலைக்கிரயமாகக் கொள்ளப்படுகிற பத்திரங்களில் கையெழுத்துப் போடுகிறதும், முத்திரையிடுகிறதும் அதற்குச் சாட்சி வைக்கிறதும் உண்டாயிருக்கும்" (ஏசாயா 32:44).

முடிவு வேண்டுகோள்

எனது அன்பான, உடன்பிறவாத சகோதர, சகோதரிகளே,

வணக்கம். தேவ ஆவியினால் அருளப்பட்ட வேதாகமத்துக்கு ஈடு இணையாக இந்த உலகில் வேறு எந்த ஒரு வேதமும் கிடையாது. இல்லை, இருக்கவும் முடியாது என்று ஆணித்தரமாக நிரூபிக்கப்படும் அளவுக்கு அது தன்னிகரற்று உயர்ந்ததாக, சிறப்புடையதாக, போற்றுதலுக்குரியதாக, ஆதாரப்பூர்வமாக இருக்கிறது என்பதையும், பல மேதைகளாலும், விஞ்ஞானிகளாலும், ஆய்வாளர்களாலும் எள்ளளவு சந்தேகத்திற்கும் இடமின்றி அது நிரூபிக்கப்பட்ட ஒரு ஒப்பற்ற, நிகரற்ற வேதமாக இருக்கிறது என்றும், தேசத்தலைவர்கள் முதல் உலகத்தின் அனைத்து மக்களாலும் விரும்பி போற்றுதலுக்குரிய, கடைப்பிடித்தலுக்குரிய ஒரு புத்தகமாக அது இருக்கிறது என்பதையும் இதுவரை கண்டீர்கள்.

இந்த வேதம் அறிவியலுக்கும், உயிரியலுக்கும், உடலியலுக்கும், விண்ணியலுக்கும், மண்ணியலுக்கும், பொறியியலுக்கும், விஞ்ஞானத்திற்கும், மெய்ஞானத்திற்கும் மற்றும் அநேகம் புதிய கண்டுபிடிப்புக்களுக்கும் எப்படி ஆதாரமாக இருக்கிறது என்றும் பார்த்தீர்கள்.

பரிசுத்த வேதாகமத்தில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உரைக்கப்பட்ட அனைத்து தீர்க்கதரிசனங்களும் அப்படியே வார்த்தைக்கு வார்த்தை எல்லாமே நிறைவேறி இருக்கிறது என்பதை ஆதாரப்பூர்வமாக நிரூபித்து "நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்" என்ற ஒரு நூலும் கூடிய விரைவிலேயே மூன்று பாகங்களாக வெளிவரவிருக்கிறது. திருமறையில் இதுவரை நடந்தது மாத்திரமல்ல, இனி இவ்வுலகில் என்ன என்ன நடக்கப் போகிறது என்றும் தெள்ளத் தெளிவாக தீர்க்கதரிசனமாக அதில் எழுதப்பட்டுள்ளது.

வரும் உபத்திரவங்களுக்கு தப்பித்துக் கொள்ள நாம் செய்ய வேண்டியதையும் அதில் எழுதப்பட்டுள்ளது. வேதத்தில் உள்ள வார்த்தைகள் அனைத்துமே சத்திய வார்த்தைகள். தெய்வ வார்த்தைகள், தீர்க்கதரிசன வார்த்தைகள், தேவ எச்சரிப்பின்

வார்த்தைகள். நம்மைப் பண்படுத்தும், புடமிடும், பக்குவப்படுத்தும், பரிசுத்தப்படுத்தும், பரலோக பிரஜைகளாக மாற்றும் ஜீவ வார்த்தைகள் அவைகள். செய்த பாவங்களுக்கு விமோசனம் பெற்று, இந்த பூமியில் வாழும் நாட்களில் எல்லாம் நம்மை நீதியோடும், நேர்மையோடும், உண்மையோடும், உத்தமத்தோடும், உயர்ந்த பண்புகளோடும், சந்தோஷத்தோடும், சமாதானத்தோடும் வாழ வழி காட்டும் ஓர் அற நெறி நூல் அது. இந்த வாழ்க்கைக்குப் பிறகு இருக்கிற மறுமையிலும் நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொண்டு, நம்மைப் படைத்த அந்த பரமேஸ்வரனோடு என்றென்றைக்கும் சதா காலங்களிலும், யுகயுகமாக வாழ வழி காட்டும் சத்திய வேதப்புத்தகம் வேதாகமம்.

அப்பேர்ப்பட்ட ஒப்பற்ற பெரிய பொக்கிஷமாகிய இந்த அரிய வேதத்தை, அறிய வேண்டிய வேதத்தை இந்த உலகில் உள்ள ஒவ்வொருவருமே படித்து உய்ய வேண்டும். இது கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே உரிய வேதமல்ல. இப்பூவுலகில் பிறந்த அனைவருக்குமே உரிய வேதம் இது.

சாமுவேல் தீர்க்கதரிசி II சாமுவேல் 7:22-ல் "நாங்கள் எங்கள் காதுகளினாலே கேட்ட சகல காரியங்களின்படியும் தேவரீருக்கு நிகரானவர் இல்லை. உம்மைத்தவிர வேறே தேவன் இல்லை" என்று சொன்னபடியே, இந்த ஈடு இணையற்ற பரிசுத்த வேதாகமத்தை மனுக்குலத்திற்கு அளித்த அந்த நிகரில்லாத தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக பற்றிப் பிடித்துக்கொண்டு, விலையேறப்பட்ட பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பை பெற்றுக்கொண்டு உலகில் உள்ள ஒவ்வொருவரும் பரலோக பிரஜைகளாக மாற வேண்டும் என்பதே என் ஏக்கமெல்லாம்.

கர்த்தரின் அளவில்லாத கிருபை இந்த நூலை வாசிக்கும் அனைவரோடும், இந்த நூலை வாங்கி இயேசுவை அறியாத மக்களுக்கு கொடுத்து, அவர்களுக்காக அனுதினமும் ஜெபித்து, கிறிஸ்துவண்டை வழி நடத்துகின்ற ஒவ்வொருவரோடும் என்றென்றைக்கும் சதா காலங்களிலும் நிலைத்திருப்பதாக

மனுக்குலத்தின் மீட்புக்காக மன்றாடும்

உங்கள் சகோதரன்

எஸ். தாயப்பன்

இந்த புத்தகம் எழுத ஆதாரமாக இருந்தவைகள்:

1. டாக்டர் ஜஸ்டின் பிரபாகர் எழுதிய "அரியவேதம்" என்ற நூல்.

2. திரு.எஸ்.டி. அம்ரோஸ் அவர்கள் எழுதிய "இஸ்ரவேல்" என்ற நூல்.

3. உறையூர் வளவன் என்ற ஆல்பிரட் ஸ்டீபன் அவர்கள் எழுதிய "திருமறை காட்டும் அறிவியல் உண்மைகள்"

4. பரிசுத்த வேதாகமம்.

5. "Facts about Israel" - Published by the Division of Information, Ministry of Foreign Affairs, Jerusalem.

6. Ungers Bible Dictionary, Moody Press, Chicago.

7. Halley's Bible Hand Book - Zardervan Publishing House, Grand Rapich, Michigan.

8. Evidence that demands a verdict by Josh Dowell.

9. Story of the Bible world by Nelson Beechev Keys.

10. The proof of the Bible by HW Armstrong, Ambasador College.

11. Revival in Israel by - Ray Brubaker.

12. Smith's Bible Dictionary Published by A.J. Helman Co.

13. Compton's pictured Encyclopedia.

14. Encyclopedia of the World by Meedonald Educational Ltd.,

15. The Last word on the Middle East by Devek Prince - Kingsway Publishers, East Bournve

16. Israel - A Secret documentary by Lance Lambert -0 Tyndale Harse Publishers Inc.

17. Storm over Israel by GR Crow - Gospel Literature Service.

18. Wings over Zion by Watson Goodman, WM Press Inc., New Paris.

19. The Gates of Jerusalem by Theidove H. Epp - Back to the Bible Broadcast.

20. Those irrepressible Jews! by David C. Egner, Radio Bible Class.

21. The International Standard Bible Encyclopedia, WM. B. Eerdmans Publishing Co., Grand Rapids, Mich, USA.

22. Nav and the near future prophesied by Don.E. Stanby.

23. தினமணி, இண்டியன் எக்ஸ்பிரஸ் நாளேடுகளில் வெளியான செய்திகளும், கட்டுரைகளும்.

எஸ். தாயப்பன் எழுதிய இதர நூல்கள்.

இவைகள் எதைப் பற்றி?

1. என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (தமிழ், ஆங்கிலம், கன்னடம், மலையாளம், தெலுங்கு, VCD - (தமிழ், ஹிந்தி, கன்னடம்)

58 வயசு வரைக்கும் தீவிர வைராக்கியமுள்ள இந்துவாக, விக்கிரஹ ஆராதனைக்காரனாக, இயேசு எதிர்ப்பாளனாக இருந்த சகோ. தாயப்பனையும், அவரின் மனைவி, மகன் கார்த்திக், சக்தி, மகள் காயத்ரி அனைவரையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எப்படித் தொட்டார், 18 ஆபரேஷன்கள் செய்து கோமா நிலைக்குப் போயி அமெரிக்கன் டாக்டர்களே கை விட்டு, கருணைக் கொலை செய்து விடுங்கள் என்று சொல்லப்பட்ட நிலையிலே இயேசு கிறிஸ்து கார்த்திக்கை எப்படி அற்புதமாக காப்பாற்றினார் என எழுதப்பட்டுள்ள சாட்சி நூல். இது படிக்கின்ற எவருடைய உள்ளத்தையும் உலுக்கி எடுக்கும். தமிழில் 2 லட்சத்திற்கும் அதிகமாக விற்கப்பட்ட ஒரே நூல்.

2. சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள் (தமிழ்).

இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வம். தெய்வம் என்ற சொல்லப்படுகின்ற மற்ற எதுவும் தெய்வம் இல்லை. விக்கிரஹங்களில் தெய்வம் இல்லை என அழுத்தம் திருத்தமாக ஆதாரத்தோடு அகத்திய முனிவர், அழுகுனிச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், கோரக்க முனிவர், பட்டிணத்து அடிகள், திருமூலர், சிவவாக்கியர், போகர், கழாய்ச் சித்தர், வால்மீகர் போன்ற பல சித்தர்களின் பாடல்களின் விளக்கத்தோடு எழுதப்பட்ட நூல். 85000 பிரதிகளுக்கு மேல் விற்பனையில்

3. பாவத்தின் சம்பளம் நரகம் (தமிழ்)

திருடினாத் தான் பாவம், கொலை, கொள்ளை, ஒரு பெண்ணை கற்பழித்தல் போன்றவைகள் தான் பாவம் என்று இல்லை. ஆண்டவரின் பார்வையில் எதெல்லாம் பாவமாக இருக்கிறது, கிறிஸ்தவர்களாக இருந்து கொண்டே, கோயில், மசூதிக்கு போய்க் கொண்டே எத்தனை பாவங்களை அன்றாடம் நாம் செய்து கொண்டு இருக்கிறோம் என்றும், நியாயத் தீர்ப்பு, பரலோகம், நரகம் எப்படி இருக்கும் எனவும் பல சாட்சிகளோடு எழுதப்பட்ட ஒரு நூல் இது. படிப்பவர் எவரையும் பாவம் செய்ய தயங்க வைக்கும் என்பது திண்ணம். 80,000 பிரதிகள் விற்பனையில். இது ஆங்கிலத்திலும் தயாராகிக் கொண்டு இருக்கிறது)

4. இயேசு கிறிஸ்து உன்னோடு பேசுகிறார் (தமிழ்)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மோடு பேசினால் என்ன பேசுவார்? நாம்

எப்படி இருக்கணும்னு அவர் விரும்புகிறார்? அவருடைய வருகைக்கு நாம ஆயத்தமா இருக்கிறோமா? மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துகிறோமா? என நம்மை நாமே ஒருமுறை அலசி ஆராய்ந்து பார்த்து ஆவியில் நம்மை அனலாக மாற்றும் என்பது உறுதி. ஒவ்வொரு கிறிஸ்தவர் கையிலும் இருக்க வேண்டிய ஒரு நூல். 40000 பிரதிகள் விற்பனையில்.

5. இந்தியாவுக்கு இயேசு கிறிஸ்து தேவை ஏன்? (தமிழ்)

இயேசு கிறிஸ்து கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல, இந்தியர்களுக்கு மாத்திரமல்ல, இந்த உலகத்தில் பிறந்த அனைவருக்குமே அவர் தேவை என்பதை பல ஆதாரங்களோடு, சாட்சிகளோடு, மறுக்க முடியாத பல உண்மை நிகழ்வுகளோடு எழுதப்பட்டுள்ள நூல். திருக்குறள் ஒரு கிறிஸ்துவ நூல். விவேகானந்தர் இயேசுவைப் பற்றி என்ன சொல்லி இருக்கிறார், கர்நாடகாவிலும், ஒரிசாவிலும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடந்த பல வன்முறைச் சம்பவங்களை கண்ட பிறகும், கிறிஸ்தவர்கள் ஏன் தற்கொலைப் படையாக மாறி பழிக்குப் பழி வாங்கவில்லை என்பதை அற்புதமாக விளக்கும் ஒரு நூல் இது. 30,000 பிரதிகள் விற்பனையில்.

6. என் ஊழியக்காரனே...!? (தமிழ்)

ஆண்டவருக்கு ஊழியம் செய்கின்ற ஊழியக்காரர்கள் எப்படி இருக்க வேண்டும், சபைகள் ஏன் நிரம்பி வழியவில்லை, சுவிசேஷம் ஏன் பரவவில்லை, இந்தியா கர்த்தருக்கு சொந்தமாக என்ன செய்ய வேண்டும் என பல அரிய அறிவுரைகளைத் தரும் நூல் இது. ஒவ்வொரு ஊழியக்காரரையும் தம்மையும், ஊழியத்தையும் தற்பரிசோதனை செய்து கொள்ளத் தூண்டும் ஒரு நூல் இது. 20,000 பிரதிகள் விற்பனையில்.

7. கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்கு பதில் (தமிழ்)

முழுக்கு ஞானஸ்நானம் அவசியமா? அந்நிய பாஷை பேசினால் தான் அபிஷேகம் இருக்குன்னு அர்த்தமா? அபிஷேகம் இல்லாம பரலோகம் போக முடியாதா? மேரி, பவுல், அந்தோணியாருக்கு நம் பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் இருக்கா? கிறிஸ்தவர்கள் காதலிக்கலாமா? ஊழியம் செய்ய விசேஷித்த அழைப்பு, அபிஷேகம் தேவையா? போன்ற 100 எடக்கு மடக்கான கேள்விகளுக்கு பதில் தரும் நூல். கிறிஸ்தவர்களின் பல சந்தேகங்களை தீர்க்கும் நூல் இது. 10,000 பிரதிகள் விற்பனையில்.

8. சைவமும், வைணவமும் கிறிஸ்தவமே (தமிழ்)

ஆச்சரியமாக இருக்கிறதா? கி.பி 49ல் இந்தியாவிற்கு வந்த புனித தோமாவின் நற்செய்தியினால் உண்டானதே சைவமும், வைணமும் என ஆதாரங்களோடு, சரித்திர வரலாறுகளோடு படிப்பவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் நூல் இது.

சைவர்களும், வைணவர்களும் பின்பற்றுவது தோமாவின் ஆதி இந்திய கிறிஸ்தவக் கொள்கைகளையே என கிறிஸ்தவர்களும் புரிந்து கொண்டு அதை இந்துக்களுக்கும் புரிய வைத்து 'நீங்க கிறிஸ்தவ கொள்கைகளை உங்கள் பாணியில் ஏற்றுக் கொண்டாலும், நீங்கள் ஆராதிப்பது ஒரு நிழலை மட்டுமே. ஒரு டுப்ளிகேட்டையே ஆராதிக்கிறீர்கள். ஒரிஜினல் இங்கே இருக்கிறது. இயேசுவின் மூலமே பூரண இரட்சிப்பு, நித்திய வாழ்க்கை, பாவ மன்னிப்பு, பரலோகம் கிடைக்கும்' என அவர்களுக்கு எளிதாக புரிய வைத்து அவர்களையும் இரட்சிப்பின் பாதையில் வழி நடத்த உதவும் ஒரு உன்னத நூல் இது. 10,000 பிரதிகள் விற்பனையில்.

9. எழுந்து கட்டுவோம் (VCD தமிழ்)

இயேசு கிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனுமே ஆண்டவருக்கு ஊழியம் செய்யணும், சுவிசேஷத்தை அறிவிக்கணும், கர்த்தர் செய்த நன்மைகளை சாட்சிகளாக புற ஜாதிகளிடம் கூற வேண்டும். சுவிசேஷம் பரவ, தேசம் சந்திக்கப்பட நாம் ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும் என வேதம் கூறுகிறது என்பதை மிகத் தெளிவாக சகோ.தாயப்பன் இந்த VCDயில் கூறியுள்ளார். கேட்கும் எவரையும் தட்டி எழுப்பும். அனல் மூட்டும். வாங்கி நீங்களும் பாருங்கள். மற்ற சபை மக்களுக்கும் கொடுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். 20,000 சீடிக்கள் விற்பனையில்.

10. அற்புத சுகமளிக்கும் வைத்தீஸ்வரர் இயேசு ! (தமிழ்)

ஆபரேஷன் செய்தாலும் செய்யாவிட்டாலும், கீமோதெராவி கொடுத்தாலும் கொடுக்கா விட்டாலும் சரி உயிர் வாழப் போவது இன்னும் சில மாதங்களே என்று டாக்டர்கள் சொன்ன போது 'எனக்கு கேன்சரா? நோ.. நான் இயேசுவின் பிள்ளை. இந்த சரீரம் கர்த்தருக்குரியது. இதில் கேன்சருக்கு அதிகாரம் இல்லை' என்று கூறி விசுவாசித்து, அற்புத சுகத்தைப் பெற்றுக் கொண்ட மிஸஸ் டோடி ஆஸ்டின் மற்றும் டாக்டர் தேவகலா அவர்களின் அருமையான சாட்சி அடங்கிய நூல். படிப்போரின் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணும் ஒரு அதி அற்புத சாட்சி. தெய்வீக சுகம் சம்பந்தப்பட்ட வேத வசனங்களை கொண்ட ஒரு நூல் இது. 5,000 பிரதிகள் விற்பனையில்

11. நீங்களே எனக்கு சாட்சிகள் (தமிழ்)

'உன்னை அதிசயங்களைக் காணப் பண்ணுவேன்' என்று வாக்குரைத்தவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. நம்மைப் பண்படுத்தும், பக்குவப்படுத்தும், பரிசுத்தப்படுத்தும், கரம் பிடித்து வழிநடத்தும் ஜீவனுள்ள தேவன் அவர். 'அவரை நோக்கிப் பார்த்த முகங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப் போனதில்லை' என்பதற்கு சாட்சியாக பல அனுபவங்களும் கேன்சர் வியாதியிலிருந்து அற்புத சுகத்தைப் பெற்றுக் கொண்ட பாஸ்டர் T.ஜார்ஜ் (மதுரை யாசுப்பா நகர் நித்ய ஜீவன் சபை) அவர்களின் மனைவி சுகிர்தா ஜார்ஜ் அவர்களின்

உயிர்த்துடிப்புள்ள சாட்சி அடங்கிய நூல் இது. வியாதியிலிருந்து அற்புத சுகத்தைப் பெற்றுக் கொள்ள வழி காட்டும் ஒரு அற்புத நூல் இது. படித்து விசுவாசியுங்கள். நீங்களும் உங்கள் வாழ்வில் அதிசயங்களைக் காண்பீர்கள். 5,000 பிரதிகள் விற்பனையில்.

12. இயேசுவின் கீழ்படிதலும் ஆதாமின் கீழ்படியாமையும் (தமிழ்)

ஆண்டவரோட வார்த்தைகளுக்கு கீழ்படிதல், அவரின் சித்தத்திற்கு கீழ்படிதல் ஆண்டவரின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள மிகவும் அவசியம். கீழ்படிந்தமையால் கிடைத்த ஆசீர்வாதங்களையும், கீழ்படியாமையால் விளைந்த தீமைகளையும் விளக்கும் ஒரு அருமையான நூல் இது. பாஸ்டர் எம். நித்யானந்த மங்களராஜ் எழுதியது. 5,000 பிரதிகள் விற்பனையில்.

13. உண்மையான கடவுள் யார்? (தமிழ்)

சித்தர்கள், ஞானிகள், தேவ மனிதர்களின் பார்வையில் யார் உண்மையான கடவுள் என அவர்களின் பாடல்களின் மூலமாகவும், அதற்கு ஒத்த பரிசுத்த வேதாகம வசனங்களின் மூலமாகவும் ஆணித்தரமாக எழுதப்பட்ட நூல் இது. புற ஜாதி மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க பெரிதும் உதவும்.

14. முக்திக்கு வழி கிறிஸ்தவமே (VCD - தமிழ்)

நாகர்கோவில் ஹெவன் டிவியில் நேருக்கு நேர் நிகழ்ச்சியில் சகோ. தாயப்பன் கொடுத்த நெத்தியடி செய்தி அடங்கிய VCD. புற ஜாதிகளை இரட்சிப்பின் பாதையில் வழி நடத்த உதவும் VCD

15. சைவமும் வைணமும் கிறிஸ்தவமே

(கதா காலட்சேபம் – ஆடியோ சீடியும் புத்தகமும்) கேட்கின்ற எவரையும் எளிதில் கவரும் வண்ணம் சத்தியத்தை கதாகாலட்சேப பாணியில் அறிவித்திருக்கும் புதிய முயற்சி. ஒரு தடவை கேட்டால் பல கேட்கத் தூண்டும் சீடி.

உங்கள் இனத்தார்,நண்பர்கள் நரகத்துக்கு போகக் கூடாதா?

மேலே குறிப்பிட்டுள்ள புத்தகங்கள், VCDயில் வரிசை எண் 4,6,7,9,12 தவிர மற்ற புத்தகங்கள், சீடிக்கள் எத்தனை வாங்க முடியுமோ வாங்கி ஜெபத்தோடு அவர்களுக்கு கொடுங்கள். அவர்கள் இரட்சிக்கப்படுவது உறுதி. எல்லா நூல்களும், VCDகளும் ஒவ்வொன்றும் ரூபாய் பத்து மட்டுமே. இந்த நூல்கள் கிடைக்கும் இடம் – எஸ். தாயப்பன், 12, ஜி.டி. நாயுடு தெரு, பாலாஜி அவென்யு – சேலையூர் போஸ்ட், சென்னை–600073. நேரிலும், D.D, M.O. அனுப்பியும் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியர் குறித்து...

துடிப்பும், வேகமும், விவேகமும், நாவன்மையும் உள்ள இவரைப் பார்த்தால் யாருமே இவருக்கு 68 வயது என்று நம்ப மாட்டார்கள். இந்திய விமானப்படையில் 26 ஆண்டுகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் பணியாற்றிய பின்பு, பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் ஒரு தொண்டு நிறுவனத்தில் 6 ஆண்டுகள் நிர்வாக அதிகாரியாகவும், பின்ன ஃபென்னர் இந்தியா கம்பெனியின் டெக்ஸ்டைல் டிவிசனுக்கு பெர்சனல் மேனேஜராகவும் 6 ஆண்டுகள் பணியாற்றியவர். நாடகம், கதாகாலட்சேபம், பல்கலை நிகழ்ச்சிகள், பாட்டு, டிவி சீரியல்கள் என கலைத்துறையில் வெற்றிக் கொடி நாட்டியவர். சினிமா நடிகர் டெல்லி கணேசை முதன்முதலாக டெல்லியில் நாடக மேடையில் அறிமுகப்படுத்தியவர். பியர்லெஸ்ஸில் தன்னுடைய மார்க்கெட்டிங் திறமையால் இன்ஸ்பெக்டர் பதவி வரை உயர்ந்தவர். இப்படி சகலகலா வல்லவரான இவர் ஒரு தீவிர, பக்தி வைராக்கியமுள்ள இந்துவாகவும், இயேசு எதிர்ப்பாளராகவும் இருந்தார். தேவன் இவர்களை தெரிந்து கொண்ட விதம், மற்றும் இவரின் தனிப்பட்ட, குடும்ப வாழ்க்கையில் இயே கிறிஸ்து செய்த எண்ணி மாளாத அற்புதங்களையும், நன்மைகளையும் சாட்சியாக பல பொதுக் கூட்டங்களிலும், 1500க்கும் மேற்பட்ட திருச்சபைகளிலும் கூறி வருகிறார். இவரின் சாட்சியும், செய்தியும், இவா எழுதிய சாட்சி புத்தகமும், மற்ற நூல்களும் எப்பேர் பட்ட கடின இருதயத்தையும் உடைப்பதாக, உயிர்ப்பிப்பதாக, அனல் மூட்டுவதாக, சபைகளை பலப்படுத்துவதாக, சபையோரை ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக மாற்றுகின்றது என்றால் அது மிகையல்ல. கர்த்தர் தமது நாம மகிமைக்கென்று இவரையும், இவரது குடும்பத்தாரையும் விசேஷமா தெரிந்து கொண்டுள்ளார்.

COSSMIC PRINTERS, CH - 5. 98400 79872, 2848 2